Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර
பக்கம் 24
ஜூலை 16 - 22, 2015
ரூபா 30.00


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY
முரசு 1127

# தெற்கு அரசியலில் திடீர் அதிர்வுகள்







"கட்சியின் பலம் என்பது எமது அர்ப்பணிப்பான உழைப்பும் மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்துச் செயற்படுவதும் சொல்வதைச் செய்து முடிப்பதும் நடைமுறைக்குச் சாத்தியமானவற்றை மக்களிடம் எடுத்துரைப்பதுமாகும். அத்துடன். நாங்கள் முன்கூட்டியே தீர்க்கதரிசனமாகச் சொன்ன பல விடயங்களே பின்னர் நடந்திருக்கின்றன."

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்

சிறப்புப் பேட்டி



## கிரீஸ் வாக்கெடுப்பு

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## பூஜை செய்யும் போது ஏன் மணி அடிக்கிறோம்?

ஆலயங்களிலோ அல்லது நமது வீடுகளிலோ பூஜை செய்யும்போது மணி அடிப்பது என்ற வழ[illegible] உள்ளது. பூஜையின் தொடக்கத்தில் ஒரு முறை மணி அடிக்கிறோம். [illegible]ந்த மணி அடிக்கும்போது ஒரு சுலோகத்தையும் சொல்கிறோம். அந்தத் திருவுருவின்மீது கலசநீரை ஒரு உத்தரணி அளவு ப்ரோசித்து மணியின் நாவையும் ஜலத்தால் ப்ரோசித்து சந்தனம், குங்குமம் அணிவிக்கவேண்டும். பூஜை ஆரம்பிப்பதற்கு முன்னால் மணி அடித்தால், அந்த மணி சப்தம்கேட்டதும் வீட்டிலுள்ள துர்தேவதைகள் போன்றவை வெளியே ஓடிவிடும்.

துர்தேவதை, பேய், பிசாசு போன்றவைகளுக்கு மணி சப்தம்கேட்டால் பயம் எனவே, ஓடிவிடும். அதனால், மணியடித்து அவைகளை விரட்டி விட்டு பூஜையை ஆரம்பிப்பர். ஒவ்வொரு நாளும் ஏன் இப்படி அடிக்க வேண்டுமென்றால், ஓடிப்போன துர்தேவதைகள் இருட்டியபின் மீண்டும் வந்துவிடும். மறுநாள், மறுபடியும் மணியடித்து விரட்டவேண்டும்.

அவை இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டுமே என்றால், அவை இருக்குமிடத்தில் தேவதைகள் வரமாட்டார்கள்! அதனால், மணியடித்துதான் தினமும் பூஜையை ஆரம்பிப்பது வழக்கம்.

ஆன்மீகம்

## இயேசு கொணர்ந்த வாள்

இயேசுவின் வார்த்தைகள் பன்முகம் கொண்டவை. அமைதியும், ஆறுதலும் தருகின்ற வார்த்தைகளும் உண்டு. அதிர வைக்கும், அறைகூவல் விடுக்கும் வார்த்தைகளும் உண்டு.

இன்றைய நற்செய்தி வாசகம் இரண்டாம் வகையைச் சேர்ந்தது. இயேசுவின் போதனையும், கொள்கைகளும் ஒரு குடும்பத்திற்குள், ஒரு குழுமத்திற்குள், ஒரு சமுதாயத்திற்குள் பிளவை உருவாக்கும் தன்மை கொண்டவை. அவரது வார்த்தையின்படி வாழ விரும்புகிறவர்கள் சில நேரங்களில் தம் சொந்த குடும்பத்தினரைக்கூட இழக்கவேண்டியிருக்கும். பிரியவேண்டியிருக்கும்.

இயேசுவின் பொருட்டு உறவுகளையும் இழக்க ஒருவர் அணியமாக இருக்கவேண்டும் என்பது அவரது எதிர்பார்ப்பு.

இயேசுவின் கொள்கை சமரசம் செய்வதல்ல. தேவைப்பட்டால், எதிர்த்து எழுவது. கிளர்ச்சி செய்வது. நீதி, பரிவு, ஓய்வு நாளிலும் குணமாக்கல், ஒதுக்கப்பட்டோருடன் உறவு போன்றவற்றில் இந்த சமுதாயம் என்ன நினைக்கும், எனது சீடர்கள் என்ன நினைப்பார்கள், என் உறவினர்கள் என்ன சொல்வார்கள் என்றெல்லாம் எண்ணவில்லை. எந்தவிதமான சமரசமும் செய்துகொள்ளவில்லை. கொண்ட மதிப்பீடுகளுக்காக, நம்பிக்கைக்காக இறுதியில் உயிரையும் கொடுத்தார். நமது அன்பு, நம்பிக்கை, விசுவாசம் சமரசம் அற்றதாக அமையட்டும்.

## 'ஈதுல் பித்ர்' நோன்புப் பெருநாள்

அல்லாஹ்வின் வெகுமதிகள் அவன் அடியானை நோக்கி வருகின்ற ரமழான் நோன்பின் இறுதிப் பகுதியில் 'லைலத்துல் கத்ர்' என்ற ஓர் இரவும் உண்டு. இது ஆயிரம் மாதங்களைவிட சிறந்ததென அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்.

எந்த மனிதருக்கு இந்த இரவில் அல்லாஹ்வை வணங்கும் பாக்கியம் கிடைத்துவிடுகிறதோ அவர் மாபெரும் பாக்கியம் பெற்றவராவார். இது பற்றி இறை தூதர் அவர்கள் கூறுகிறார்கள். இவ்விரவை என் உம்மத்தினருக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான். இது முந்திய உம்மத்தினர் எவருக்கும் கிடைக்கவில்லை என்று.

**ஆதாரம்: துர்ருல் மன்தூர்**

எனவே எம்மை வந்தடைந்துள்ள ரமழான் நோன்பில் இவ்விரவை நாம் அடைய எல்லாம்வல்ல அல்லாஹ் எமக்கு அருள்பாலிப்பானாக. இன்ஷா அல்லாஹ் இந்த ரமழான் மாதத்தின் இறுதி நோன்பையும் நாம் நோற்று ஈற்றில் கொண்டாடுவோம். 'ஈதுல் பித்ர்' நோன்புப் பெருநாள்.

**எம்.சீ.கலீல், கல்முனை - 05**

கவிதைப்போட்டி 1124



பாராட்டுக்குரியது

### மழலையின் சுமை

வஞ்சமில்லா இந்தப்
பிஞ்சுக் கரங்களிலே
கொஞ்சும் மழலையின் சுமை.
தஞ்சம் கொள்ளவோ - எங்கும்
அஞ்சும் இவனுக்கு - எந்த
நெஞ்சம்தான் இவன்
வாழ்வுக்கு
கொஞ்சம் கருணை
கொள்ளுமோ.

இளம்பிறை,
புத்தளம்.




# கவிதைப் போட்டி இல 1127



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27. 07. 2015

**கவிதைப் போட்டி இல. 1127 தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.**
**இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

### உதவிக்கரம்

பிள்ளையைப் பெற்ற தாய்
பிரிந்துவிட்டாள்
குடும்பப் பாரம்
குழந்தைப் பாரம்
இவை எல்லாமே
இந்த இளசுக்குத்தான்
பாவம் பரிதாபம்
பார்த்து உதவுங்கள்.

**எம்.சி.கலீல்,**
**கல்முனை-05**

### உறுதி

வீதியில் விட்டெறிந்த
கைக்குழந்தை
இப்போதென் கையில்
என் நிலை ஏழ்மையானாலும்
இதற்கோர் வளமான
வாழ்வையளிக்க
நான் பின் வாங்கேன்.

**அ.சந்தியாகோ,**
**கண்டி.**

### யார் கையில்...

உன்னை பெற்றுவிட்டவளோ
இறைவன் கையில் - அவள்
பெற்றெடுத்த நீயோ
எனது கையில் - இங்கு
தனித்துவிட்ட அனாதைகளாய்
தவித்து வாழும்போது - நாம்
இருவருமே இனி யார் கையில்.

**யோகன், புத்தளம்.**

### பாக்கியம்

குழந்தை பாக்கியம்கோரி
செல்வந்தர்கள் தவிதவிக்க
இந்த அனாதையின்
மடியில் இன்னொரு குழந்தை.

**இஷாரா பேகம் ஜெமில்,**
**கண்டி.**

# உங்கள் பக்கம்

## மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் வளப்பற்றாக்குறை

முல்லைத்தீவு, மாங்குளம் ஆதார வைத்தியசாலை, வளப்பற்றாக்குறையுடன் இயங்கிவருவதால் பொது மக்கள் பல அசெகரியங்களை எதிர்நோக்கிவருவதாக மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின்கீழ் உள்ள மாங்குளம் ஆதார வைத்தியசாலையானது முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான ஒரு வைத்தியசாலையாக காணப்படுகின்றது.

ஒலுமடு, பெரியபுளியங்குளம், அம்பகாமம், புலுமச்சிநாதகுளம், மாங்குளம், கருப்பட்டமுறிப்பு, மேளி வனம், கற்கிடங்கு, கிழவன்குளம், பனிக்கன்குளம், கொம்புவைத்தகுளம், பாலைப்பாணி, வன்னிவிளாங்குளம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள், தங்களது மருத்துவத் தேவைகளை இவ்வைத்தியசாலையினூடாகவே நிறைவுசெய்கின்றனர்.

இவ்வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவு, மகப்பேற்று விடுதி, ஆய்வுகூட வசதிகள் எவையும் இல்லாதிருப்பதால் இப்பகுதி மக்கள் தமக்கான மருத்துவ தேவையை நிறைவுசெய்வதற்கு வவுனியா அல்லது கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டியநிலை காணப்படுகின்றது.

எனவே நோயாளிகளின் நன்மை கருதி இவ்வைத்தியசாலைக்குரிய வசதிகளை விரைவில் பெற்றுத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

**எம்.சுயானன், மாங்குளம்.**


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com


## அமைதியின் சொற்கள்

**இவ் வாழ்க்கையில்**
**இணையற்ற ஆனந்தத்**
**தைக் கண்டுகொள்ளும்**
**சாத்தியம் உண்டு.**

இணையத்தளம்: www.wopg.org
**- பிரேம் ராவத்**

# வாசகர்சாலை

### பாராட்டுக்கள்!.....

அன்பின் முரசே! பெரியவர்கள் தான் தினமுரசுப் பிரியர்கள் என்று பார்த்தால், சிறுவர்களும் "தினமுரசே எப்போ வருவாய்" என்று எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றனர். பாப்பா முரசுக் கதைகளைப் பார்த்து உண்மையில் சிறுவர்கள் மனதில் நன்மையையே செய்யவேண்டும் என்று நினைக்கின்றனர். முரசுக்கு எனது பாராட்டுக்கள்.

**அ.செல்வி, மகரகம.**

### அசத்தல்!

நீ தரும் அத்தனை அம்சங்களும் அபாரம். அதிலும் அரசியல் கட்டுரைகள் பிரமாதம். இடி அமீன், நெல்சன் மண்டேலா போன்ற தொடர்கள் அசத்தல். **என்.ஆஷா, வவுனியா.**

### முரசுக்கு நன்றி

மருத்துவர் ஜமுனாநந்தாவின் நீர் வெறுப்பு நோய் தொடர்பான கட்டுரையை முரசில் பிரசுரித்து மக்களுக்கு அதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் முரசுக்கு நன்றி.

**அ.கோகிலவதன், கிளிநொச்சி.**


### வாழ்த்துக்கள்

வாரம்தோறும் உன் வரவை எதிர்பார்த்து நிற்கும் நானும் ஒரு ஜீவன். முரசில் பல மாற்றங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன். வித்தியாசமான சுவையான அம்சங்களை பிரசுரிக்கலாமே.

முரசின் தரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றத்தைக் காணக் கூடியதாக இருக்கின்றது. மக்கள் நலன்சார்ந்து வாசகர்நலன் சார்ந்து முரசு இன்னும் நிறைய யோசிக்கவேண்டியிருக்கிறது. முரசின் பணி தொடர வாழ்த்துக்கள்.

**என்.ஆஷா, வவுனியா.**

# மக்களின் சரியான அரசியல் தெரிவே பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தரும்



## செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா

**தமிழ் மக்கள் சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு மிகச்சிறந்த தலைமைத்துவம் ஒன்று காலத்தின் தேவையாகவுள்ள நிலையில் அதற்கு உரித்தான தலைமைத்துவத்தை கொண்டவராக டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மட்டுமே விளங்கி வருகின்றாரென சமூக மேம்பாட்டு இணையத்தின் உறுப்பினரான டேவிட் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் கா்லங்களில் தமது வெற்றியை மட்டும் இலக்காகக் கொண்டு செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களிடம் வழங்கும் வாக்குறுதிகளை இதுவரையில் செயற்படுத்தவில்லை. ஆனால் கூட்டமைப்பு உள்ளிட்ட ஏனைய சில கட்சிகள் வெறும் தேர்தல் வாக்குறுதிகளுடன் மட்டும் நின்றுவிடுகின்றனர். இவர்களுக்கு மக்கள் நலன்சார்ந்த விடயங்களை முன்னெடுப்பதில் அக்கறையோ, .விருப்பமோ இல்லாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

குறிப்பாக பொருளாதாரத்திலும், ஏனைய துறைகளிலும் பின்தங்கிய நிலைகளில் வாழும் மக்களின் மேம்பாட்டுக்காகவோ, அவர்கள் சார்ந்து வாழும் கிராமங்களின் அபிவிருத்திக்காகவோ கூட்டமைப்பினர் எதுவித கரிசனைகளையும் செலுத்தவில்லை.


இந்நிலையில், ஒரு சமூகத்தின் மேம்பாடானது கல்வி வளர்ச்சியையும், வாழ்வாதார மேம்பாட்டையும் கருத்தில் கொண்டதாக முன்னெடுக்கப்பட வேண்டும். அந்தவகையில் குறித்த திட்டங்களை கருத்தில் கொண்டு அவற்றை செயற்படுத்தும் நல்நோக்குடன் செயற்பட்டுவருபவர்கள் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியை சார்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

எமது சமூகத்தை நாமே ஆள்வதற்கு மிகச்சிறந்த தலைமைத்துவத்தை கொண்டவராக டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மட்டுமே விளங்கிவருகின்றார் எனவும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா அவர்கள், மக்கள் சரியானதொரு அரசியல் நிலைப்பாட்டை தெரிவுசெய்வதன் ஊடாகத்தான் சமூகத்தில் காணப்படும் பல்வேறு தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினை காணமுடியும்.

அந்தவகையில் சமூக மேம்பாட்டு இணையம் என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ, அதன் இலக்கை அது சரியான முறையில் கொண்டு செல்வதற்கு எமது முழுமையான பங்களிப்பு எப்போதும் வழங்கப்படும்.

# வீதியில் கஞ்சா வைத்திருந்தவர் கைது



மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர்ப் பொலிஸ் பிரிவிலுள்ள கிராம நீதிமன்ற வீதியில் கஞ்சாவைத் தன்வசம் வைத்திருந்த நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்குப் பொதுமக்களிடமிருந்து கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து தாம் திடீர்ச் சோதனை செய்து 22 கிராம் கஞ்சாவைத் தம்வசம் வைத்திருந்த நபரைக் கைது செய்ததாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். கிராம நீதிமன்ற வீதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி ஏறாவூர்ப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# மறைந்தார் மெல்லிசை மன்னர்

# எம்.எஸ்.விஸ்வநாதன்



பிரபல திரைப்பட பழம்பெரும் இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன் உடல் நலக்குறைவு காரணமாக தனது 87 வயதில் கடந்த செவ்வாய்க்கிழமை(14) அன்று அதிகாலை 4.15 மணிக்கு காலமானார். தமிழ் திரையுலகின் இசைப்பொக்கிஷமான இவர் இசையால் உலகையே தன்வசப்படுத்தியவர். இரண்டு தலைமுறைக்கு இசையில் நம்மைத் தாலாட்டிய எம்.எஸ்.வி-யின் இசைக்கு இன்னும் இருக்கிறார்கள்.

எம்.எஸ்.விஸ்வநாதன் 1928, ஜூன் 24 ஆம் திகதி கேரள மாநிலம் பாலக்காட்டில் பிறந்தவர். எம்.எஸ்.விஸ்வநாதன், 1945 முதல் 2015வரை 60 ஆண்டு காலம் திரைத் துறையில் கோலோச்சியவர்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி என 1,200க்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்துள்ளார் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன்.

1953ல் வெளிவந்த 'ஜெனோவா' படத்துக்கு முதன் முதலாக இசையமைத்த எம்.எஸ்.விஸ்வநாதன், ராமமூர்த்தியுடன் இணைந்து 700 படங்களில் இசை அமைத்துள்ளார். 500 படங்களுக்கு மேல் தனியாக இசையமைத்துள்ளார்.

நடிகர் சிவாஜி கணேசன், எம்.எஸ்.விஸ்வநாதனுக்கு மெல்லிசை மன்னர் என்ற பட்டத்தை வழங்கி பெருமைசேர்த்தார். 'நீராரும் கடலுடுத்த' என்ற தமிழ்த்தாய் வாழ்த்துக்கு மோகன ராகத்தில் இசைகோர்த்துள்ளார் எம்.எஸ்.விஸ்வநாதன். இசையஃமப்பாளர்கள் சூட்டப்பட்டது.

### எம்.எஸ்.வி. பற்றிய சில தகவல்கள்...

* 1928ஆம் ஆண்டு, ஜூன் 24ஆம் திகதி கேரள மாநிலம். பாலக்காட்டில் பிறந்தவர் எம்.எஸ்.வி., இவரது முழுப்பெயர் மனையங்கத் சுப்ரமணியன் விஸ்வநாதன். இதைத்தான் இவர் எம்.எஸ்.விஸ்வநாதன் என்று சுருக்கி கொண்டார்.

* 1952ஆம் ஆண்டு என்.எஸ்.கிருஷ்ணன், தனது படமான 'பணம்' படத்தில் விஸ்வநாதன் - ராமமூர்த்திக்கு வாய்ப்பு அளித்தார்.

* 1952ஆம் ஆண்டு பணம் படத்தில் துவங்கிய இந்த இரட்டையர்களின் வெற்றி கூட்டணி 1965ஆம் ஆண்டுவரை தொடர்ந்தது. இருவரும் சேர்ந்து இந்த 13 ஆண்டுகளில், 100 படங்களுக்கு மேல் இசையமைத்தனர்.

* தமிழ், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் 1200 படங்களுக்கு மேல் இசையமைத்துள்ளார் விஸ்வநாதன்.

* ஒரு பாடலுக்கு 3 இசைக்கருவியையும், 300 இசைக்கருவியையும் பயன்படுத்திய ஒப்பற்ற இசையமைப்பாளர்.

* நடிகர் சிவாஜி கணேசன் அவர்களால் மெல்லிசை மன்னர்கள் என்ற பட்டத்தை பெற்று இன்று மெல்லிசை மன்னராக வாழ்ந்து கொண்டிருப்பவர் எம்.எஸ்.வி.

* காதலா காதலா, காதல் மன்னன், தகதிமிதா, அன்பே வா (புதியது), மஹாராஜா, தில்லு முல்லு (ரீ-மேக்) போன்ற படங்களில் நடித்தும் உள்ளார்.

* இவர் இசையமைத்த பல்லாயிரக்கணக்கான பாடல்களில் உள்ளத்தில் நல்ல உள்ளம்(கர்ணன்), மயக்கமா கலக்கமா, மனிதன் என்பவன் தெய்வமாகலாம் (சுமைதாங்கி), வசந்தத்தில் ஓர் நாள்(மூன்று தெய்வங்கள்), எங்கே நிம்மதி(புதிய பறவை), அவளுக்கு என்ன அழகிய முகம் (சர்வர் சுந்தரம்), அதோ அந்த பறவை (ஆயிரத்தில் ஒருவன்) உள்ளிட்ட காலத்தால் அழியாத ஆயிரக்கணக்கான பாடல்கள் தந்தவர் எம்.எஸ்.வி.

* இளையராஜாவுடன் இணைந்து மெல்லத் திறந்தது கதவு, செந்தமிழ் பாட்டு, செந்தமிழ் செல்வன், விஷ்வ துளசி போன்ற படங்களுக்கு இளையராஜாவுடன் இணைந்து இசையமைத்துள்ளார்.

*எம்.எஸ்.வி., இசையமைத்தது மட்டுமல்லாமல் 500 பாடல்கள்வரை பாடியுள்ளார். அதில் 200 பாடல்கள் பிற இசையமைப்பாளர்களின் இசையில் பாடியிருக்கிறார்.

* கலைமாமணி, பிலிம்பேர், வாழ்நாள் சாதனையாளர், கௌரவ டாக்டர் பட்டம் உள்ளிட்ட ஏராளமான கௌரவங்கள் இவருக்கு வழங்கப்பட்டிருந்தாலும், தேசிய விருது, பத்மவிருதுகள் உள்ளிட்ட எதுவும் இதுவரை வழங்காதது துரதிர்ஷ்டமே.

தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):- thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

### தேர்தல் கடை விரிக்கப்பட்டுள்ளது!

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் இம்முறை விசித்திரமான தேர்தலை சந்திக்கவுள்ளது. யாழ்ப்பாணத்தில் தேர்தல் என்றால் அங்கு கூட்டமைப்பும். ஈ.பி.டி.பியும்தான் பிரதான கட்சிகளாக தவறான களம் இறங்கிவந்துள்ளன.

அப்போது தேசியம் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் இனத்தின் பாதுகாவலர்கள் போலவும். இணக்க அரசியல் நடத்திய ஈ.பி.டி.பியை தமிழ் மக்களின் தேசியத்துக்கு எதிரானவர்கள் என்றும் பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் வலிந்து உருவாக்கிய மாயையில் தமிழ் மக்கள் தறவான தீர்மானத்தை எடுத்தார்கள்.

பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பதுபோல் கூட்டமைப்பின் நீண்டகால திருகுதாளங்கள் இப்போது வெளிப்படத்தொடங்கியுள்ளது. கூட்டமைப்பு தமிழ் மக்களை அரசியல் அடக்குமுறைக்குள் வைத்துள்ளது. தமிழ் மக்களை சர்வதேசத்தையும். பகைமை உணர்ச்சியூட்டலையும் கூறி ஏமாற்றுகின்றது. தமிழ் மக்களிடையே பல கருத்து ஜனநாயகத்துக்கு இடமில்லாமல் செய்துள்ளது என்று ஈ.பி.டி.பி கூறியிருந்தால் அதை ஒரு அரசியல் எதிர்க்கருத்தாக விமர்சித்திருப்பார்கள்.

இப்போது நிலைமை தலைகீழாகி இருக்கின்றது. கூட்டமைப்பின் போக்கையும். பொய்களையும். இதுநாள்வரை கூட்டமைப்பின் வெற்றிக்காக உழைத்த மாணவர்களும். முன்னாள் போராளிகளும். பெண்கள் அமைப்புக்களும் கூறுவதுதான் கூட்டமைப்பிற்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்கள் மத்தியில் கூட்டமைப்புக்காக குரல் கொடுத்தவர்கள். இப்போது கூட்டமைப்பை நம்பிப் பயனில்லை. நாமே களத்தில் இறங்கி செயலாற்ற வேண்டுமென கூறுமளவுக்கு கூட்டமைப்பின் போக்கு உள்ளது.

கூட்டமைப்பு கூறுவதுபோல் தமிழ் மக்கள் கூட்டமைப்பையே தமது அரசியல் தலைமையாக அங்கீகரிப்பதாக இருந்தால். தமிழ் மக்களிடையே கூட்டமைப்பைத் தவிர்ந்த வேறு கருத்து இல்லை என்பதை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் இன்று கூட்டமைப்புக்கு எதிராக முன்னாள் போராளிகளும். மாணவர்களும். பெண்கள் அமைப்புக்களும். கூட்டமைப்புக்கு எதிராக களத்தில் இறங்கியிருக்கமாட்டார்கள்.

கூட்டமைப்பின் சாயம் வெளுக்கத் தொடங்கியிருக்கும் நிலையிலேயே காலங்காலமாக தமிழ் மக்களை ஏமாற்றிவரும் தமிழ் தலைமைகள் மாறவேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களின் தலையெழுத்து மாறும் என்று வீணைச்சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடிக்கடி கூறிவருகின்றார்.

உண்மை வெளிவரத் தொடங்கியிருக்கும் முக்கியமான காலகட்டத்தில் தமிழ் மக்கள் கடந்த காலத்தையும். நிகழ்காலத்தையும் அலசி ஆராய்ந்து சரியான முடிவை எடுக்கின்ற தேர்தலாக இந்தத் தேர்தல் நிச்சயம் இருக்கும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# தெற்கு அரசியலில் திடீர் அதிர்வுகள்!

எட்டாவது நாடாளுமன்றத்திற்கான தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பதினேழாம் திகதி நடைபெறவுள்ளது. வேட்புமனுக்கள் செலுத்தப்பட்டு விருப்பு வாக்குகளுக்குரிய இலக்கங்களும் வழங்கப்பட்டுவிட்டது.

வேட்புமனு தாக்கல் செய்யப்படும் இறுதி நேரம்வரை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுமா? என்றும், அப்படி வழங்கப்பட்டாலும் எந்தவேளையிலும் அது கட்சியினால் நிராகரிக்கப்படலாம் என்றநிலையே காணப்பட்டது.

பதின்மூன்றாம் திகதி பகல் பன்னிரெண்டு மணிவரை இதே இழுபறி நிலை நீடித்தது. மகிந்த ராஜபக்சவை போட்டியிடவிடாமல் தடுப்பதற்காக எத்தனையோ பிரயத்தனங்களை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரும், பிரதான எதிர்க்கட்சியினரும், ஜனாதிபதியோடு முன்னைய அரசிலிருந்து வெளியேறிய அமைச்சர்களும் முன்னெடுத்தனர்.

சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரின் பங்காளிக் கட்சிகளும் தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும், இன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவும் சேர்ந்து தேர்தலை எதிர்கொண்டால் இலகுவாக வெற்றிபெற முடியும் என்று கொடுத்த அழுத்தத்தை ஜனாதிபதி மைத்திரிபாலவினால் ஒரு அளவுக்குமேல் தட்டிக் கழிக்கமுடியாமல் போய்விட்டது.

இறுதியில் மகிந்த ராஜபக்சவை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் வேட்பாளராக உள்வாங்குவதற்கு இணங்குவதாகவும் ஆனால் மூன்று முக்கிய நிபந்தனைகளை விதிப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

அதில் மகிந்த ராஜபக்சவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்கமுடியாது என்றும், மகிந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குழுவுக்கு ஆலோசனை மட்டுமே வழங்குவார் என்றும், கட்சியில் வெற்றிபெறும் பெரும்பான்மை உறுப்பினர்கள் யாரை பிரதமராக தெரிவுசெய்கின்றனரோ அவரே பிரதமராக நியமிக்கப்படுவார் என்றும் கூறினார்.

ஆனால் என்னதான் நிபந்தனைகளை ஜனாதிபதி முன்வைத்தாலும், ஜனாதிபதி மைத்திரிபாலவை பொதுவேட்பாளராக முன்நிறுத்திய சந்திரிக்கா அம்மையார் அதிருப்தியின் உச்சத்துக்கே சென்றார். ஜனாதிபதி மைத்திரி ஒரு சதிகாரர் என்றும், அவர் துரோகம் செய்துவிட்டார் என்றும் திட்டித் தீர்த்துவிட்டு இலண்டன் புறப்பட்டுச் சென்றதாகச் செய்திகள் வெளியாகி இருந்தது.

மறுபக்கத்தில் ஜனாதிபதி மைத்திரியோடு முன்னைய ஆட்சியிலிருந்து வெளியேறிய முன்னால் அமைச்சர் ராஜித, மகிந்தவுக்கு போட்டியிட வாய்ப்பு வழங்குவதாக ஜனாதிபதி இணங்கியிருந்தாலும் தொடர்ந்தும் வேட்பு மனுக்கள் தயாரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இறுதி நேரத்திலும் மாற்றங்கள் நிகழலாம் என்று கூறியிருந்தார். அவர் கூறியது நடக்கவில்லை. இறுதியில் அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து போட்டி யிடுகின்ற முடிவை எடுத்தார். இந்த முடிவானது அவரது அதிருப்தியை வெளிப்படுத்தியது.

ஐக்கிய தேசியக் கட்சியோ மகிந்த களத்தில் இறங்கியுள்ள நிலையில் தனித்து போட்டியிட்டால் போட்டி கடினமாகிவிடும் என்பதை சரியான நேரத்தில் கிரகித்துக் கொண்டது. உடனடியாகவே மலையகத் தமிழ் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், சில கடும்போக்கு பௌத்த கட்சிகள் என்பவற்றை உள்வாங்கி நல்லாட்சிக்கான ஐக்கிய முன்னணி ஒன்றை ஏற்படுத்திக் கொண்டதோடு, தனது யானைச் சின்னத்தையும் காப்பாற்றிக்கொண்டது.

இப்போது மகிந்த எனும் ஒருவரை எதிர்கொள்ளுகின்ற பலத்தை பெற்றுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் கருதுகின்றனர். அந்த நம்பிக்கையை வலுப்படுத்தும் காரணங்களில் ஒன்று மகிந்த ராஜபக்சவோடு முரண்பாடுகளைக் கொண்டிருந்த சில சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியோடு இணைந்து கொண்டிருப்பதுதான்.

சுதந்திரக் கட்சியை பாதுகாப்பதற்காகவும், அது பிளவுபடாமல் இருப்பதற்காகவுமே மகிந்த விவகாரத்தை சகிப்புக்களோடு ஜனாதிபதி மைத்திரிபால செயற்பட்டார். ஆனால் இறுதியில் சுதந்திரக் கட்சியில் இருந்து சிலர் விலகி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டதானது ஜனாதிபதிக்கு ஏமாற்றமாகவே அமைந்திருக்கும்.

சுதந்திரக் கட்சியிலிருந்து வந்தவர்களுக்கு ஆசனங்களை ஒதுக்கீடு செய்வதற்கான முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி தமது உறுப்பினர்களுக்கு போட்டியிட வாய்ப்பு வழங்கவில்லை என்ற அதிருப்திகள் எழுந்துள்ளன.

மறுபக்கத்தில் மகிந்த ராஜபக்ச எந்த நேரத்திலும் சதி நடக்கலாம் என்ற அச்சம் ஒருபுறமும், மறுபக்கத்தில் அவ்வாறு சதி நடக்குமானால் அதற்கு மாற்றாக ஒரு வேட்புமனுவை தயார்செய்து வைத்திருந்ததாக கூறப்பட்டது. இது தவிரவும் இறுதிநேரத்தில் வேட்பு மனுவில் மாற்றம்செய்து குளறுபடி செய்யப்படுமானால் அதை எதிர்த்து வழக்குத் தாக்கல்செய்து வேட்புமனு பொறுப்பேற்கும் தினத்தை தள்ளிப்போடுவதற்கும் ஒரு ஏற்பாட்டை செய்யவும் ஆயத்தமாக இருந்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

மகிந்த ராஜபக்ச தனது சொந்தத் தொகுதியான ஹம்பாந்தோட்டையில் போட்டியிடவேண்டும் என்று பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் நடைபெறும் தேர்தலில் பிரதமர் பதவியை குறி வைத்துள்ள மகிந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் ஏனையவர்களைவிடவும் அதிகமான விருப்பு வாக்குகளை பெற்றுக் கொள்ளவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்.

ஆகவேதான் ஹம்பாந்தோட்டையில் போட்டியிட்டால் அங்கு போட்டியிடும் அண்ணன் சாமல், மகன் நாமல், தங்கை நிருபமா ஆகியோடு விருப்பு வாக்குகளை பகிர்ந்துகொள்ள நேரிடும். அது அதிகளவான விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியை சிதைத்துவிடும் என்பதால் அதிக வாக்குகளை பெறக் கூடிய இரண்டு மாவட்டங்களை தெரிவு செய்தார்.

கொழும்பு மாவட்டமும், குருநாகல் மாவட்டமுமே அதிக வாக்காளர்களை உள்ளடக்கிய மாவட்டங்களாகும். கொழும்பு மாவட்டம் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளை அதிகமாகக் கொண்டுள்ள மாவட்டம் என்பதால் கொழும்பில் போட்டியிடுவதை மகிந்த விரும்பவில்லை. குருநாகல் மாவட்டத்தை தெரிவு செய்திருக்கின்றார். இதற்கு இன்னொரு காரணம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் குருநாகல் மாவட்டத்திலேயே மகிந்தவுக்கு அதிகமான வாக்குகள் கிடைத்திருந்தன.

எனவே குருநாகல் மாவட்டத்தில் முதல் முறையாக போட்டியிட்டாலும் கணிசமான விருப்பு வாக்குகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு மகிந்த ராஜபக்சவுக்கு இருக்கின்றது.

மகிந்த ராஜபக்ச மீண்டும் அரசியலில் முதன்மைப்படுத்தப்படுவதை உள்நாட்டில் இருக்கும் சில அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல முக்கியமாக இந்தியா, அமெரிக்கா போன்ற சில நாடுகளுக்கும் விருப்பமில்லை என்றும் அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றனர். அந்த விருப்பமின்மையானது ஜனாதிபதிக்கு அழுத்தங்களாக வெளிப்படவும் கூடும்.

ஆனால் மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வருவாராக இருந்தால் முடங்கிக் கிடக்கும் அபிவிருத்திப் பணிகள் மீண்டும் உயிர்பெற்றுவிடும் என்றும், முன்னைய ஆட்சியில் திட்டமிடப்பட்ட சுற்றுலாத்துறை மற்றும் உட்கட்டுமானம் போன்ற பணிகள் ஆரம்பிக்கப்படும். நாடு மீண்டும் சுறுசுறுப்பாக இயங்கும் என்று கூறுகின்றவர்கள் ஒருபுறம்.

ஏட்டிக்குப் போட்டியான வாதப்பிரதிவாதங்களோடு சூடுபிடித்திருக்கும் தென் இலங்கை தேர்தல் களத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான துமிந்த சில்வா, மேர்வின் சில்வா, பசில் ராஜபக்ச போன்ற சிலருக்கு போட்டியிட வாய்ப்பு வழங்கப்படவில்லை.

நீண்டகாலமாக நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சிலர் அரசியலில் இருந்து ஓய்வுபெற்றுள்ளனர். இவற்றுக்கு இடையே ஐக்கிய தேசியக் கட்சியோடு சேர்நது போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட சரத்பொன்சேகா தனிக் கட்சியாகவே தேர்தலில் தனது கட்சியை இறக்கியுள்ளார்.

அதிலும் 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவுடன் போட்டியிட்டு பெற்றுக்கொண்ட தோல்வியை சரி செய்யும்வகையில் மகிந்த ராஜபக்ச போட்டியிடும் குருநாகல் மாவட்டத்தில் சரத் பொன்சேகாவும் போட்டியிடுகின்றார்.

ஆகவே கட்சி தாவல்கள், அதிருப்திகள், ஏமாற்றங்கள், சேறுபூசல்கள் இவற்றுக்கு நடுவே குருநாகலில் மகிந்தவுக்கும் பொன்சேகாவுக்குமிடையேயான போட்டி மட்டும் சுவாரசுஷ்யமாக இருக்கப்போகின்றது.





# புலிகளின் வதை முகாமில்

மணியம்

தொடர் 174

இந்தக் கட்டத்தில் நான் குறுக்கிட்டு, இந்தியாவைக் கண்ணை மூடிக்கொண்டு நம்புவது தவறு என்றும், இப்பொழுது அண்ணனும் தம்பியுமாக உறவு கொண்டாடும் நாங்கள், பின்னர் கீரியும் பாம்புமாக மாறி சண்டை செய்யநேர்ந்தாலும் நேரலாம் எனவும் கூறினேன். இப்படி நான் கூறவேண்டி வந்ததிற்குக் காரணம், பங்களாதேஸ் விடுதலை அடைய தனது இராணுவத்தை அனுப்பி உதவிபுரிந்த இந்தியா, பின்னர் குறுகிய காலத்திற்குள்ளேயே அந்த நாட்டின் எதிரியாக மாறி விட்டிருந்தது. தான் அந்த நாட்டிற்குச் செய்த உதவியைப் பயன்படுத்தி, அந்த நாட்டில் ஆதிக்கம் செலுத்தவும், அந்த நாட்டின் வளங்களைச் சுரண்டவும் இந்தியா முரண்பட்டதே இரு நாடுகளுக்கும் பகைமை வளரக் காரணம்.

நான் எனது கருத்தைச் சொன்னது தான் தாமதம், எப்பொழுதும் சாந்தமாகப் பழகும் அந்த நண்பர் தீயில் மிதித்தவன்போல் துள்ளி விழுந்து என்னைத் தாறுமாறாகத் திட்டியதுடன், தொடர்ந்தும் என்னுடன் கதைக்கவிரும்பாமல், தேநீர் குடிப்பதற்கு நான் விடுத்த அழைப்பையும் நிராகரித்துவிட்டு, எனது கடைக்கருகில் நிறுத்தி வைத்திருந்த தனது சைக்கிளை எடுத்துக்கொண்டு புயல்வேகத்தில் பறந்துவிட்டார். பின்னர் அவர் என்னுடன் தொடர்ந்து பழகினாலும் முன்புபோல இல்லை.

நான் அவரிடம் கூறியதுபோல பின்னர் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் போர் நடந்தது. அந்த நேரத்தில் என்னுடன் துள்ளிப் பாய்ந்த நண்பர் இங்கிலாந்து சென்று விட்டார். அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் எப்போதாவது வாய்த்தால், இதுபற்றி அவரிடம் பிரஸ்தாபிக்க வேண்டும் என்பது எனது விருப்பம். வாய்ப்புத்தான் வரமாட்டேன் என்கிறது.

இப்படியான ஒரு பின்னணியில் புலிகளின் புலனாய்வாளன் உதயன் என்பவன் இந்திய அமைதிப்படை யுடன் தாம் புரிந்த யுத்தம் பற்றி என்னிடம்கேட்ட கேள்விக்கு நான் எப்படிப் பதிலளிக்க முடியும்?

புலிகளின் புலனாய்வாளன் உதயன் கேட்ட கேள்விக்கு பதிலளிப்பது என்பது எனக்கு ஒரு தர்மசங்கடமான நிலையை உண்டுபண்ணியது. அவனது நோக்கம் தமக்குச் சாதகமான ஒரு பதி[illegible] என்னிடமிருந்து எதிர்பா[illegible]மட்டுமல்ல. என்னை[illegible]போன்றவர்கள் தம்மைப் பற்றித் தொடர்ந்தும் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிவதுமாகும்.

ஏனெனில், தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பமான பின்னர், எமது கட்சியின் பல தோழர் கள் புலிகள் இயக்கம் உட்பட அநேகமாக எல்லா இயக்கங்களிலும் இணைந்து வேலைசெய்ய ஆரம்பித்து இருந்தனர். அவர்களில் புலிகளுடன் இணைந்தவர்கள் போக, மற்றைய எல்லோரும் இணைந்திருந்த இயக் கங்கள் பெரும்பாலும் புலிகளுக்கு எதிராகவே இருந்தன.

எந்தவொரு இயக்கத்துடனும் இணையாமல் தொடர்ந்தும் மார்க்சிஸ - லெனினிஸ கம்யூனிஸ்ட் கட்சியிலேயே இருந்த நாமும் புலிகளையே எமது முதலாவதும் பிரதானதுமான எதிரியாகக் கணித்து இருந்தோம். அதேபோல, எமது கட்சி யால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி என்ற அமைப்பிலிருந்து உருவான என்.எல்.எப்.ரி மற்றும் பி.எல்.எப்.ரி (இதில் என்.எல்.எப்.ரி பின்னர் புலிகளுக்குச் சார்பான நிலைப் பாட்டை எடுத்தது) என்பனவும் புலிகளுக்கு எதிராகவே இருந்தது.

இந்த நிலைப்பாடுகள் காரண-மாகவே புலிகள் என்னைப் பிடித்துத் தமது வதைமுகாமில் வைத்திருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

ஆனால் இப்பொழுது நான் எதிர் நோக்குவது ஒரு நடைமுறைச் சிக்கல். பல நோக்கங்களை மனதில் வைத்துக்கொண்டு உதயன் என்பவன் என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கி றான். அதாவது தாம் இந்திய அமைதிப்படையுடன் போரிட்டது சரியா?, பிழையா? என்ற அவனது கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும். அதுவும் உலகின் மூன்றாவது பெரிய இராணுவம் என புலிகள் வர்ணித்து, அத்தகைய இராணுவத்தையே தாம் தோற கடித்துத் திருப்பி வைத்திருப்பதாக வீரம் பேசிவரும் சூழலில், அவன் எனது பதிலை வைத்துப் பல முடிவுகளை (என்னைப்பற்றி) எடுக்கமுடியும்.

(தொடரும்...)




(இப்படியான ரயில் பெட்டி களை நீங்கள் பழைய கால ரயில்களில் பார்த்திருக்கலாம். 1970களில் பிரிட்டனில் ஓடிய சில பழைய ரயில் பெட்டிகளில் கூட இப்படியான உள் அமைப்பு இருந்தது. தனித்தனி கேபின், இரண்டு சீட்களிடையே கதவு)

பூட்டிய கதவு உட்புறமா கப் பூட்டப்பட்டபடியே இருக்க எட்வேர்ட் ஜன்னலைத் திறந்தார். காற்று வேகமாக அடித்தது. இது நடைபெற்ற காலத்தில் இருந்தவை நீராவி இஞ்சின்கள் என்பதால் காற்றுடன் கரிப்புகையும் கலந்துவந்தது.

ஜன்னல் ஊடாக தமது உடலை வெளியே செலுத்தி, ரயில் கூரையில் இருந்த இரும்புச் சட்டம் ஒன்றை எட்டிப்பிடித்தார் எட்வேர்ட். அவரது வலப்புறத்தோளில் ஒரு கயிற்று வளையம் தொங்கியது.

கைகளில் பலத்தைத் கொடுத்து எம்பி உயர்ந்தார். அது அவ்வளவு சுலபமாக காரியமாக இருக்கவில்லை. எதிர்க்காற்று ஆளைத் தள்ளியது. ரயில் மணிக்கு 112 கி.மீ வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

இந்த ரயில் கொள்ளை நடந்து?முடிந்த பின்னர் எட்வேர்ட் கைது செய்யப் பட்டார். வழக்கு நடை பெற்றது. அந்த வழக்கு விசாரணையின்போது, ஓடும் ரயிலின் மேலேறிய சம்பவம் பற்றி அரசு வழக்கறிஞர் சில கேள்விகளைக் கேட்டு இருந்தார். அவரது கேள்விகளும் அதற்கு எட்வேர்ட் கூறிய பதில்களும் அந்த நாளைய பிரிட்டிஷ் பத்திரிகை களில் பரபரப்பாக பிரசுரமாகி இருந்தன.

எட்வேர்ட்டின் பதில்களை பிரிட்டிஷ் மக்களிடையே அவரை ஒரு கதாநாயக அந்தஸ்துக்கு உயர்த்தியிருந்தன. விசாரணையின்போது அவர் சிறையிலிருந்த போதிலும், அவரைச் சந்திப்பதற்கு பிரிட்டனின் செல்வாக்கான குடும்பங்களில் இருந்த சீமாட்டிகள் முயன்றார்கள்.

அப்படி, என்னதான் சொன்னார் எட்வேர்ட் வழக்கு விசாரணையில்?

"உங்களுக்கு மலை ஏறு வதில் நல்ல அனுபவம் இருப்பதாகவும், அதனால் ஓடும் ரயிலின் கூரையில் ஏறி கார்ட் வேகன் வரை செல்வது சுலபமானது என்றும் திட்டமிடலின்போது ரொபேர்ட்டிடம் கூறியிருந்தீர்கள். உண்மையிலேயே உங்களுக்கு மலையேறுவதில் அனுபவம் இருக்கிறதா"

"இல்லை, நான் மலைக்கு அருகில்கூட சென்றதில்லை."

"அப்படியானால் இப்படியாக ரயில் ஒன்றில் ஏறி பயிற்சி செய்திருந்தீர்களா"

"அதுவும் இல்லை. நான் ரயிலின் கூரையில் ஏறியது முதலும் கடைசியுமாக கொள்ளையடித்த தினத்தில் தான்"

"அந்த ரயிலின் வேகம் எவ்வளவு என்று தெரியுமா?"

"நன்றாக தெரியும். மணிக்கு 70 மைல்கள்"

"அவ்வளவு வேகத்தில் செல்லும் ரயிலில் இருந்து கீழே விழுந்தால் என்ன ஆகும் என்று தெரியுமா?"

"தெரியும் என்பது மட்டுமல்ல – நேரில்பார்த்தும் இருக்கி றேன். இந்தக் கொள்ளையை நான் நேரில் சென்று அடிப் பதற்கு முன்னர் வேறு ஒரு நபரை அனுப்பியிருந்தேன். ரெயில்வே கார்ட்டுடன் அவர் சண்டைபோட வேண்டி வந்த போது ரயிலில் இருந்து தவறி வீழ்ந்துவிட்டார். ரயில் அப்போதும் இதேபோல 70 மைல் வேகத்தில்தான் சென்று கொண்டிருந்தது. கீழே விழுந்த எனது ஆளுக்கு கழுத்து எலும்பு முறிந்து இறந்ததை நான் நேரில் பார்த்தேன்."



"அப்படியிருந்தும் எதற்காக இவ்வளவு ரிஸ்க்கான காரியம் ஒன்றைச் செய்தீர்கள்?"

"மிகவும் சிம்பிள். எனக்கு பணம் தேவைப்பட்டது. ரயில் கூரையில் ஏறினேன்" (கோர்ட்டில் சிரிப்பு)

"இம்பாஸிபிள், எந்தவித முன் அனுபவமும் இல்லாமல் இவ்வளவு வேகமாக ஓடும் ட்ரெயினில் கூரையில் ஒருவர் ஏறமுடியாது என்று நான் சொல்கிறேன்."

"சேர்... அப்படி நான் ரயிலின் கூரையில் ஏறியது மட்டுமல்ல, ரயிலின் கூரைமேல் நடந்து போய் கொள்ளையடித்தேன் என்றுதானே இங்கே வழக்கு நடக்கிறது. மறந்துவிட்டீர்களா" (கோர்ட்டில் பலத்த சிரிப்பு)

"சரி இதை எப்படிச் செய்தீர்கள்?"

"என்னால் முடியும் என்று நினைத்தேன். ஏறினேன். முடித்தேன்" (கோர்ட்டில் கைதட்டல்)

எட்வேர்ட் கோர்ட்டில் இவ்வளவு சர்வசாதாரணமாக கூறியிருந்தாலும், கொள்ளை யடித்த தினத்தில் அந்தக் காரியம் அவ்வளவு சுலபமாக இருந்திருக்கவில்லை.

ரெயில் பெட்டிக்கு மேலே உடலைக் கொண்டுபோன போது மிகவேகமான எதிர்க் காற்று அவரைத் தள்ளி விழவைக்க பார்த்தபோது கீழே விழாமல் இருப்பதற் காக பெட்டியின் கூரையைக் கெட்டியாகப் பிடிக்க வேண்டி இருந்தது. காற்று கண் களைத் திறக்கவிடாமல் செய்தது. நீராவி என்ஜினில் இருந்து வரும் புகைப் பெட்டிக்கு மேலே செல்வதால் அது பட்டு உடல் எரிந்தது.

கண்களைத் திறப்பதற் காக ரயில் செல்லும் திசைக்கு எதிர்த்திசையில் உடலைத் திருப்பிக்கொண்டார்.

(தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம்

162

பா.ராகவன்

தவிரவும், முன்பே பார்த்ததுபோல அரபாத்தும் சரி, அவரது அல்ஃபத்தா அமைப்பும் சரி, ஆரம்பம் முதலே சோஷலிசத்தில் நம்பிக்கைகொண்ட தலைவரும் இயக்கமுமாகவே அடையாளம் காணப்பட்டு வந்ததையும் இங்கே கவனத்தில் கொள்ளவேண்டும். ஒருபோதும் மதத்தை முன்னிறுத்தி அரபாத் யுத்தம் மேற்கொண்டதில்லை.

அவரளவில் தெளிவாகவே இருந்திருக்கிறார் என்றபோதும், பலஸ்தீனிய அரேபியர்களுக்கு அரபாத்தின் அரசியல் அவ்வளவாகப் புரியவில்லை என்பது, தொண்ணூறுகளின் தொடக்கத்தில்தான் தெரியவந்தது.

அதிகம் படிப்பறிவில்லாத, தலைவன் என்ன சொன்னாலும் கட்டுப்படக்கூடிய அந்த மக்களுக்கு, அரபாத்தின் இந்த அரசியல்தீர்வை நோக்கிய ஆரம்ப முயற்சிகள் முதலில் புரியாமல் போனதில் வியப்பில்லை. துப்பாக்கியுடன் மட்டுமே அரபாத்தைப் பார்த்தவர்கள் அவர்கள். ஒலிவ் இலையும் துப்பாக்கியும் கைக்கொன்றாக எடுத்துக்கொண்டு ஐ.நா.வுக்குப் போன அரபாத், அவர்களுக்கு மிகவும் புதியவர்.

அதனால்தான், இண்டிஃபதாவின் விளைவாக உருவான ஒஸ்லோ ஒப்பந்தம், பலஸ்தீனிய அரேபியர்களுக்கு மிகப்பெரிய அதிர்ச்சியையும் அவநம்பிக்கையையும் தந்தது. அவநம்பிக்கை என்றால், அரபாத்தின் மீதான அவநம்பிக்கை. கிட்டத்தட்ட சரிபாதி பலஸ்தீனியர்கள் இந்த



அரபாத் டுனிஷில் இருந்த காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இஸ்ரேலிய அதிகாரிகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருப்பதாகத் தெரிகிறது. இவற்றில் எது ஒன்றும் முழுவிவரங்களுடன் வெளியே வரவில்லை. ஒரு பக்கம் பலஸ்தீன் முழுவதும் இண்டிஃபதா எழுச்சிப் போராட்டங்கள் உச்சக் கட்டத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்க, மறுபுறம் இஸ்ரேலிய அதிகாரிகளுடன் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை என்பதைப் பலஸ்தீனியர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

தற்காலிகத் தீர்வுகளின் வழியே நிரந்தரத் தீர்வை நோக்கி நகர்வது என்கிற சித்தாந்தத்தில், அரபாத்துக்கு நம்பிக்கை உண்டு. அவரது மேடைப் பேச்சு வீடியோக்கள் இன்றும் நமக்குக் கிடைக்கின்றன. ஆக்ரோஷமாக 'ஜிகாது ஜிகாது ஜிகாது' என்று கை உயர்த்திக் கோஷமிடும் அந்த அரபாத்தைத்தான் பலஸ்தீனிய அரேபியர்களுக்குத் தெரியும். அந்த உத்வேகத்துக்கு ஆட்பட்டுத்தான் அவர்கள் இண்டிஃபதாவை மாபெரும் வெற்றிபெற்ற போராட்டமாக ஆக்கினார்கள்.

அவநம்பிக்கைக்கு ஆட்பட்டார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. அகண்ட பலஸ்தீனத்தின் ஒரே பெரிய தலைவராக அவரைக் கற்பனை செய்து பார்த்துவந்த மக்களுக்கு, அவரை ஒரு முனி சிபாலிடி சேர்மனாக நினைத்துப் பார்ப்பதில் நிறைய சங்கடங்கள் இருந்தன. அதைவிட, எங்கே அரபாத் விலை போய்விடுவாரோ என்கிற பயம் அதிகம் இருந்தது. அவரும் இல்லாவிட்டால் தங்களுக்கு விடிவு ஏது என்கிற கவலை. பாலஸ்தீனில் மட்டுமல்ல. உலகம் முழுவதிலும் வசித்துவந்த முஸ்லிம் சமூகத்தினருக்கும் அடிமனத்தில் இந்த பயம் இருக்கத்தான் செய்தது.

இந்த விவரங்களின் பின்னணியில், நாம் ஒஸ்லோ ஒப்பந்தத்துக்குள் நுழைவது சரியாக இருக்கும். இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமரசம்பேசி ஏதாவது நல்லது செய்துவைக்க முடியுமா என்று பார்த்ததைப் போல நோர்வே, அன்றைக்கு இஸ்ரேலுக்கும் பலஸ்தீனுக்கும் இடையில்கூட இப்படியானதொரு அமைதி முயற்சியை மேற்கொண்டது.

(தொடரும்)

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

12



# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

**தென்னாபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக்கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங்களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.**

கல்லூரி வாழ்க்கை மண்டேலாவுக்கு உற்சாகத்தையும் புதுத்தெம்பையும் அளித்தது. கல்லூரியில் பேராசிரியர் சிலரும் அவனுடன் நெருங்கிப் பழகினார்கள்.

அவர்களில் ஒருவரான கோசா வரலாற்றுப் பாடம் எடுத்த பேராசிரியர் ஜவாபு என்பவர் மண்டேலாவுடன் அன்பாகப் பழகினார்.

பல விடயங்களை அவனுடன் பகிர்ந்துகொண்டார். மண்டேலாவின் தந்தை காட்லாவைப் பற்றி மண்டேலாவுக்கே தெரியாத பல தகவல்களை அவர் சொன்னார். ஜவாபு ஆசிரியர் காட்லாவைப் பற்றி பேசிய அன்றிரவு மண்டேலாவுக்கு தூக்கமே வரவில்லை. தந்தையின் நினைவும் தாயின் பிரிவும் அவனை சோகத்தில் வாட்டியது.

ஒருவாறு தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டான்.

கல்லூரியில் மண்டேலாவுக்கு கோசா, இலத்தீன், ஆங்கிலம், வரலாறு, மானுடவியல், அரசியல், நிர்வாகவியல், உரோமானிய டச்சு சட்டம் என்று பல பாடங்கள் புகட்டப்பட்டன. கல்வி எனும் அருந்தனம் அழியாப் பெருந்தனம் என்பதைப் புரிந்துகொண்ட மண்டேலா கல்வியில் கண்ணாயிருந்தான். எதிர்காலமே கல்வியில்தான் தங்கியிருக்கிறது என்பதை புரிந்துகொண்டான். பெற்ற தந்தை காட்லாவும் வளர்த்த தந்தை ஜோங்கிந்தாபாவும் எதிர்பார்த்தபடி பிற்காலத்தில் கோஸாவுக்கு தலைவனாக வர்வேண்டும் என்ற உன்னத குறிக்கோளோடு கல்வியில் கவனத்தை செலுத்தினான். அவ்வப்போது பொழுதுபோக்கிற்காக புதிய தோழன் டேம் போவுடன் விளையாட்டுக்களிலும் ஈடுபட்டான்.

கல்லூரியில் ஒரு பிரச்சினை ஏற்பட்டது. கல்லூரியின் பழைய மாணவர்கள் புதிய மாணவர்கள்மீது ஆதிக்கம் செலுத்தினர். பழைய மாணவர்களே கல்லூரியின் விடுதிக்கு நிர்வாகிகளாக இருந்து புதிய மாணவர்களை வேலை வாங்கி தங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருந்தனர். இது புதிய மாணவனான மண்டேலாவுக்கு சற்றும் பிடிக்கவில்லை. என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தான். அச்சந்தர்ப்பத்தில் மண்டேலா முன்னர் படித்த உயர் பள்ளியில், மண்டேலாவுடன் நெருங்கிப் பழகிய ஒருவனை பழைய மாணவர்களில் ஒருவராக சந்தித்தான். பழைய நண்பருடன் பேசி பிரச்சினையை ஒருவாறு சுமூகமாக தீர்த்துவிடலாம் என்ற நம்பிக்கையில் நண்பருடன் பேசமுயன்றான்.

ஆனால் அவனோ தன் முகத்தை சுளித்துக்கொண்டு மண்டேலாவிடம் இருந்து தூரமாகினான். மண்டேலாவுக்கோ இவன் ஏன் இப்படி செய்கிறான் என்பது புரியாத புதிராக இருந்தது. திரும்பவும் நண்பனை அணுகி நெருங்கிப்பேச முயன்றபோது அவன் தன் முகத்தை சுளித்துக் கொண்டு "மண்டேலா நீ என்னுடன் பேசாதே! நீ நாகரிகமற்றவன், கிராமப்புற மனிதன், ஆங்கிலம்பேச தெரியாதவன், உனக்கும் எனக்கும் என்ன பேச்சு? என்னைத் தெரியும் என்று மற்றவர்கள் முன் காட்டிக் கொள்ளாதே. போ" என்று விரட்டினான். மண்டேலா செய்வதறியாது அவ்விடத்தைவிட்டு அவமானத்தோடு வெளியேறினான்.



(தொடரும்)





# சம்பூர் அகதிகளுக்கு வெற்றி



**ஏ.எச்.ஏ.ஹுஸைன்**

**ஒன்பது** வருடகால அகதி வாழ்க்கை, தீபச் சுடரேற்றிப் பிரார்த்தனை, எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், சாகும்வரை உண்ணா விரதம், உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் என்று தம்மால் முடிந்த எல்லா வகையான போராட்டங்களிலும், ஈடுபட்ட திருகோணமலை மாவட்டம், சம்பூர் பிரதேச மக்களுக்கு இப்பொழுது வெற்றி கிடைத்திருக்கின்றது என்பது எல்லோருக்கும் மகிழ்ச்சிதரும் செய்திதான்.

கடந்த வெள்ளிக்கிழமை (10.07.2015) அன்று உயர் நீதிமன்றம் சம்பூர் அகதி மக்களுக்குச் சார்பாக தனது தீர்ப்பை வழங்கியுள்ளது.

உயர் நீதிமன்றத்தில் சம்பூர் மீள் குடியேற்றத்தக்காக தீர்மானிக்கப்பட்ட 818 ஏக்கர் காணி சம்பந்தமான தீர்வு 10.07.2015 அன்று வழங்கப்பட்டிருக்கின்றது.

ஒரு தனியார் கம்பனி சம்பூர் மீள் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அது தங்களுக்கு தொழில்பேட்டையை அமைப்பதற்காக அப்போதைய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணி என்றும் அதனடிப் படையில் அந்த வழக்கை முன்னெடுப்ப தற்கு அவர்கள் கேட்ட அனுமதியை உச்ச நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

### சம்பூர் காணிகளைத் துப்புரவாக்க இருந்த தடை

மீள்குடியேற்றத்திற்காக விடுவிக்கப் பட்ட காணி தொடர்பான ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலுக்கு உயர் நீதி மன்றத்தினால் இடைக்கால தடை உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்டிருந்தது.

உயர் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப் பட்ட உத்தரவை காரணம்கூறி பொலிஸார் மக்களை வெளியேறுமாறு கேட்டுக் கொண்டனர்.

சம்பூர் பிரதேசத்தில் 818 ஏக்கர் காணி முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவினால் 2012.05.17 அன்று வெளியிடப்பட்ட முதலாவது வர்த்த மானி அறிவித்தலின்மூலம் கைத் தொழில் ஊக்குவிப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

2012.07.19 திகதியிடப்பட்ட மற்று மோர் வர்த்தமானி பிரகடனத்தின்மூலம் அந்தக் காணிகள் முதலீட்டு ஊக்குவிப்பு சபையிடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஜூன் 7ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வெளியிடப்பட்ட விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மஹிந்த ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்டிருந்த இந்த காணி சுவீகரிப்பு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் தொடர்பான இரு வர்த்தமானி பிரகடனங்களும் ரத்து செய்யப்பட்டிருந்தன.

குறித்த காணியில் முதலீடு செய்வதற்கு எதிர்பார்த்திருந்த முதலீட்டு நிறுவனங்கள் இதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தன.

இந்த மனுவை பரிசீலித்த உயர் நீதிமன்றம் வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்ய இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்துள்ளது. இது தொடர்பாக விளக்கத்தை முன்வைக்குமாறு அரச சட்டவாதிகளை கேட்டிருந்தது.

### சம்பூர் மக்களின் 9 வருடகால அகதி வாழ்க்கைக்கு முடிவு

கடந்த ஒன்பது வருட அகதி வாழ்க்கைக்கு முடிவு கிடைத்துவிட்ட பேரானந்தத்தில் திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் பகுதி மக்கள் இப்பொழுது இருக்கின்றார்கள்.

2006-04-26 ஆம் திகதியன்று கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் அப்போது இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவை இலக்குவைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன் எதிரொலியாக திருகோணமலை சம்பூர் பகுதிமீதுதான் முதன் முதலாக பதிலடி விழுந்தது.

இந்தப் பகுதியில் அரசாங்கப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக சம்பூர் பகுதியைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் தமது வாழ்விடங்களை விட்டு அப்போது வெளியேற நேரிட்டது.

> **சுழல் காற்றினால் வாரி இறைக்கப்படும் புழுதி, கட்டாந்தரையாக இருப்பதால் மழைக் காலங்களில் சேறும் சகதியுமாய் உள்ள நிலம், இன்னும் மழை அதிகமாகப் பெய்தால் இரவுமுழுவதும் குந்திக் கொண்டிருக்கும் நிலை.. இதுதான் இவர்களது வாழ்க்கையாகிப் போய் விட்டிருக்கின்றது. சம்பூர் மக்களுக்கு இனி மேல் வரப்பிரசாத காலம் என்றே சொல்லவேண்டும். தொடர்ந்தும் அகதி மக்கள் அகதி அந்தஸ்தோடு நடமாட இனியும் எவரும் அனுமதிக்கக் கூடாது.**

அன்று தொடங்கிய இவர்களின் அவல வாழ்வு இன்றளவும் நீடிக்கின்றது. கதியற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கும் இந்த மக்களின் வாழ்க்கை, இப்பொழுது அகதி முகாம்களிலே அகதி என்ற அந்தஸ்தோடு கழிகிறது. சம்பூர்ப் பகுதி என்பது திருகோணமலை மாவட்டத்தில் மூதூருக்குக் கிழக்கே உள்ள இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசமாகும்.

கிழக்கே வங்கக்கடலும் அதனோடு இணைந்த கடல் வளங்களும், ஏனைய பகுதிகள் விவசாயச் செழிப்பு மிக்க இடமாகவும் அமைந்துள்ளது.

நிலபுலன்களோடும், வசதி வாய்ப்புகளோடும் வாழ்ந்த மக்கள், அவர்களின் பூர்வீகப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த நாள் முதல் இன்றுவரை அகதி முகாம்களிலேயே நரகவேதனை என்று அவர்கள் விவரிக்கும் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு ஏக்கப்பெருமூச்சோடு காலம் கழிக்கின்றார்கள்.

மட்டக்களப்பிலிருந்து மூதூர் செல்லும் வழியில் அமைந்திருக்கிறது கிளிவெட்டி. இங்குதான் சம்பூர் பகுதி மக்களின் வாழ்க்கை அகதி முகாம்களுக்குள் முடக்கப்பட்டிருக்கிறது. தகரங்களால் அமைக்கப்பட்ட கொட்டில்கள். வெறும் கட்டாந்தரை, கிடுகுகளால் அல்லது பசளைப் பைகளைக் கொண்டு மறைக்கப்பட்ட பக்கவாட்டு திரைகள், வெயில் காலங்களில் தகிக்கும் உஷ்ணம், உள்ளே இருக்கமுடியாத புழுக்கம், சுழல் காற்றினால் வாரி இறைக்கப்படும் புழுதி, கட்டாந்தரையாக இருப்பதால் மழைக் காலங்களில் சேறும் சகதியுமாய் உள்ள நிலம், இன்னும் மழை அதிகமாகப் பெய்தால் இரவுமுழுவதும் குந்திக் கொண்டிருக்கும் நிலை. இதுதான் இவர்களது வாழ்க்கையாகிப் போய் விட்டிருக்கின்றது.

கிளிவெட்டி அகதி முகாமில் சம்பூர் மேற்கு, சம்பூர் கிழக்கு, கடற்கரைச் சேனை, கூனித்தீவு போன்ற கிராமங்களைச் சேர்ந்த 571 குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

அன்றிலிருந்து இன்றுவரைக்கும் சம்பூர் மக்கள் அனல் எறிக்கும் தகரக் கொட்டில்களில் கால்நீட்டித் தூங்க இடமின்றி கட்டாந்தரையில் கண்ணீரோடு காலம் கழிக்கிறார்கள்.

சம்பூர் மக்களின் காணிகளை அவர்களிடம் மீளக் கையளிப்பது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய நிறைவேற்றுக் குழு தீர்மானித்திருந்தது.

இந்த தீர்மானம் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் ஜே.வி.பி தலைவருமான அனுரகுமார திஸநாயக்கா "சம்பூர் பிரதேசத்தில் பாரம்பரியமாக வாழ்ந்த தமிழ் மக்கள் அங்கிருந்து முன்னைய அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்டு அவர்களது காணிகள் பல்தேசிய கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அங்கு வாழ்ந்த மக்கள் தமது சொந்தமண்ணில் மீள் குடியேற்றப்படாமல் இடம்பெயர்ந்தவர்களுக்கான அகதி முகாம்களில் வைக்கப்பட்டுள்ளார்கள்" என்றார்.

தமது பாரம்பரிய மண்ணில் மீள் குடியேற்றத்திற்காக 10 வருடங்களாக போராட்டம் நடத்திவரும் சம்பூர் பிரதேச மக்களை பொறுத்தவரை இந்த தீர்மானம் அவர்களுக்கு தமது மீள்குடியேற்றம் தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் நஸீர் அஹமட் தனது ஆட்சிக் காலத்தில் மூதூர் - சம்பூர் மக்கள் தமது பழைய இடங்களில்போய் குடியமர்ந்து அந்த மண்வாசனையில் கால் நீட்டித் தூங்கவேண்டும். அவர்கள் தமது சொந்த இடங்களிலிருந்து அகதிகளாகத் துரத்தப்பட்டிருக்கின்ற துயர நிலைமையை இனியும் நாம் அனுமதிக்க முடியாது என்றார்.

சம்பூர் மக்களுக்கு இது வரப்பிரசாத காலம் என்றே சொல்லவேண்டும். அகதி மக்கள் தொடர்ந்தும் அகதி அந்தஸ்தோடு நடமாட இனியும் எவரும் அனுமதிக்கக் கூடாது.



**மு.சந்திரகுமார்**
**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்**
தினமுரசு வாரமலருக்கு
வழங்கிய சிறப்புப் பேட்டி

# பொய்த் தேசியவாதிகளின் போலிக் கோஷங்களை நிராகரிக்க வேண்டும்!



**"போராளிகள் ஜனநாயக அரசியலில் ஈடுபடுவது ஒன்றும் புதிய விடயமல்ல. நாங்களும் ஆயுதப்போராட்டத்தின் வழியாக ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்தவர்கள்தான். நாங்கள் மட்டுமல்ல, ஈரோஸ், புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் என வேறு அமைப்புகளில் இருந்தவர்களும் அப்படி வந்திருக்கிறார்கள். ஜே.வி.பி போராளிகளும் ஆயுதப் போராட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு வந்திருக்கிறார்கள். இலங்கையில் மட்டுமல்ல, உலகத்தின் வேறு பல நாடுகளிலும் இப்படி ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகள் ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்திருக்கிறார்கள். ஏனையவர்களுக்கு உள்ள அத்தனை உரிமைகளும் இந்தப் போராளிகளுக்கும் உண்டு. நாங்கள் கடந்த காலங்களில் இந்தப் போராளிகளை மதித்து, அவர்களுக்கான உதவிகளைச் செய்திருக்கிறோம். அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு ஆதரவளித்திருக்கிறோம்."**

**கேள்வி:– நடைபெறப் போகின்ற பொதுத் தேர்தலை ஈ.பி.டி.பி எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது?**

**பதில்:–** முற்றிலும் புதிய முறையில், புதிய ஒழுங்கில் கையாளப்போகிறது. புதிய அரசியற் சூழலுக்கேற்றமாதிரி எம்மை ஒழுங்கமைத்திருக்கிறோம். எமது அரசியல் நடவடிக்கைகளும் தீர்மானங்களும் சர்வதேச சமூகத்திலும் உள்நாட்டிலும் வரவேற்றைப் பெறக் கூடியதாக இருக்கும். குறிப்பாகத் தமிழ் மக்களிடத்தில் செல்வாக்கைப் பெறும். காரணம், அப்படி எல்லாத் தரப்பிலும் வரவேற்பைப் பெறக்கூடிய மாதிரியான வெற்றிகரமான ஒரு பொறிமுறையும் சிந்தனை முறையும் எம்மிடம் உண்டு.

**கேள்வி:– ஈ.பி.டி.பி இம்முறை வீணைச் சின்னத்தில் கேட்கவுள்ளதாக அறிவித்துள்ளது. ஆனால் கடந்த தேர்தலில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டது. இரண்டுக்குமிடையிலான வித்தியாசம் என்ன?**

**பதில்:–** அன்றைய சூழலில் போரினால் பாதிக்கப்பட்டிருந்த மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதை முதன்மையான நோக்கமாகக் கொண்டிருந்தோம். அத்துடன் படைக்குறைப்பு, மக்களின் மீள் குடியேற்றம் போன்றவை முக்கியமான விடயங்களாக இருந்தன. இந்த இரண்டு பிரதான பிரச்சினைகளையும் நாங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றி இருக்கிறோம். அது ஒரு சாதனையே. அன்று எங்களுடைய மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் நாங்கள் முதன்மையாகக் கொண்டிருந்ததால்தான் அப்படியான ஒரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டி இருந்தது.

இதேவேளை அன்றைய சூழலில் நாங்கள் மட்டுமல்ல மலையகக் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், இடதுசாரிக் கட்சிகள் என நாட்டிலுள்ள ஏனைய தரப்பினரும் பொதுச் சின்னமொன்றில் நிற்க வேண்டிய நிலை இருந்தது.

இன்றைய சூழல் அவ்வாறானதல்ல. இன்றைய நிலைக்கேற்றமாதிரி, எமது மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கான முற்றிலும் புதிய பொறிமுறையில் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து எமது சின்னத்தில் போட்டியிடுகிறோம். கடந்த கால அனுபவங்களை மக்கள் படிப்பினையாகக் கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றையும் அவர்கள் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எமது நிலைப்பாட்டைப் புரிந்துகொண்டு எம்மை முழுமையாக ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

இதேவேளை கடந்த தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கிய வாக்குறுதிகளை நம்பி வாக்களித்த மக்கள், கூட்டமைப்பின்மீது நம்பிக்கை இழந்திருக்கிறார்கள். அவர்கள் எம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள்.

**கேள்வி:– நடைபெறப் போகின்ற தேர்தலில் கட்சியின் பலம் என்ன என நினைக்கின்றீர்கள்?, பலவீனம் என்ன?**

**பதில்:–** கட்சியின் பலம் என்பது எமது அர்ப்பணிப்பான உழைப்பும் மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்துச் செயற்படுவதும் சொல்வதைச் செய்துமுடிப்பதும் நடைமுறைக்குச் சாத்தியமானவற்றை மக்களிடம் எடுத்துரைப்பதுமாகும். அத்துடன், நாங்கள் முன்கூட்டியே தீர்க்க தரிசன-மாகச் சொன்ன பல விசயங்களே பின்னர் நடந்திருக்கின்றன. இப்பொழுது நடந்து கொண்டும் இருக்கின்றன. குறிப்பாக மாகாண சபை முறையை ஏற்றுக்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்றோம். இத்தனை ஆண்டுகால இழப்புக்குப் பிறகு இப்பொழுது அதுவே சாத்தியமாகியிருக்கிறது. அதே வேளை இது போதாது என்பது எங்கள் நிலைப்பாடு. இதிலிருந்து இன்னும் நாங்கள் அதிகமாகப் பெறவேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும். இப்படிப் பல.

பலவீனம் என்றால் கவர்ச்சிகரமாகப் பொய் சொல்லத்தெரியாமல் இருப்பதுதான்.

**கேள்வி:– முன்னாள் போராளிகளின் கட்சியான 'ஜனநாயகப் போராளிகள்' கட்சியை எவ்வாறு பார்க்கின்றீர்கள்? இக்கட்சி வரும் தேர்தலில் எவ்வாறான தாக்கத்தை செலுத்துமென நினைக்கின்றீர்கள்?**

**பதில்:–** போராளிகள் ஜனநாயக அரசியலில் ஈடுபடுவது ஒன்றும் புதிய விடயமல்ல. நாங்களும் ஆயுதப் போராட்டத்தின் வழியாக ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்தவர்கள்தான். நாங்கள் மட்டுமல்ல, ஈரோஸ், புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் என வேறு அமைப்புகளில் இருந்தவர்களும் அப்படி வந்திருக்கிறார்கள். ஜே.வி.பி போராளிகளும் ஆயுதப்போராட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு வந்திருக்கிறார்கள். இலங்கையில் மட்டுமல்ல, உலகத்தின் வேறு பல நாடுகளிலும் இப்படி ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட போராளிகள் ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்திருக்கிறார்கள். ஏனையவர்களுக்கு உள்ள அத்தனை உரிமைகளும் இந்தப் போராளிகளுக்கும் உண்டு. நாங்கள் கடந்த காலங்களில் இந்தப் போராளிகளை மதித்து, அவர்களுக்கான உதவிகளைச் செய்திருக்கிறோம். அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு ஆதரவளித்திருக்கிறோம்.

ஆனால், கடந்த காலங்களில் இந்தப் போராளிகளையும் இவர்களுடைய தியாகங்களையும் வைத்துப் பிழைத்தவர்கள், இப்பொழுது இந்தப் போராளிகள் பங்காளிகளாக வந்திருப்பதைக் கண்டு மிரண்டு போயிருக்கிறார்கள். பதறுகிறார்கள். அதனால் இந்தப் போராளிகளை நிராகரிக்க முற்படுகிறார்கள்.

எம்மைப் பொறுத்தவரை இவர்கள் இணைந்து செயற்படுவதற்கான ஒரே தரப்பாக நாங்களே உள்ளோம். உணர்வினாலும் வாழ்வினாலும் ஒத்த தன்மை உடையவர்களே இணைந்து செயற்பட முடியும். நாம் ஒருங்கிணையவேண்டிய சூழல் இப்பொழுது வந்திருக்கிறது என நம்புகிறேன்.

**கேள்வி:– தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் செயற்பாடுகள் அண்மைக் காலமாக அதிருப்தி தரக்கூடியதாக இருக்கின்றது. அதை உங்களுடைய வாக்குகளாக மாற்றுவதற்கு எவ்வாறான திட்டங்களை வைத்திருக்கின்றீர்கள்?**

**பதில்:–** நீங்கள் சொல்வது முற்றிலும் சரியானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு பல கதைகளைச் சொல்லி அவற்றை நம்ப வைத்த காலம்போய் விட்டது. மக்கள் மட்டுமல்ல, கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்த அரசியல் ஆய்வாளர்களும் புத்திஜீவிகளும்கூட இப்பொழுது பகிரங்கமாவே கூட்டமைப்பைக் கடுமையாக விமர்சித்துவருகிறார்கள்.

மக்களுக்காக உழைப்பதற்கும் தம்மை அர்ப்பணித்துச் செயற்படுவதற்கும் தயாரில்லாதவர்களின் கூட்டாக இன்று தமிழ்த்தேசியம் பேசுவோர் இருக்கிறார்கள். இதற்காகவே தமிழ்த் தேசியத்தைப் பேசுகிறார்கள் என்று மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். இதேவேளை உண்மையான தேசியப்பற்றுடன், மக்களுக்காக உழைப்பவர்கள் நாங்கள்தான் என்பதையும் மக்கள் புரிந்திருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியம் என்று சொல்வதால் எதுவும் நடந்துவிடாது. அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி, அவர்களை அகதிகளாக்கி, நலன்புரி நிலையங்களில் தங்கவைப்பதாகத்தான் முடியும். அல்லது மக்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறும் உணர்வை வளர்ப்பதாகும். இது தேசியமாகாது. பதிலாக மக்கள் தமது சொந்தமண்ணில் இருந்து கொண்டு, தமது கலை கலாசார பாரம்பரியங்களைப் பேண, தமது பொருளாதார நிலைமையை தாமே நிர்ணயிக்கக்கூடிய, தாய்மொழி, வாழ்விடம் இவற்றைப் பாதுகாக்கக் கூடிய நிலையே தேசியமாகும். அந்தத் தேசியத்தை சொந்த மண்ணில் வாழ்வதால் மட்டுமே பாதுகாக்கமுடியும்.


(தொடர்ச்சி 22 ஆம் பக்கம் பார்க்க)

# கிரீஸ் வாக்கெடுப்பு!

கலாசார பாரம்பரியம் மிக்க கிரீஸ் நாடு தற்போது பல இலட்சம் கோடி கடனில் மூழ்கியுள்ளது. ஐரோப்பிய யூனியன், மத்தியவங்கி, பன்னாட்டு நிதியம் மற்றும் ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், அமெரிக்கா, நெதர்லாந்து, இங்கிலாந்து, பெல்ஜியம், ஆஸ்திரியா, பின்லாந்து உள்ளிட்ட நாடுகளில் பாரியளவில் கடன்வாங்கியுள்ளது.

எனவே, நிதி நெருக்கடியை சமாளிக்கமுடியாமல் சிலநாட்களாக அனைத்து வங்கிகளும், பங்குச்சந்தையும் மூடப்பட்டன. ஏ.டி.எம்மில் பணமின்றி மக்கள் தவிக்கின்றனர். அதற்கு முன்பே கடன்கொடுத்த நாடுகள் பொருளாதார நெருக்கடியை தவிர்க்க சிக்கன நடவடிக்கைகளை எடுக்கும்படி கிரீசுக்கு நிபந்தனைகள் விதித்துள்ளது.




வரியை உயர்த்தவேண்டும். மானியங்கள் ரத்து செய்ய வேண்டும். சம்பளத்தை குறைக்கவேண்டும் என தெரிவித்தது. இதுபற்றி மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்த பிரதமர் அலெக்சில் டிப்ராஸ் முடிவுசெய்தார். உத்தரவிட்டார். அதன்படி ஜூலை 5, 2015 விறுவிறுப்பாக வாக்கெடுப்பு நடந்தது. வாக்குப் பதிவுமுடிந்ததும் வாக்கு எண்ணிக்கை நடந்தது. அதன் முடிவை கிரீஸ் மட்டுமின்றி உலகநாடுகள் முழுவதும் ஆவலுடன் எதிர்பார்த்தன.

சர்வதேச கடன்வழங்கும் அமைப்பின் நிபந்தனைகளை ஏற்பதில்லை என கிரீஸ் அரசும், பிரதமர் அலெக்சிஸ் சிப்ராசும் முடிவு செய்திருந்தனர். இந்த நிலையில் பொது வாக்கெடுப்பின் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதில் 61 சதவீதம் பேர் அரசின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அதாவது கடன் வழங்கிய அமைப்புகள் மற்றும் நாடுகளின் நிபந்தனைகளை ஏற்கக்கூடாது- 'NO' எனக் கூறியுள்ளனர்.

மீதமுள்ள 39 சதவீதம் பேர் அரசின் நிலைப்பாட்டுக்கு எதிராக வாக்களித்து உள்ளனர். அதாவது நிபந்தனைகளை ஏற்க வேண்டும்- 'YES' எனத் தெரிவித்துள்ளனர். பொது வாக்கெடுப்பில் வெற்றிபெற்றதை தொடர்ந்து அரசின் ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். எதென்சில் உள்ள பாராளுமன்ற கட்டடம் முன்பு சின்டாக்மா சதுக்கத்தில் கிரீஸ் நாட்டு கொடியுடன் திரண்டு ஆடிப்பாடி கொண்டாடினார்.

இது குறித்து பிரதமர் அலெக்சிஸ் சிப்ராஸ் டெலிவிஷனில் உரை நிகழ்த்தினார். அப்போது, "இன்று நாம் ஜனநாயகத்தை கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம் என்றார். மேலும் இந்த ஞாயிறு ஐரோப்பிய வரலாற்றில் மிகவும் ஒளிமயமான நாள்" என்றும் வர்ணித்தார்.

"மிகவும் கஷ்டமான சூழ்நிலையிலும் ஜனநாயகத்தை பிளாக் மெயில் செய்ய முடியாது" என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது எனப் பெருமிதத்துடன் கூறினார். கடன்வழங்கிய நாடுகள் மற்றும் அமைப்பின் நிபந்தனைகளை ஏற்கமுடியாது என மக்கள் வாக்களித்து உள்ளதால் ஐரோப்பிய நாடுகள் கூட்டமைப்பில் இருந்து கிரீஸ் வெளியேறும் சூழ்நிலை ஏற்படலாம்.

மேலும் 'A+Nuh' நாணயத்தையும் பயன்படுத்த முடியாது. இந்த நிலையில் கடன் கொடுத்த நாடுகள் கிரீஸ் மீது நடவடிக்கை எடுக்கும் நிலை உள்ளது. அதை கிரீஸ் எப்படி சமாளிக்க போகிறது என்ற ஏக்கமும் உள்ளது.

ஆனால் பொது வாக்கெடுப்பு முடிவுகள் வெளிவந்தபோது இரவு ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கலும், பிரான்ஸ் அதிகர் பிரான்கோயிஸ் ஹோலண்டேயும் தொலைபேசியில் பேசினார். அதன் பின்னர் கிரீஸ் மக்கள் வாக்களிப்புக்கு மதிப்பளிக்கப் போவதாக ஜெர்மனி பிரதமர் மெர்கல் முடிவு செய்துள்ளார்.

இந்த பரபரப்பான சூழ்நிலைக்கு இடையே கிரீஸ் நாட்டின் நிதி மந்திரி யானிஸ் வருபாகிஸ் தனது பதவியை இராஜினாமா செய்தார். கடன்வழங்கிய ஐரோப்பிய நாடுகளின் நிபந்தனைகளை ஏற்கவேண்டாம் எனப் பெரும்பான்மை மக்கள் வாக்களித்துள்ளதை அரசு வரவேற்று இருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த முடிவை அவர் எடுத்துள்ளார். சிக்கன நடவடிக்கையை அமுல்படுத்த எதிர்ப்பு தெரிவித்து வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதை தொடர்ந்து பிரதமர் அலெக்சிஸ் சிப்ராஸ் ஆதரவாளர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனால் கிரீஸ் நாட்டின் பண நெருக்கடி உடன் தீராது. ஐரோப்பிய யூனியனுக்கு எதிராக பெரும்பான்மை மக்கள் வாக்களித்ததால் அதில் இருந்து கிரீஸ் விலகலாம். யூரோ நாணயம் பயன்படுத்த முடியாது போகலாம் எனவும் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்த நிலையில் அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி முடிவுசெய்ய யூரோவை பொது நாணயமாக பயன்படுத்தும் ஐரோப்பிய யூனியன் உச்சி மாநாட்டை கூட்ட முடிவுசெய்தது.

அதன்படி இந்த மாநாடு கூடியது. அதில் கிரீஸ் மக்களின் உணர்வுகளை மதித்து அதற்கு கூடுதலாக நிதி உதவியளிப்பது பற்றி ஆலோசனை நடத்தப்பட்டது.

இதற்கிடையே ஐரோப்பிய மத்திய வங்கி கிரீஸ் நாடு தன்னிடம் வாங்கிய 350 கோடி யூரோ கடன்தொகையை செலுத்தவேண்டும் என கெடுவிதித்துள்ளது. அதன்படி கடன்தொகையை கிரீஸ் செலுத்தாவிட்டால் அவசரகால கடன் உதவியை ஐரோப்பிய மத்திய வங்கி முற்றிலும் நிறுத்திவிடும்.

கடன்சுமை காரணமாக கிரீஸ் வங்கிகள் பணமின்றி மிகவும் சிரமப்படுகின்றன. இந்த நேரத்தில் ஐரோப்பிய மத்தியவங்கி அவசரகால கடன் வழங்குவதை நிறுத்திவிட்டால் கிரீஸ் வங்கிகள் அனைத்தும் முற்றிலும் தனது செயற்பாட்டை இழக்கநேரிடும்.

எனவே, ஐரோப்பிய நாடுகளின் முடிவே கிரீஸ் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் என சர்வதேச பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள கிரீஸை கடனில் இருந்து மீட்க ஐரோப்பிய யூனியன், ஐரோப்பிய மத்திய வங்கி, சர்வதேச நிதியம் ஆகியவை பரிந்துரைத்த கடன் மீட்புத் திட்டத்தை அந்நாட்டு மக்கள் நிராகரித்து உள்ளனர்.

இதன்மூலம் கடனைத் திரும்ப செலுத்துவதற்கான பொருளாதாரக் கட்டுப்பாடுகளையும், சிக்கன நடவடிக்கைகளையும் ஏற்கமாட்டோம் என்பதை பிற ஐரோப்பிய நாடுகளுக்கு கிரீஸ் மக்கள் உணர்த்தியுள்ளனர்.

கடன் மீட்புத் திட்டத்துக்கு ஆதரவாக 'ஆம்' என்று வாக்களிக்கவேண்டுமென்று ஒரு பேரணியும், அதற்கு எதிராக 'இல்லை' என்று வாக்களிக்கவேண்டுமென்று மற்றொரு மாபெரும் பேரணியும் நடந்தது. கடன் மீட்பு திட்ட நிபந்தனைகளை ஏற்கக்கூடாது என்று கிரீஸ் பிரதமர் அலெக்சிஸ் ஸிப்ரஸ் பொதுமக்களை கேட்டுக்கொண்டார். இப்போது அவரது கோரிக்கையை பெரும்பான்மையான பொதுமக்கள் ஏற்றுக் கொண்டுள்ளது தெரியவந்துள்ளது.

"இது ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி. எந்த ஒரு நெருக்கடியான சூழ்நிலையிலும் ஜனநாயகத்தை மிரட்டி பணியவைத்துவிட முடியாது என்பதை கீரிஸ் மக்கள் உணர்த்தியுள்ளனர்" என்று அலெக்சிஸ் ஸிப்ரஸ் கூறியுள்ளார்.

ஐரோப்பிய யூனியன் நாடுகளில் ஒன்றான கிரீஸ், கடந்த 5 ஆண்டுகளாக கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. அந்நாட்டுக்கு நிதி உதவி அளித்துவந்த ஐரோப்பிய யூனியன் பலமுறை சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்திய நிலையிலும் அதனை அந்நாட்டு மக்கள்மீது திணிக்க கிரீஸ் மறுத்துவந்தது.

சர்வதேச நிதியத்திடம் பெற்ற கடனில் ஒரு தவணையான ரூ.10 ஆயிரத்து 500 கோடியை கடந்த ஜூன் 30ஆம் திகதிக்குள் கிரீஸ் செலுத்த தவறியது. இதன்மூலம், கடனைசெலுத்த தவறிய முதலாவது வளர்ந்த நாடு என்ற அவப்பெயர், ஐரோப்பாவுக்கே நாகரிகத்தை கற்றுக் கொடுத்த நாடு என்ற பெயர் பெற்ற கிரீஸுக்கு வந்தசேர்ந்தது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள அந்நாட்டு பிரதமர் அலெக்சிஸ் ஸிப்ரஸ் 2 ஆண்டுகள் கால அவகாசமும், கூடுதல் கடனுதவியும் கேட்டார். ஆனால், இதனை ஐரோப்பிய நாடுகளின் அமைச்சரவை ஏற்கவில்லை.

கிரீஸில் பொருளாதாரம் முற்றிலும் சரிவதைத் தடுக்கும் நடவடிக்கையாக சமீபத்தில் வங்கிகள் மூடப்பட்டன. ஏ.டி.எம்-களில் எடுக்கும் பணத்தின் அளவுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

கிரீஸ் நாட்டுக்கு கடன் அளித்து வரும் சர்வதேச நிதியம், ஐரோப்பிய நிதி அமைப்பு ஆகியவை கிரீஸுக்கு நெருக்கடி அளித்தநிலையிலும், கொடுத்த கடன்களை திருப்பி செலுத்துமாறு உடனடியாக அறிவுறுத்தவில்லை.

இவ்வாறு அறிவுறுத்தினால், யூரோவை பொது நாணயமாக கொண்ட கிரீஸ் நாடு ஐரோப்பிய கூட்டமைப்பிலிருந்து வெளியேற வேண்டிய சூழல் உருவாகும் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### கிரீஸ் வாக்கெடுப்பு: மக்கள் வெற்றி - முதலாளிகள் தோல்வியூ

ஐ.எம்.எ.ப் மற்றும் ஐரோப்பிய கந்து வட்டிக்காரர்களின் நிர்ப்பந்தத்தை தூக்கி எறிந்திருக்கிறார்கள், கிரீஸ் மக்கள். கிரீஸுக்கு ஏகாதிபத்தியங்கள் உருவாக்கிய பொருளாதார நெருக்கடி எனும் அடக்குமுறையின் விளைவாக கடந்த சில ஆண்டுகளாக தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

இந்த சிக்கன நடவடிக்கையை ஏற்பவர்கள் 'ஆம்' என்றும், ஏற்காதவர்கள் 'இல்லை' என்றும் வாக்களிக்கவேண்டும். அதன்படி ஏகாதிபத்தியங்களுக்கு ஆதரவு 'இல்லை' என்று கிரீஸ் மக்கள் உறுதியாக வாக்களித்திருக்கிறார்கள்.

இனி கிரீஸ் நாடு, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறி, யூரோ நாணயத்தை பயன்படுத்தமுடியாமலும் போகலாம் என்பதால் அமெரிக்கா தலைமையிலான வல்லரசு நாடுகள் பீதியில் உறைந்துள்ளன. கிரீஸ் முடிவுகள் வெளியானவுடன் யூரோவின் மதிப்பு சரிந்துள்ளது. பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் அதிபர்கள் உடன் கூடி இனி என்ன செய்யலாம் என்று ஆலோசித்தார்கள்.

**தொகுப்பு**
**வேணுகிருஸ்ணா**

இந்த முடிவு ஒரு தொடக்கம். இதை ஏகாதிபத்தியங்கள் அப்படியே எளிதாக எடுத்துக்கொள்ளமாட்டார்கள். பிடி இறுகும். கிரேக்கத்தின் அலெக்சிஸ் டிசிப்ரஸ் இனி பன்னாட்டு நிதி நிறுவனங்களோடு சமர்சமாக பேசி கடன்பெறுவது, நெருக்கடியை தீர்ப்பது என்பதெல்லாம் கடினம். அதேநேரம் இந்த மக்கள் ஆதரவை வைத்துக் கொண்டு சுயபொருளாதாரத்தை ஊக்குவித்து, ஒரு பொருளாதாரச் சீர்திருத்தப் பாதையை தொடக்கினால் அது இந்த எதிர்ப்பை களத்தில் சாதிப்பதற்கு உதவும். வாழ்த்துவோம், கிரேக்கத்தின் மக்களை!




**இப்பகுதிக்கு சிறுவர்களிடம், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**

## இந்தியாவின் நீல நகரம்

இந்தியாவின் பச்சை நகரம் என்ற சிறப்பை சண்டிகர், காந்தி நகர் பெற்றுள்ளன. சிவப்பு நகரம் என்ற சிறப்பைசிக்கிமின் தலைநகர் கேங்டாக் பெற்று உள்ளது. 'நீல நகரம்'என்ற சிறப்பை ராஜஸ்தானின் ஜோத்பூர் பெற்றுள்ளது. ஜோத்பூர் வீடுகளின் வெளிப்புற சுவர்கள் நீல நிறத்தில் மட்டுமே இருக்கும். ஜோத்பூரில் உள்ள மலையில் இருந்து பார்த்தால் நகரமே நீல நிறத்தில் காட்சி தரும். ஏற்கனவேஇந்தியாவின் சூரிய நகரம் என்ற சிறப்பை ஜோத்பூர் பெற்றுள்ளது. இந்தியாவில் எல்லா நாட்களிலுமே சூரிய வெளிச்சம் அதிகமுள்ள நகராக ஜோத்பூர் உள்ளது.

## வாரம் ஒரு திருக்குறள்



### கள்ளாமை

**அளவின் கண் நின்றொழுகல் ஆற்றார்**
**களவின்கண்**
**கன்றிய காத லவர்.**

களவுசெய்து பிறர் பொருள் கொள்ளுதலில் மிக்க விருப்பம் உடையவர், அளவு (சிக்கனம்) போற்றி வாழும் நெறியில் நின்று ஒழுக மாட்டார்.

குறள் 286

## சில தகவல்கள்




**நாம் தூங்கும்போது, வாசனையை உணர முடியாது!**

**பூமிப் பந்து உருண்டையாக இருப்பதாக சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே கிரேக்கத் தத்துவமேதை தொலமி கூறியிருக்கிறார்!**



**மீன்களிலே மிகவும் வேகமாக நீந்துவது செயில் ஃபிஸ் (SAL FISH). இது நெடுஞ்சாலையில் செல்லும் ஒரு காரின் வேகத்துக்கு இணையாக நீந்தும்!**





# "விளையும் பயிரின் முளை!"

அதைப்போலவே பெரியார்களின் நினைவுவரும் போதெல்லாம் சந்திரனின் நினைவுகளும் தோன்றும். பல விஞ்ஞானிகளும், மேதைகளும் தலைநிமிர முடியாத வறுமையிலும், உணவுக்காகத் திண்டாடும் கஸ்டத்தின் மத்தியிலே போற்றுதற்கரிய ஆற்றல் களையும் வெளிக்கொணர்ந்தனர்.

சந்திரனும் அவர்களைப் போன்றவனே. எத்தனையோ நாட்கள் காலைச் சாப்பாடு இல்லாமல்கூடப் பாடசாலை வந்துள்ளான். அதனை அறிந்து சேகரன். இடைவேளைத் தேனீருக்காக எடுத்துச்செல்லும் சிறு தொகையில் அவனுக்கு உணவு வாங்கிக் கொடுத்ததும் ஞாபகத்தில் வந்து தைத்தது.

சேகரன் செய்துள்ள அந்நன்றி களுக்கு. சந்திரனால் பிரதி உபகாரமாக என்னதான் செய்துவிட முடியும்? தன்னளவில் அறிந்துகொள்ளும் சேகரனுக்கும் பங்கிட்டுக்கொள்வதால், அவனும் பயனடையுமாறு அது ஒன்றையே அவனால் செய்யவும் முடிந்திருந்தது.

எவ்விதக் கஸ்டங்கள் சூழ்ந்தாலும், கல்வியைத் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டும். எமது இரு கண்மணி களுக்கும் மேலாய் பாதுகாக்கப்பட வேண்டிய செல்வம் அது. கல்வி அறிவில்லாத ஒருவன் வாழ்க்கை எவ்வித அர்த்தமும் இல்லாதது...


எல்லாரும் தன்னால் இயன்றளவுக் குக் கற்க முயற்சிக்கவேண்டும்..

"கல்விச்செல்வம் போன்று எதுவுமே மனிதனை வாழவைக்காது..."

இவ்விதமாகப் பயனுள்ள கருத்துக் களை சேகரனிடம் கூறிக்கொள்வான் சந்திரன். அதனாலேயே அவன் வேளாவேளைக்குச் சாப்பாடு இல்லாவிட்டாலும் வகுப்பு நேரங்கள், நாட்கள் தவறவிடாமல் பேணுகிறான் என்றும் புரிந்திருந்தான் சேகரன்.

ஒருநாள் அந்திசாயும் நேரம்!

சேகரனும், தந்தையும் கடை வீதிக்குச் சென்று இருந்தனர்.



பரமண்ணா

(தொடரும்)

## பாலவ் தீவு...

இந்த அற்புதமான, அழகுமிக்க தீவு, பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமைந் துள்ளது. கடல்வாழ் உயிரின ஆராய்ச் சியாளர்கள், இங்கே எழுநூற்றுக்கும் அதிகமான பவளப் பாறை வகைகளும், 1500 மீன் வகைகளும், 80 கடல் ஏரிகளும் உள்ளதாகப் பதிவு செய்துள்ளனர். இந்த பாலவ் பவளப் பாறைகள் பலகோடி ஆண்டுகள் வரலாறு கொண்டதாகும்.

ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த ரைலோபஸ் என்ற மாலுமி என்ப வரால் தான், 1543ஆம் ஆண்டில் இந்த பாலவ் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.




## அடமஸ்!



கண்ணாடி மட்டுமல்ல, செரமிக்ஸ், பாறைகள் போன்றவற்றையும் அறுக்க, வைரம்தான் பயன்படுத்தப்படுகிறது. வைரம் எந்தவொரு மெட்டலையும்விட அதிகக் கடினத்தன்மை வாய்ந்ததால் கண்ணாடி போன்றவற்றைக் கூர்சிதறாமல், வரை பிளேடுமூலம் அறுக்கமுடிகிறது.

முக்கியமாகக் கண் அறுவைச்சிகிச்சையில் பயன்படுகிறது. பெரும் பாறைகளைக் குடைந்தெடுக்க வைரத்துண்டுகளே பயன்படுகிறது. செயற்கை வைரங்கள் தொழிற்சாலைகளில் பெரும் பங்கு வகிக்கிறது. மருத்துவத்துறை பயன்பாட்டில் உண்மையான வைரமே பயன்படுத்தப்படுகிறது. டயமண்ட் என்பது கிரேக்க வார்த்தையான அடமஸ் என்பதிலிருந்து மருவியது. இதன் அர்த்தம், வெல்ல முடியாது என்பதாகும்.



சிறந்த வர்ணத்தீட்டுப் பரிசு பெறும் ஓவியம்

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 27.07.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1105**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1105**

என்.ஐஸ்வர்யா,
ஆலங்கேணி, கிண்ணியா.

பரிசுக்குரியவர்: 1103

பாராட்டுக்குரியவர்கள்

01. எம்.நந்திதா, கண்டாவளை, கிளிநொச்சி.
02. கா.நிருஜன், பரந்தன், கிளிநொச்சி.
03. எஸ்.கவிந்தா, நாரந்தனை, ஊர்காவற்றுறை.
04. எவ்.எவ்.நிஸாட், வலஸ்முல்ல.
05. மா.லதுசன், பிரதான வீதி, செம்பியன்பற்று.
06. ந.நிர்மலன், பூவரசங்குளம், வவுனியா.
07. வ.சர்மி, பேராதனை, கண்டி.
08. ம.சிந்துஜன், கொள்ளுப்பிட்டி.

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 99



> அமீனின் உத்தர வின்படி சியம்பா கடும் கண்காணிப்புக்கு உள்ளானார். சியம்பா வுக்கும் தன்னை கண்காணிக்கிறார்கள் என்பது ஓரளவு புரிந்துவிட்டது.

# இடி அமீன்

தனிப்பட்ட விவகாரத்தில் கருத்துக்கூறினால் அமீன் கோபப்படக்கூடும் என்பதால், அதுபற்றிய தனது அதிருப்தியை சியம்பா வெளிக்காட்டவில்லை.

போயிங் விமானக் கொள்வனவு பற்றி சியம்பா கூறியதைக்கேட்ட அமீன், சிறிது யோசித்தான்.

உமது துணிச்சல் எனக்குப் பிடித்திருக்கிறது. என்னோடு வேறு யாரும் இப்படி பேசமாட்டார்கள். ஆனால் உமது கருத்து எனக்கு பிடிக்கவில்லை. நாட்டின் பாதுகாப்புக்காகத்தான் போயிங் வாங்குகிறேன், பாதுகாப்புக்காக செலவுசெய்வது தவிர்க்க முடியாது என்றான்.

அசட்டுத்துணிச்சலில் தனது அபிப்பிராயத்தை முதலில் கூறிய சியம்பா அமீன் பதில்கூறும் போது தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

வம்பை விலைகொடுத்து வாங்குவானேன்?! என்று மனதை மாற்றிக்கொண்டார்.

அமீனது பதில் தனக்கு திருப்தியளித்தது போல மௌனமாக இருந்துவிட்டார்.

“ஏன் மௌனமாகிவிட்டீர்? நான் கூறியது பிடிக்கவில்லையா? என்றான் அமீன்.”

“இல்லையில்லை, நீங்கள் கூறுவதிலும் அர்த்தம் இருக்கிறது! என்று அப்பட்டமாகப் பொய் சொன்னார் சியம்பா.

உலகின் மிகக்கொடிய சர்வாதிகாரி முன்புதான் அமர்ந்திருக்கிறோம். இங்கு அபிப்பிராயங்களைவிட அடங்கிப்போவதே புத்திசாலித்தனம் என்று சியம்பா தீர்மானித்துவிட்டார். தான் அவசரப்பட்டு அபிப்பிராயம் சொன்னதற்காக வருத்தப்பட்டுக் கொண்டார்.

சியம்பாவின் பதிலில் உண்மையில்லை என்பதை அமீன் புரிந்து கொண்டான். அப்படிப் புரிந்து கொண்ட நொடியில் சியம்பாமீது சந்தேகமும் அவ்ன் மனதில் உதித்தது.

சிரித்தபடியே சியம்பாவுக்கு விடைகொடுத்தனுப்பிய அமீன், தனது மேசையில் இருந்த சிவப்பு நிற தொலைபேசியை சுழற்றினான்.

புலனாய்வுப் பிரிவுடன் நேரடி தொடர்புக்கு அந்தத் தொலைபேசியைத்தான் அமீன் உபயோகப்படுத்தினான்.

மறுமுனையில் பவ்வியமாக வணக்கம் சொன்ன புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளரிடம் அமீன் “கலாசார அமைச்சர் சியம்பாமீது ஒரு கண் இருக்கட்டும். அவரது தொலைபேசிகளிலும் காதை வைத்து இருக்கவேண்டும். 24 மணி நேரமும் கண்காணிப்பில் இருக்க வேண்டும். அவரும் அவரது குடும்பமும்!”

அமீனின் உத்தரவின்படி சியம்பா கடும் கண்காணிப்புக்கு உள்ளானார். சியம்பாவுக்கும் தன்னை கண்காணிக்கிறார்கள் என்பது ஓரளவு புரிந்துவிட்டது.

இடி அமீனுடன் தொடர்பு கொண்ட சியம்பா, “எனக்குப் பயமாக இருக்கிறது! என்றார்.”

“எனது அமைச்சர் நீங்கள்! உங்களுக்கே பயமா?” என்று சிரித்தவன், “நான் இருக்க பயம் எதற்கு? என்றான்.

“சந்தேகத்துக்குரிய சிலர் என்னை பின் தொடர்கின்றனர். என் உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்று பயமாக இருக்கிறது!” என்றார்.

“உங்கள் உயிருக்கு யார் குறிவைக்கப் போகிறார்கள். உங்களுக்குத்தான் எதிரிகளே கிடையாது” என்ற அமீன், “எதற்கும் இப்போதே உங்களுக்கு பாதுகாப்பை அதிகரிக்க உத்தரவிடுகிறேன். அஞ்சாது இருங்கள்” என்றான்.

உடனடியாக புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளருடன் தொடர்புகொண்ட அமீன், “எந்த வேசி மக்களை சியம்பாவை கண்காணிக்க அனுப்பியா?” என்றான்.

புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் அதிர்ந்துபோய் “தாங்கள் தானே கண்காணிக்குமாறு உத்தரவிட்டிருங்கள்” என்று தயங்கித் தயங்கி பவ்வியமாகக் கூறினான்.

“நீ புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பாள இருப்பதைவிட பிடுங்கிக் கொண்டிருக்கலாம்” என்று கத்திய அமீன், “நாம் கண்காணிக்கிறோம் என்பதை சியம்பா கண்டுபிடித்துவிட்டார். நாம்தான் கண்காணிக்கிறோம் என்றுதான் அறியாததுபோல என்னிடமே புகார் கூறுகிறார். இதுதான் உங்கள் புலனாய்வுத்துறையின் இலட்சணமா?” என்றான். மறுமுனை மௌனம் சாதித்தது.

(தொடரும்..)

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 634

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | |
| 19 | | 21 | 22 | 23 | |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 632 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ம | 2 னி | 3 தா | 4 பி | 5 மா | 6 னி |
| 7 கா | 8 வ | 9 மா | 10 சா | 11 ச | 12 க |
| 13 த் | | 15 த | 16 லா | | 18 ல் |
| 19 து | 20 லா | 21 ந் | 22 ர் | 23 த | 24 நெ |
| 25 மா | 26 த | 27 ர | 28 ர் | | 30 க் |
| | 32 லி | 33 ம் | | 35 வா | 36 னி |

**மேலிருந்து கீழ்**

01. துரோபதைக்கு இப்படியும் பெயருண்டு.
02. ஒரு மரம் (குழம்பியுள்ளது)
03. கெடுத்தல் (குழம்பியுள்ளது)
04. தமிழ் பிறந்த நாடு. இதன் தலைநகர் மதுரை.
05. செம்மணிகளால் செய்த கழுத்தணி. (குழம்பியுள்ளது)
26. சந்திரன் ; பரமன்.
30. ஏழனுருபு ; முதல். (திரும்பியுள்ளது).

**இடமிருந்து வலம்**

01. வீணாகானபுரம் என்று அழைக்கப்பட்ட நகரம்.
07. மாயத்தோற்றம். (குழம்பியுள்ளது)
13. உயர் கல்லூரிகளில் பழைய மாணவர்களால் புதிய மாணவர்களுக்கு நடத்தப்படுவது. (குழம்பியுள்ளது)
21. ஒருபக்கம் ; தோள்.
25. ஒளி ; கடவுள். (திரும்பியுள்ளது)
28. அழிப்போன்.
31. தவத்தோன். (திரும்பியுள்ளது)
34. கனு ; பிடிவாதம். (திரும்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **27.07.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - **634**
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.632 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

மு.பவிந்தா, நல்லூர் முன்வீதி, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
02. ப.காவேரி, தெல்லிப்பளை மேற்கு, தெல்லிப்பளை.
03. மா.காயத்திரி, ரெட்பானா, விசுவமடு.
04. நா.திருவேங்கடம், நயினாதீவு.
05. என்.குணசீலன், நுணாவில் தெற்கு, நுணாவில்.
06. ந.சத்தியா, ஹொரவப்பொத்தானை.
07. ம.தவராணி, மடு, மன்னார்
08. எம்.அஸ்வர், மாளிகாவத்தை.
09. ச.பவதாரணி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
10. அ.யாதவி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.




## ரஜினிக்குப் பிறகு நான்தான் – விஜய்

ரஜினிக்கு பிறகு நான்தான். மீண்டும் நிரூபித்த விஜய் சூப்பர் ஸ்டார் ரஜினிக்கு பிறகு அந்த இடத்தை யார் பிடிப்பார்கள் என்று ஒரு பெரிய போட்டியே நடந்துவருகின்றது. இதில் முதல் வரிசையில் இருப்பவர்கள் விஜய், அஜித்தான்.

அந்தவகையில் எந்திரன் படத்திற்காக ரஜினி ரூ 40 கோடி சம்பளமாக பெற்றதாகக் கூறப்பட்டது. மேலும், ஆசியா கண்டத்திலேயே அதிக சம்பளம் வாங்கும் நடிகர் எனவும் கூறப் பட்டது. தற்போது விஜய் தன் அடுத்த படத்திற்காக ரூ 30 கோடி சம்பளமாக பெற்றிருப்பதாக பிரபல வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது. இதை வைத்து பார்க்கையில், ரஜினிக்கு பிறகு இளைய தளபதி விஜய்தான் அதிக சம்பளம்பெருவதாக அதில் குறிப்பிட்டுள்ளனர்.

## தனுஷின் சாதனை

தற்போது இந்திய சினிமாவே வியந்து பார்க்கும் நடிகர்களில் ஒருவர், இவர் நடிப்பில் விரைவில் வெளிவரவிருக்கும் படம்தான் மாரி.

இப்படத்தின் ட்ரைலர் சமீபத்தில் வெளிவந்து ரசிகர்களை வெகுவாக கவர்ந்துவருகின்றது, அது மட்டுமின்றி ரஜினி, கமல், விஜய், அஜித் என பல ரீமேக் வெர்ஷன் வந்து கொண்டே இருக்கின்றது.

இந்நிலையில் கடந்த வருடம் வெளிவந்த வேலையில்லா பட்டதாரி படத்தின் ட்ரைலர் தற்போதுவரை 3 மில்லியன் ஹிட்ஸை தொட, மாரி 2 வாரத்தில் 3 மில்லியன் ஹிட்ஸை எட்டி, அவர் சாதனையை அவரே முறியடித்துள்ளார்.

## அது மட்டும் நடக்க

சிம்புதேவன் இயக்கத்தில் புலி படம் மிக பிரமாண்டமாக உருவாகியுள்ளது. சமீபத்தில் வந்த இப்படத்தின் டீசர் கூட ரசிகர்களை வெகு வாக கவர்ந்தது.




## வாழவைக்கும் தெய்வம்

அஜித் நடிப்பதை காட்டிலும் மற்றவர்களுக்கு உதவிசெய்வதை முக்கியமாக கருதுபவர். அவரால் பலர் நல்ல நிலைமைக்கு வந்து உள்ளனர். தற்போது அஜித்தால் நல்ல நிலைமைக்கு வந்திருப்பவர் அப்புக்குட்டி என்கிற சிவபாலன். இப்பெயரை கேட்டதும் நாம் அனை வருக்கும் வருவது அஜித் எடுத்த அப்புக்குட்டி புகைப்படங்கள்தான். இந்த புகைப்படங்கள் வலைத்தளங்களில் பரவி ட்ரெண்டாகி இருந்தது. இதுபற்றி சிவபாலன் சமீபத்தில், அஜித் அவர்கள் எடுத்த போட்டோக்களால் என் வாழ்க்கையே மாறிவிட்டது. இந்த புகைப்படங்கள் வெளி யான பிறகு தனக்கு நிறைய படவாய்ப்புகள் கிடைக்கின்றன. இதற்கு காரணம் அஜித் அவர்கள்தான், அவரை நான் மறக்கவேமாட்டேன் என்று கூறியுள்ளார்.



## தூங்காவனம் படத்தில் பிரபல நடிகர் வில்லனா?

பாபநாசம் வெற்றிக் களைப்பில் இருக்கும் கமல்ஹாசன் இரவு நேரங்களில் தூங்காவனம் படப்பிடிப்பில் இரவு தூக்கம் இல்லாமல் ஈ.சி.ஆரில் நடித்து வருகிறார். கமல் இப்படத்தை மிக விரைவில் முடிக்க திட்டமிட்டு உள்ளதால் படப்பிடிப்பு வேகமாக நடந்துவருகிறது. இப்படத்தின் நடிகர்கள் தேர்வில் மிகுந்த கவனம்செலுத்தும் கமல், பாபநாசம் படத்தில் பொலிஸ் ஐ.ஜி வேடத்தில் நடித்த ஆஷா சரத்தை தூங்கா வனம் படத்தில் தனது மனைவியாக்கி உள்ளார். மேலும் இப்படத்தின் வில்லன் வேடத்தில் ஒரு பிரபல முன்னணி நடிகர் நடித்துவருவதாக தகவல் கசிந்துள்ளது. இந்த தகவலை வெளியே கசியவிடாமல் பாதுகாத்துவருகின்றனர். நமக்கு கிடைத்த தகவல்படி கமல்ஹாசன் நெருங்கிய நண்பரான மாதவன் வில்லன் வேடம் ஏற்றுள்ளதாக சொல்லப்படுகிறது.

அஜித்
மிஞ்சுவாரா
சிவகார்த்திகே

சிவகார்த்திகேயன்
இளம் நடிகர்களின் வெ
தொடர்ந்து பயணித்து வ
அடுத்து அட்லீயின் உதவி
பாக்கியராஜ் இயக்கும் படத்
இப்படத்தில் ஐ படத்தில் ப
கலைஞர்களே இதில் பணியாற்றவு
என்ன இவர்களுக்கு இந்த படத்தில்
பலருக்கும் ஒரு கேள்விதோன்றும்.
அது வேறு ஒன்றும் இல்லையாம், சி
முன் அஜித் நடிப்பில் வெளிவந்த வரலாறு
வெற்றிபெற்றது. இப்படத்தில் அஜித், பரதத்
தன்மை கொண்டவர், முதியவர், இளைஞர்
கெட்டப்புகளில் நடித்து அசத்தியிருப்பார். அ
தான் இப்படத்தில் சிவகார்த்திகேயன் இளை
முதியவர், பெண் தன்மைகொண்டவர் என



## அனிருத்திற்கு ஜோடியானார் எமி ஜாக்ஸன்

அனிருத்திற்கு காதல் தோல்வியடைந்தது அனைவருக்கும் தெரிந்ததே, அதனால்தான் அவர் படங்களில் காதல் சம்மந்தப்பட்ட பாடல்கள் என்றால் கொஞ்சம் கூடுதல் கவனம் இருக்கும். இந்நிலையில் இவர் சில மாதங்களுக்கு முன் "எனக்கென யாரும் இல்லையே" என்ற பாடலை அல்பமாக வெளியிட்டார். இது 3 மில்லியன் ஹிட்ஸை தாண்ட, தற்போது இதை வீடியோவாக எடுக்கவுள்ளாராம். இதில் அனிருத்துடன் ஜோடி சேர்ந்து ஆடவிருப்பது எமி ஜாக்ஸன்தானாம். மேலும் இப்பாடலை அமெரிக்காவில் எடுக்க திட்டமிட்டுள்ளது படக்குழு.

## ... மட்டும் நடக்கக் கூடாது - சிம்பு

...தேவன் இயக்கத்தில் ... மிக பிரமாண்டமாக ...யுள்ளது. சமீபத்தில் வந்த ...தின் டீசர் கூட ரசிகர்களை ... ...

இப்படத்தில் இரண்டுவிதமான கதைக்களத்தில் திரைக்கதை பயணிக்குமாம், அப்படியிருக்க பெரும்பாலும் வரலாற்று சம்மந்தப்பட்ட காட்சிகள்தான் இடம்பெறுமாம். இந்நிலையில் யாரும் இது என்னுடைய கதை என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கக்கூடாது என்ற கவலை தற்போதே, சிம்புதேவனுக்கு வந்து விட்டதாம்.

இதனால், இது முழுக்க முழுக்க கற்பனை கதை தான் என சிம்புதேவன் கூறிவருகிறாராம்.






## திரைப்பயணத்தில் ஆர்யாவின் மைல் கல்

கொலிவூட்டில் ஒருவர் முன்னேறவேண்டும் என்றால், மற்றவரை தள்ளிவிட்டால்தான் முடியும். அப்படியிருக்க எல்லோரிடத்திலும் நட்பாகப்பேசி, பழகி எந்தவொரு ஈகோ இல்லாத நடிகர் என்றால் ஆர்யாதான். இவர் ராஜேஷ் இயக்கத்தில் நடித்த “வாசுவும் சரவணனும் ஒன்னா படிச்சவங்க” படம் இவரின் திரைப்பயணத்தில் ஒரு மைல் கல்லாம். வேறு ஒன்றும் இல்லை, இதுதான் ஆர்யாவின் 25ஆவது படமாம், இதை டுவிட்டரில் மகிழ்ச்சியாக இவர் பகிர்ந்துள்ளார். மேலும், இப்படத்தின் டீசர் நாளை மாலைவரை, படத்தில் ஒரு பாடல் மட்டும் ஜூலை 18ஆம் திகதி வரவுள்ளது.

## விஜய்க்காகத்தான் ஒப்புக் கொண்டேன் பிரபல நடி

புலி படத்திற்கு பிறகு விஜய் அட்லீ படத்தில் நடித்துவருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கப்பட்டு, தற்போது வசன காட்சிகள் படமாக்கப்பட்டு வருகிறதாம். படத்தில் எமி ஜாக்சன், சமந்தா என இரு நாயகிகள் நடித்துவர, மூன்றாவதாக சுனையாக இப்படத்தில் நடிக்க கமிட்டாகி இருக்கிறார்.

விஜய் பெண் பார்க்கப்போகிற மாதிரி ஒரு காட்சி படத்தில் வருகிறதாம். அந்தக் காட்சியில் பெண்ணாக சுனைனா நடிக்கிறார் என்று சொல்லப்படுகிறது. இதற்காக ஒரு நாள் மட்டுமே அவர் நடிக்கப் போகிறாராம். மிகச்சிறிய வேடம் என்றாலும் விஜய் படத்தில் நடிக்கிறோம் என்பதால் சந்தோசமாக நடிக்க ஒப்புக்கொண்டாராம் சுனைனா.

ஒரே டைட்டிலில் இரண்டாவது முறையாக நடிக்கும் சுரேஷ் கோபி.



## அஜித்தை மிஞ்சுவாரா சிவகார்த்திகேயன்?

சிவகார்த்திகேயன் தான் தற்போது இளம் நடிகர்களின் வெற்றிக்குதிரையில் தொடர்ந்து பயணித்து வருபவர், இவர் அடுத்து அட்லீயின் உதவி இயக்குனர் பாக்கியராஜ் இயக்கும் படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தில் ஐ படத்தில் பணியாற்றிய மேக்கப் ...லைஞர்களே இதில் பணியாற்றவுள்ளனர், அப்படி இவர்களுக்கு இந்த படத்தில் வேலை என ...ம் ஒரு கேள்விதோன்றும்.

...வறு ஒன்றும் இல்லையாம், சில வருடங்களுக்கு ...நடிப்பில் வெளிவந்த வரலாறு படம் மாபெரும் ...ு. இப்படத்தில் அஜித், பரதத்தால் பெண் ...ண்டவர், முதியவர், இளைஞர் என 3 ...ல் நடித்து அசத்தியிருப்பார். அதேபோல் ...தில் சிவகார்த்திகேயன் இளைஞர், ...ண் தன்மைகொண்டவர் என நடிக்கவுள்ளாராம்.

## பதினாறு மொழிகளில் வெளிவரும் ‘கான்’

சிம்பு-செல்வராகவன் கூட்டணியில் பிரமாண்டமாக உருவாகி வரும் படம் கான். இப்படத்தின்மீது ரசிகர்களுக்கு தற்போது மிகுந்த எதிர்ப்பார்ப்பு நிறைந்துவருகின்றது. ஏனெனில் படத்தின் பர்ஸ்ட் லுக் வித்தியாசமாக செல்வராகவன் படத்திலிருந்து மாறுப்பட்டு இருந்ததால், ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. இப்படம் உலகத்தரத்தில் எடுத்து வருவதால் கிட்டத்தட்ட 16 மொழிகளில் வெளிவரவிருக்கின்றதாம். இச்செய்தியை செல்வராகவனே உறுதிப்படுத்தியுள்ளார்.



## நம்பிக்கை



கணமும் மறவாமல்
தினமும் உன்னைத்
தேடுவேன் - என்
சாலைகளில்
தினம் தினம் - என்
முயற்சியில் தோற்றாலும்
சோர்ந்து போகமாட்டேன்
நாளை என்பது
நம்பிக்கை தானே
என்றாவது ஒரு நாள்
உன் முகம் காண்பேன்
என்ற நம்பிக்கையுடன்
நான்...

ஜெ.சிந்து, வேலணை – 02

## நோன்பு

வருடம் மலரும்
பன்னிரண்டு மலரே
ஒரு புனித மாதம் வளரும்
அது ரமழான் பிறையே!

இறை அளித்த
இறுதி வேதம் குர் ஆன்,
இறை தூதர் முகம்மதுநபிக்கு
ஈந்த ரமழான்!

நோன்பிருந்து மனிதனை
நற்புனிதனாக்கும் ரமழான்.
மாந்தரின் பெரும் பாவக்கறையை
நீக்கும் புனித ரமழான்!

ரமழானே நோன்பு நோற்றோர்க்கு
நல்லருள் புரியப் பிறந்தாய்
நோன்பினால் மனஇருள்
அகன்றுவிட வளர்ந்தாய்!

இரவில் நின்று வணங்கும்
மாதம் ரமழான்
தினமும் புனித வேதம் ஓதும்
மாதம் ரமழான்!




கே.வாலேந்திரன்,
கொள்ளுப்பிட்டி.

## வேதனம் தருவாயா?

வெந்த புண்ணில்
வேல் பாய்ச்சுவது
வேடர்களின் குணம் போன்று
ஊழியரை வதைப்பதுவும்
அதிகாரத்தில் உள்ளவர்களின்
குணங்களில் ஒன்றுதானா?

வேதனத்தை எதிர்பார்த்து
வேலை செய்யும் தொழிலாளரை
ஏக்கத்துடன் தினம் தினமும்
அலைய வைப்பது சரிதானா?
அதிகாரி வர்க்கமே
எம் நிலையைப் பார்ப்பாயா?



எஸ்.தனா, வவுனியா.

### காசேதான் கடவுளப்பா!

தட்டத்தில் வைக்க
அர்ச்சனைப் பணம்
அதிகமில்லை.
பெயரும் நட்சத்திரமும்
பின்னடிக்கின்றன
அந்தணரின் வாயிலிருந்து!

### சிறுமையும் வெறுமையும்

ஆலயங்களில்
பலவர்ணவடிவங்களுடன்
அர்ச்சனைப் பற்றுச்சீட்டுக்கள்
வர்க்கபேத வெளிப்பாடாக...
சகிப்புத்தனம் குறைந்ததில்
கருவறைக்குள் காணவில்லை
கருங்கல்லுள் குந்திய
கடவுளை!

### கைமாறு

கௌரிக்காப்புக் கட்டப்போய்
கையிலுள்ள
பவுண் காப்பை
இழந்து வந்தாள்
பத்தினி!

அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு



## மூடர்களாய்...

அது
கலாசாரங்களின்
காற்தடங்கள்
தொலைந்த தேசம்
இரத்தங்களும்...
பிணவாடைகளும்
எம்
நித்திய
வாசனையாகிவிட்டன
குழிபறிப்புக்களும்
கொல்லும் வல்லூறுகளும்
பெண்களை தின்னும்
காமவெறியன்களும்
நிறைந்ததாக
எம்
தேசம்
மாறிவிட்டது
இனி என்ன
நாமும்
ஐந்தறிவின்
அயலவர்களாகி விட்டோம்
நாமும்
மூடர்களாகிவிட்டோம்
மிருகங்களாய்...!

அன்புவழியூர் ச.திருச்செந்தூரன்
திருகோணமலை

## உன் நினைவு



காத்திருக்க சொல்லிவிட்டு
காணாமல் போனவளே
காலங்கள் மாறலாம் – ஏன்
நீ கூட மாறலாம்
ஆனால் என் உயிர்
உள்ளவரை
உன் நினைவுகளைச்
சுமந்து
உனக்காகவே வாழ்வேன்
உன் நினைவுடன்தான்
உயிர் துறப்பேன்.

யோ.சறோ,
கரணவாய்

# தன்னை நிரூபித்தவர்




**இலங்கைக்கு** எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் 377 ரண்கள் குவித்து பாகிஸ்தான் இலங்கையைத் தோற்கடிக்கும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். மேலும் இலங்கை அணி வெல்வதற்குரிய சந்தர்ப்பம் அதிகமாக இருந்தது என்பதையும் மறுக்கமாட்டார்கள். ஆனால் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஷான் மசூட் மற்றும் யூனுஸ்கான் இருவரும் இணைந்து முடியாததைச் சாத்திய மாக்கிக் காட்டியுள்ளார்கள். யூனுஸ்கான் 171 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காமல் இருக்க ஏழு விக்கெட்டுக்களால் இலங்கையைத் தோற்கடித்த பாகிஸ்தான் 2-1 என்று தொடரையும் வெற்றிகொண்டது. இந்தத் தொடரின் வெற்றியை எல்லோரும் யூனுஸ்கானுக்கே சமர்ப்பிக்கிறார்கள்.

குறிப்பாக, பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா கருத்துக்கூறும்போது, யூனுஸ் அணிக்கு ஒரு வரம் என்று கூறியுள்ளார். மிஸ்பா கருத்துக்கூறும்போது, சுற்றுப்போட்டிக்கு முன்னர் ஒருவர் என்னிடம் யூனுஸ் பிரதானமான வீரர். ஆனால் அவர் ஒன்றும் சாதிக்கவில்லையே என்று கேட்டிருந்தார். அதற்கு நான், மிகப்பெரிதாக யூனுஸ் ஏதோ செய்யப்போகிறார் பொறுத்திருந்து பாருங்கள் என்று கூறினேன் என்று பதிலளித்தாராம். யூனுஸ் அழுத்தத்துக்கு உள்ளாகவில்லை. தனது இயல்பான விளையாட்டையே முன்னெடுத்துச் சென்றார். அவரே தனித்து மூன்றாவது டெஸ்ட் போட்டியை பாகிஸ்தானுக்கு வென்று கொடுத்தார் என்று கூறுவேன் என்றுள்ளார். அண்மைய நாட்களில் டெஸ்ட் வட்டகையில் யூனுஸ்கான் பற்றியதாகத்தான் பேச்சுக்கள் இருக்கின்றன. அந்தள விற்கு பெரியதொரு சாதனையை யூனுஸ் நிகழ்த்தி உள்ளார்.

டுத்து இலங்கைக்கு எதிரான ந்த கால மூன்று தொடர்களில் இலங்கைக்கு எதிராக வெற்றி களைப் பெறமுடியாத பாகிஸ்தான் தற்போது சாதித்துள்ளது. சில வேளைகளில் யூனுஸ்கானுக்கும், மிஸ்பாவிற்கும் இலங்கையில் விளையாடும் இறுதித் தொடராக இது இருக்கக்கூடும். ஆனால் அவர்கள் இருவருமே சாதித்து விட்டே இலங்கையை விட்டு அகல்கிறார்கள்.

# வாய்மூடிப் பேசவும்





**ரென்னிஸ்** போட்டிகளில் ஆடும்போது பந்தை எதிர்கொள்ளும் சந்தர்ப்பத்தில் வீரவீராங்கனைகள் பெரிதாகக் கீச்சிடு வார்கள், சப்தமெழுப்புவார்கள். இது அனேகமாக நடைபெறுவதொன்றுதான். ஆனால் இதிலும்கூட ஆண், பெண் வேறுபாடு காட்டிக் குறைசொல்கிறார்களே என்பதுதான். பெலாரஸ் வீராங்கனை விக்ரோரியா அஸரென்காவின் ஆதங்கம் செரினாவுடன் விளையாடிய காலிறுதிப் போட்டியில் தனக்கும், செரினாவுக்கும் மிகுந்த சங்கடமாக இருந்ததாகவும் கூறுகிறார். அதாவது அரங்கில் இருந்த ரசிர்கள் தாங்கள் குரல் எழுப்பிய போதெல்லாம், அவர்களும் கூச்சலிட்டுள்ளார் கள். அஸரென்கா மேலும் கூறுகையில், பயிற்சியின்போது நடால் தன்னைவிட அதிக குரல் எழுப்புகிறார் என்றும் அதனை யாரும் கண்டுகொள்வதில்லை எனவும் பெண்கள் என்றபடியால் தங்களுக்கு எதிராக கோஷமெழுப்புகிறார்களா என்று கோபத்துடன் கேட்கின்றார்.

மேலும் மதுபோதை தலைக்கேறிய நிலையில் இப்படி நடந்துகொள்வதை ரசிகர்கள் நிறுத்திக்கொண்டு நாகரிகமாக நடந்துகொள்ளப் பழகவேண்டும். விம்பிள்டன் உயர்தரமானது. அதன் பெயரைக் கெடுக்கக்கூடாது என்றும் பொரிந்து தள்ளியுள்ளார்.

மைதானத்தில் குரரெழுப்பும் வீராங் கனைகளுள் மூவர் பிரதானமானவர்கள். மரியா ஷரபோவா, செரினா வில்லியம்ஸ், மற்றும் விக்ரோரியா, அஸரென்கா, செரினா வும், ரசிகர்களின் கேலிகுறித்து மனவருத்தப் பட்டுள்ளார். அதேபோல் ஷரபோவாவும் தன் ஆதங்கத்தை தெரிவித்துள்ளார். எந்த மட்டத்துக்கு உயர்ந்தாலும் பெண்களைப் பிரித்தெடுத்து கேலியும் கிண்டலும் செய்வது ஒரு பொதுவான நோயாகவே மாறிவிட்டதுபோலும்.

# சுப்பர் ஸ்டாரின் துயரம்

**நடைபெற்று** முடிவடைந்த கோபா அமெரிக்கா கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், சுற்றுப்போட்டியை நடாத்திய சிலி இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனாவை பெனால்டி முறையில் 4-1 என்று தோற்கடித்து கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது. இது சுப்பர் ஸ்ரார் மெஸ்ஸிக்குப் பாரிய தாக்கமாகப் போய்விட்டது.

கடந்த வருடம் உலகக் கிண்ணப்போட்டிகளில் இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா, ஜேர்மனியைச் சந்தித்தது. அந்த இறுதிப்போட்டியிலும் மெஸ்ஸியின் ஆர்ஜென்ரீனா, மேலதிக நேரத்தின் பின் 1-0 என்று உயரிய கிண்ணத்தைத் தவற விட்டது.



முன்னதாக 2007 நடைபெற்ற கோபா அமெரிக்கா உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இறுதியாட்டத்தில் ஆர்ஜென்ரீனாவும் பிரேசிலும் மோதின. அந்த ஆட்டத்திலும் மெஸ்ஸி விளையாடியிருந்தார். ஆனால் கிண்ணத்தை பிரேசில் வென்றது. உலகின் அதிசிறந்த வீரர் சர்வதேசக் கிண்ணம் ஒன்றையாவது வெல்லமுடியாத நிலையில் மிகவும் கவலைதோய்ந்தவராக உள்ளார்.

இப்போது ஆர்ஜென்ரீன ஊடகங்கள் இவரை விமர்சிக்க ஆரம்பித்துள்ளன. மேலும் சிலி நாட்டில் வைத்து மெஸ்ஸியின் உறவினர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலையில் சர்வதேச உதைபந்தாட்டத்தில் இருந்து மெஸ்ஸி தற்காலிகமாக சிறிது ஓய்வு எடுக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதுபோக பார்சலோனாவிற்காக இவ்வளவு சாதனைபுரியும் மெஸ்ஸியால், ஏன் நாட்டுக்காக செயற்பட இயலாமல்போகிறது என்றெல்லாம் மேலும் மேலும் அவரைத் தாக்குகிறார்கள். கடந்த 22 வருடங்களாக ஆர்ஜென்ரீனா ஒரு சர்வதேசக் கிண்ணத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. அந்த ஆத்திரம் எல்லாம் மெஸ்ஸியின் மீது வந்து விழுகிறது என்றும் எடுத்துக்கொள்ளலாம். மெஸ்ஸிக்கு 28 வயது மட்டுமே ஆகிறது. அவர் சாதிக் காமல் ஓய்வுபெறமாட்டார் என்கிறது இன்னொரு தரப்பு. இந்தத் தரப்பு கூறுவதே சரியாக இருக்கும். மெஸ்ஸியின் அர்ப்பணிப்பில் குறை இல்லை. திறமையில் கேள்விக்கே இடமில்லை. ஆனால் ஆர்ஜென்ரினா, தனது தாயகம் என்று வந்துவிட்டால் அவருக்கு கிண்ணம் பெற இயலாமற்போகிறது.

இது நிச்சயம் மெஸ்ஸியின் தலையில் சுமத்த வேண்டிய குற்றம் இல்லை. தெ.ஆபிரிக்க கிரிக்கெட் அணியினர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் உயர்தரத்துடன் வந்து அதிர்ஸ்டம் இல்லாமல் தோற்கிறார் களே. அதுபோன்றுதான் மெஸ்ஸியின் நிலையும். அப்படி யென்றால் ஆர்ஜென்ரீன ரசிகர்கள் அதிர்ஸ்டதேவதை யிடம்தான் கேட்கவேண்டும். அதாவது “என்னம்மா இப்படிப் பண் றீங்களேம்மா”

# இதை எதிர்பார்க்கவில்லை



**கிரிக்கெட்** ரசிகர்கள் எல்லோரும் எதிர்பார்த்தது பங்களாதேஷில் ஏ.பி.டி வில்லியர்ஸ் என்னென்ன துடுப்பாட்ட புதிய இலக்கணங்கள் வகுக்கப்போகிறாரோ என்பதைத்தான். ஆனால் எல்லோருக்கும் ஏமாற்றம் அழிக்கும்வகையில் அவர் சுற்றுப்போட்டியின் இடைநடுவில் நாடு திரும்புகிறார். நடைபெறவுள்ள பங்களாதேஷ் அணிக்கு எதிரான மூன்று ஒருநாள் போட்டிகளில் உலகக் கிண்ணப்போட்டியில் மெதுவான ஓவர்கள் வீசிய குற்றச்சாட்டில் அணித்தலைவர் என்றவகையில் ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டிருந்தார்.

எனவே பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது போட்டியில் இவர் விளையாடமுடியாது. அதோடு தொடர்ந்து வரும் இரண்டு டெஸ்ட் போட்டி அட்டவணைக் காலத்தில் மனைவியின் முதலாவது குழந்தைப்பேறு தொடர்பில் வில்லியர்ஸ் தெ.ஆபிரிக்காவில் நிற்கவேண்டியுள்ளது.

எனவே நிலைமையைக் கருத்திற்கொண்டு மூன்று ஒருநாள் போட்டிகளிலும் டெஸ்ட் போட்டிகளிலும் இருந்து வில்லியர்சுக்கு ஓய்வுகொடுக்க கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. இதனைத்தான் சகல ரசிகர்களின் எதிர்பார்ப்பும் ஏமாற்றத்துக்குள்ளாகிவிட்டது. பங்களாதேஷ் அணியினருக்கு, வில்லியர்ஸ் தெ.ஆபிரிக்க அணியில் இல்லை என்பது ஒருவகையில் ஆறுதலான செய்திதான் என்றாலும், அவருக்கு எதிரா விளையாடுவதன்மூலம் நிறையக் கற்றுக்கொண்டு இருக்கலாம். அது தவறிப்போகிறது என்பது அவர்களுக்கும் வருத்தமாகத்தான் இருக்கும். ஏனெனில் ஏ.பி.டி வில்லியர்ஸ் ஒரு துருவநட்சத்திரம்.




- ஜோசப் கிருஷ்ணா -




# பெண்களின் போராட்ட குணமே ஆண்களை ஜெயிக்க வைக்கிறது

# வயிற்றுத் தசை குறைக்கும் பயிற்சி



தொப்பை குறைய எளிய பயிற்சி இப்போது உள்ள கால கட்டத்தில் அனைவரையும் கவலையடைய செய்யவும் பெரிய பிரச்சினை எதுவென்றால் அது தொப்பை. உடல் உழைப்பு இல்லாத இந்த அவசர யுகத்தில் 10ல் 8 பேர் தொப்பை பிரச்சினையால் அவதிப்படுகின்றனர். இந்த தொப்பையை குறைக்க ஜிம்மில் செய்யப்படும் உடற்பயிற்சிகள் சற்று கடினமாக இருக்கும்.

ஆனால் வீட்டிலேயே செய்யக்கூடிய எளிமையான பயிற்சி ஒன்று உள்ளது. இந்த பயிற்சி செய்ய முதலில் விரிப்பில் தரையில் கால்களை நேராக நீட்டி, கைகளை உடலோடு ஒட்டிவைத்து மல்லாந்து படுக்கவேண்டும். உள்ளங்கைகள் தரையில் பார்த்த வண்ணம் இருக்கவேண்டும். இந்த நிலையில் இரண்டு கால் முட்டிகளையும் மடக்கி இடுப்புவரை தூக்கவேண்டும்.

இதுதான் ஆரம்பநிலை. இந்த நிலையில் சில நிமிடங்கள் இருந்தபின்னர் அடுத்த நிலைக்கு வரவேண்டும். படத்தில் உள்ளபடி கால்முட்டியை மடக்கியபடி, கைகளை நன்றாக தரையில் ஊன்றி இடுப்பிற்கு மேல் தூக்கவேண்டும். இந்தநிலையில் சிறிதுநேரம் இருந்தபின்னர் ஆரம்பநிலைக்கு வர வேண்டும்.

இவ்வாறு இந்த பயிற்சியை ஆரம்பத்தில் 20 முறை செய்யலாம். பின்னர் படிப்படியாக எண்ணிக்கையின் அளவை அதிகரித்து 30 முறை செய்யவேண்டும். இந்த பயிற்சியை தினமும் தொடர்ந்து செய்துவந்தால் 3 மாதத்தில் நல்ல பலன் கிடைப்பதை காணலாம்.



"வெற்றி பெற்ற ஆண்களுக்கு பின்னால் ஒரு பெண் இருப்பாள்" என்ற உண்மையை பெண்கள் ஏற்கனவே மெய்ப்பித்து காட்டியிருந்தாலும், இப்போது தான் அந்த உண்மை விஞ்ஞானபூர்வமாக நிருபிக்கப் பட்டிருக்கிறது.

பெண்கள் எப்போதுமே மனோதிடம், துணிச்சல், ஆன்மபலம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். மனப்பூர்வமான ஜோடியாக அவள், கணவரோடு இணையும்போது அவளது சக்தியும், ஆலோசனை யும் கணவருக்கு கிடைக்கிறது. அதை சரியாக பயன்படுத்திக்கொள்ளும் ஆண்கள் வாழ்க்கையில் வெற்றி அடைகிறார்கள். இந்த உண்மையை இளைஞர்களிடம் புரியவைக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு இருக்கிறது.

புரிந்துகொண்டால், அவர்கள் திருமணம் செய்துகொண்டு, மணவாழ்க்கையை வெற்றிகர மாக அமைத்துக்கொண்டு வாழ்க்கையில் வெற்றியை நோக்கி நகரத் தொடங்கிவிடுவார்கள்.

வாழ்க்கை என்பது பிரச்சினைகளை கடந்து வந்து வெற்றிகாண்பதுதான். பிரச்சினைகளை கடந்து வெற்றிபெறும்போது நாம் புதிய பலம் பெறுகிறோம். மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக வும் ஆகிறோம். ஆனால் ஒரு உண்மை என்னவென்றால் பிரச்சினை என்பது எப்போதும் இருக்கும். திருமணமானாலும் இருக்கும்.

திருமணத்திற்கு பின்னால் பலர் சாதனையாளர் களாக உருவெடுத்திருக்கிறார்கள். திருமணமா காதவர்களைவிட திருமணமான ஆண்கள் மிகுந்த தன்னம்பிக்கையோடு வாழ்கிறார்கள். மனோபலத்துடன் இருக்கிறார்கள்.

சமூக அந்தஸ்தும், மரியாதையும் திருமண மானவர்களுக்கு அதிகம் கிடைக்கிறது. அதுவும் அவர்களது தன்னம்பிக்கை அதிகரிக்க ஒரு காரணமாகிறது. புதிய உறவு, நட்பு என்று அவர்களுடைய மகிழ்ச்சியான உலகம் விரிவடைந்துக்கொண்டே போகிறது.

பொறுப்புணர்வும், கடமை உணர்வும் திருமணமானவர்களிடமே அதிகம் இருக்கி றது. திருமணம் ஆண்களுக்கு கூடுதல் பொறுப் புணர்வை தருகிறது. கடமையை அவர்களுக்கு கற்றுத்தருகிறது. தனிமையில் இருந்து அவர்களுக்கு விடுதலைகொடுத்து, கலகலப்பான சூழலுக்கு அவர்களை கொண்டுவருகிறது.

அலுவலகத்தில் அதிக பொறுப்புடன் வேலைபார்ப்பது, வேலைகளை குறித்த நேரத்தில் முடிப்பது, நாகரிகமாக உடை அணிவது... போன்ற விஷயங்களிலும் திருமண மான ஆண்களே முன்னணியில் இருக்கிறார்கள். அதுவரை ஏனோதானோவாக நடந்துகொண்டவர் கள்கூட திருமணத்திற்கு பின்பு நேர்த்தியானவர் களாக மாறி இருக்கிறார்கள்.

நேரத்திற்கு அலுவலகத்திற்கு வருகிறார்கள் என்றெல்லாம்கூட அந்த ஆய்வு சொல்கிறது.

பெண்கள் தோல்வியை எளிதில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். திரும்பத் திரும்ப போராடி வெற்றியை கைப்பற்றும் பிடிவாதம் பெண்களுக்கு உண்டு. அந்தப் பிடிவாதமே ஆண்களை இயக்கி ஜெயிக்கவைக்கிறது.

# சிரிப்பு யோகா



சிரிக்கும் போது கிடைக் கும் நல்ல பலன்களை சிரிப்பு யோகா மூலம் எளிதில் பெறமுடியும். சிரிப்பு யோகா வை பயிற்சி செய்வதால் மனஆரோக்கி யமும், உடல் ஆரோக் கியமும் நிறைவாகக் கிடைக்கும். சிரிப்பு யோகா உங்கள் மனநிலையை ஒரு சில நிமிடத்தில் மாற்றவல்லது. சிரிக்கும்போது மூளையில் உள்ள திசுக்கள் என்டோர்பீன் என்ற சுரப்பியை வெளியிடுகின்றன. இது உங்கள் மனநிலையை மகிழ்ச்சியாக மாற்றும் அதுமட்டுமில்லாமல் நாள் முழுவதும் வழக்கமாக சிரிப்பதைவிட அதிகமாக சிரிக்கவும்செய்வீர்கள். சிரிப்பு யோகா இதயத்திற்கு பயிற்சி அளித்து அதிகளவு ஒட்சிசனை உடலுக்கும் மூளைக்கும் கொண்டு செல்ல உதவுகிறது. இதனால் ஒருவர் மிகுந்த உற்சாகத்துடனும், ஆரோக்கியத்துடனும் இருக்கமுடியும். சிரிப்பு யோகா என்ற ஒரு பயிற்சிமூலம் உடல், மனம் மற்றும் உணர்ச்சி தொடர்பான அனைத்து மனஅழுத்தங்களையும் மாற்றி அமைக்கமுடியும். சிரிப்பு யோகாமூலம் நமது நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது. அதுமட்டுமல்லாமல் நீரிழிவு, மூட்டுவலி, இதயநோய், முதுகு வலி, அழுத்தம், கவலை, ஆஸ்துமா, தலைவலி, மாதவிடாய் கோளாறுகள், புற்றுநோய் ஆகிய பற்பல நோய்களை குணமாக்க முடிகின்றது.

# மிஸ்டு கோல் மூலம் ஏமாறும் பெண்கள்

இன்று பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள் அதிகரித்துவருகின்றன. வேலை செய்யும் இடங்களில் சந்திக்கும் நபரை இளம்பெண்கள் காதலிக்கிறார்கள். திருமணம் செய்து கொள்வதாக கூறும் பொய்யான வாக்குறுதியை நம்பி, தொடர் வற்புறுத்தலால் உடல்ரீதியான தொடர்புக்கும் சிலர் சம்மதித்து விடுகிறார்கள்.

புதிய காதலி கிடைத்துவிட்டாலோ அல்லது வீட்டில் வேறு நல்ல இடத்தில் பெண்பார்த்து திருமண ஏற்பாடு செய்யும்போது பழைய காதலியை, காதலை கைவிட்டு விடும் சில ஆண்கள் இருக்கவே செய்கிறார்கள். காதல் இன்று பொழுதுபோக்காகிவிட்டது. நீ ரொம்ப அழகு எனும் ஆணின் வார்த்தை பெண்ணை மகிழ்விக்கிறது. மயக்குகிறது. பல வருடங்கள் காதலித்தோம். திருமணம் செய்துகொள்வதாக வாக்குறுதிதந்ததால், சம்மதித்தேன். அவரால் இன்று கர்ப்பமாக உள்ளேன், என்னை ஏமாற்றிவிட்டு வேறு பெண்ணுடன் திருமண ஏற்பாடு நடக்கிறது. இதுபோன்ற காதலித்து ஏமாற்றும் நபர்கள் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் அடிக்கடிவருகிறது.

இருந்தும், செய்யக்கூடாத தவறை சில அப்பாவிப் பெண்கள் செய்துகொண்டேதான் இருக்கிறார்கள். தன் பெற்றோர் தனக்கு நல்ல வாழ்க்கைத் துணையை அமைத்துக் கொடுப்பார்கள் என்று இவர்களுக்கு ஏன் தெரிவதில்லை?

காதல் என்று நினைத்து கயவர்களின் தீய வலை யில் விழுகிறார்கள் பெண்கள். போதாது என்று மிஸ்டு கோல், பேஸ்புக்மூலம் காதல் பற்றிக்கொள்கிறது. ஈ-மெயில், சட், மொபைல் கேமரா எல்லாம் சாட்சிகளாக உள்ளன. நகரங் களில், பேருந்து நிலையங்களில் பூங்காக்களில் பள்ளிப்படிப்பைத் தாண்டாத சில பெண் பிள்ளைகள் தங்கள் காதலனோடு பொது இடங்களில் மறைவாக உட்கார்ந்து இருப்பதை பார்க்கநேரிடுகிறது.



இளம் பள்ளி வயதில் ஆண் நண்பர்கள் இருப்பதுதான் பெருமை என்ற தவறான தோழி களின் தவறான போதனைகள் இவர்களை ஆட்டிவைக்கிறது. பெண்கள் எச்சரிக்கை உணர் வுடன் அனைவரிடமும் பழக வேண்டும். பார்த்தவுடன் யாரி டமும் பழகி அதிக நட்பு வளர்க்கக்கூடாது.

**250/= பரிசு**

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-479**

**கேள்வி: சிரிப்பு யோகா பயிற்சிமூலம் குணமாகும் நோய்கள் எவை?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 27. 07. 2015**

பரிசுப் போட்டி இல :- 477 இற்கான விடை :-
1988 - 1990, 1993 - 1996.
5வருடங்கள்.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :-
மா.சத்தியன்,
கோவில் வீதி, திருகோணமலை.

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 479
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

479

பெயர் : ..................

முகவரி : ..................


..................

தே.அ. அட்டை இல : ..................

விடை : ..................

..................

கையொப்பம் : ..................



# கொடியேறியது தேர்தல் திருவிழா

மொக்கன் கேட்கிறான்

இனியென்ன எலக்சன் திருவிழாவும் கொடியேறிட்டுது. ஊரெல்லாம் ஒரே அமர்க்களம்தான். வழியில – தெருவில, ஒரு காலமும் காணக் கிடைக்காத ஆக்கள் எல்லாரும் கும்பிட்ட கையோட குடிசை வாசலுக்குள்ளயும் குனிஞ்சு வந்து சிரிச்சுக்கொண்டு நிப்பினம். கூட வாற வால் பிடியள், கூலிக்கு கூட்டிக்கொண்டு திரிமிறதுகள். ஐயாவைத் தெரியும்தானே உங்களுக்கு, உங்களுக்காண்டித்தான் எலக்சனுக்கு வெளிக்கிட்டிருக்கிறார். ஏதோ பாத்துச் செய்யுங்கோ எண்டு பல்லக் காட்டிக்கொண்டு நிப்பினம். அவரும் ஒரு கூழக் கும்பிடு போட்டுக்கொண்டு நிப்பர். மொக்கன்ர கொட்டிலுக்குள்ள ஒரு காலமும் மதிக்காத ஆக்களும் இந்த மொக்கனையும் மதிச்சு ஐயான்ர வோட்டு எங்களுக்குத்தானே எண்டு கேட்டு நிப்பினம்.

மொக்கி வேற யாருக்கய்யா உங்களுக்குத்தானே எண்டு ஒரு சொல்லோட கதையை முடிச்சுப்போடுவாள். எப்ப இவைய வெளியில கெதியா அனுப்புறது எண்டதுதான் அவளின்ர யோசினை. கொழும்பிலயே சீவியம் கழிச்ச ஆக்களும், ஒழுங்கை ஒழுங்கையா கொட்டில் கொட்டிலா திரிமிறதப் பாத்து மொக்கனுக்குச் சிரிப்புத்தான் வருகுது. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை எண்டெல்லாம் ஆசையப் பத்தி சொல்லியிருக்கினம். ஆனா இப்ப பாத்தா எல்லாத்திலயும் பெரிய ஆசை கதிரை ஆசை போலத்தான் இருக்குது.

இந்த ஆசை கூடாதெண்டு மொக்கன் சொல்லேல்ல. ஆனா இதுக்கு ஆசைப்படுறதுக்கும் ஒரு தகுதி இருக்கு. ஆனா இண்டைக்கு இந்தத் தகுதியுள்ளவை மெத்தக் குறைவு. பெரிய படிப்பும், கனக்கக்காசும் இருந்தா காணும் எண்டு நினைக்கினம்.

அனந்திப் பெடிச்சியும் சுயேச்சையா கேக்கப்போறாவாம். அவவயும் ஆசை விட்டபாடில்ல. சின்னக் கதிரைய விட்டுட்டு பெரிய கதிரைக்கு ஆசை வந்திட்டுது. இந்த ஆசை மோசத்தில போய் முடியுமெண்டு மொக்கன் சொல்லுறான். கூட்டமைப்புக்காரரும் வெளிக்கிட்டு வந்து வீதிக்கு இறங்கி இருக்கினம். காரில திரிஞ்ச கனவான்மாரெல்லாம் கால்நடையா வெளிக்கிட்டிருக்கினம். கொழும்பில இருந்த சுமந்திரன் ஐயா குடத்தனையில வந்து குதிச்சிருக்கிறார்.

வடமராட்சி எங்கும் வலம் வாறார். பொன்னம்பலத்தின்ர பேரப்பெடியனும் மும்முரமா வெளிக்கிட்டிருக்கிறான். டக்ளஸ் தம்பியும் அங்கின, இங்கின எல்லாம் சின்னக் சின்னக் கூட்டம் வைக்கிறார். முந்திப் பழகின ஆக்களோட கதைக்கிறார். அவர் முப்பந்தைஞ்சு வருசம் சனத்தோட நிண்டவர்தானே.

இனியும் இனியும் ஆரார் வரப்போயினமோ என்ன சொல்லப் போயினமோ. நாம இருந்து பாக்க வேண்டியதுதான். நல்லாப் பொழுதும் போகும். மொக்கன் முந்தி முந்தி சுத்தத் தமிழ் இரத்தம் எண்டு சொல்லுறதெல்லாம் வெறும் பம்மாத்து எண்டு சொன்னவன், ஆரிய சிங்கள இரத்தம் எண்டு பெரிய புத்த பிக்குமாரும், சிங்கள பெரிய தலைவர்மாரும் சொல்லுறதும் வெறும் சுத்துமாத்துதான். இந்த நாட்டில சிங்களவரோ, தமிழரோ கலப்பில்லாத இரத்தம் எண்டு சொல்லிச்சினமெண்டால் அது சுத்தப்பொய் எண்டுதான் சொல்லவேணும்.

எங்கண்ட சந்திரிக்கா அம்மையார் ஸ்ரீமாவோ அம்மையாற்ற மோள். அவ ஒரு நடிகரைக் காதலிச்சா. அவற்ற பெயர் விஜயகுமார ரணதுங்க. இது பிறகுடியேறின பரவர் பரம்பரைப்பொடியன். சந்திரிக்கான்ர பொடியன் விமுக்தியும் சிங்கள, தமிழ்க் கலப்புப் பொடியன்தான். சந்திரிக்கான்ர கொள்ளுப்பூட்டன் ஒரு பிரபு. கண்டிப் பிரபுமாரும், வெள்ளைக்காரனும் 1815ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தம் செய்தவை. அதில அவை எல்லாரும் தமிழிலதான் கையெழுத்து வைச்சவை. அப்ப ஆட்சிமொழி தமிழாகத்தான் இருக்கவேணும். இந்தச் சரித்திரம் அறியாத சனங்கள் ஆளுக்கொரு கதை சொல்லி துள்ளிக்கொண்டு நிக்கினம்.

மகிந்தவின்ர ஒண்டவிட்ட சகோதரி ஒரு தமிழனத்தான் கட்டியிருக்கிறா. அப்ப ராஜபக்ச குடும்பத்திலயும் தமிழ் ரத்தம் கலந்திட்டுது. இனி இதையெல்லாத்தையும் மறந்து நாம் சுத்தச் சிங்களவர் எண்டு அவை ஒருபுறம். நாம் சுத்தத் தமிழர் எண்டு இவை ஒருபுறம். சனங்களை உசுப்பேத்தத் தொடங்கிடுவீனம். ஆனால் இந்த முறை இதெல்லாம் பெரிச எடுபடாதெண்டு மொக்கன் நினைக்கிறான்.

மொக்கனுக்கு முந்தி நடந்த சில காரியங்களை சில சந்தேகங்களைக் கிளப்புது. நீர்வேலி வங்கிக்கொள்ளையை தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், தேவன் என்னும் ரெலோ பெடியங்களும் பிரபாகரன் (அந்த நேரம் புலியை விட்டுட்டுப் போய் நிண்டவன்) எண்டு எல்லாரும் சேர்ந்துதான் நடத்தினவை. பிறகு தமிழ்நாட்டுக்கு தப்பி போறதுக்காக மணல்காட்டில படகுக்காக காத்திருக்கும்போது பொலிஸ்காரரால பிடிபட்டு அடைபட்டவை. அதில பிடிபடாது நிண்ட பிரபாகரன் காலப்போக்கில மீண்டும் புலிகளின்ர தலைமையைப் பொறுப்பேற்றார். தங்கத்துரை, குட்டிமணி இருந்திருந்தால் இவர் அவங்களின்ர கட்டுப்பாட்டுக்கதான் நிண்டிருக்கவேணும். அவங்கள் பிடிபட்டு வெலிக்கடைக்க செத்தது தம்பிக்கு வாய்ப்பாய்ப் போச்சு.

அடுத்தது திருகோணமலையில தங்கத்துரை எம்.பி. குண்டுவெடிப்பில கொல்லப்பட்டார். திருகோணமலைச் சனமெல்லாம் வயசு வித்தியாசமில்லாமல் அவர தங்கத்துரை அண்ணை எண்டுதான் சொல்லுவாங்க. திருகோணமலையில அவர்தான் மக்களின்ர உண்மையான தலைவர். சம்மந்தற்ற தலைமைக்குக்கூட அவர் போட்டியாகத்தான் இருந்தார். தங்கத்துரை அண்ணைய புலிகள்தான் சாக்கொண்டாங்கள். ஆனா புலிகளின்ர துவக்குகளுக்கு பின்னால சிலற்ற தூண்டுதலும் இருந்ததெண்டு அப்ப சனத்துக்குள்ள அரசல்புரசலாய் கதை அடிபட்டுது. அதுக்குப் பிறகுதான் சம்மந்தர் ஏகபோக பெருந்தலைவரானார்.

போராளி போராளி எண்டு போராளிகளை ஏத்திப் பேசினவையெல்லாம் அவங்கள் ரெண்டு இடம்தரச் சொல்லிக் கேக்கேக்க அதை முற்றா நிராகரிச்சுப் போட்டினம்.

இப்பதான் இவையின்ர போலி வேஷம் இப்பத்தான் வெளுக்கத் தொடங்கி மிருக்கு. மற்றவையின்ர சாவில தங்கண்ட வாழ்வைத் தேடிக்கொண்ட கேவலங்கெட்ட மனுசரில்லையா இவனுகள் எண்டு மொக்கன் கேக்கிறான். மொக்கியும் கேக்கிறாள்.

**மொக்கன் இப்பவும் கேக்கிறான். இனியும் கேப்பான்.**

# பாகுபலி திரைப்படமும் வரவேற்பும்

'நான் ஈ' படத்துக்குப் பிறகு ராஜமௌலி குழுவின் மூன்று ஆண்டு கால உழைப்பில் உருவாகி இருக்கும் படம் 'பாகுபலி'. உலகளவில் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் பாகுபாலி திரைப்படம் கடந்த சனிக்கிழமை திரையரங்குகளில் வெளியிடப்பட்டது. தெலுங்கு திரைப்பட உலகின் பிரபல இயக்குநர் எஸ்.எஸ்.ராஜமௌலி இயக்கத்தில் உருவான இத்திரைப்படம் அத்திரைப்படம் வெளியான ஒரே நாளில் ரூ.60 கோடியை வசூல் செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு பாகங்கள்கொண்ட இப்படத்தின் முதல் பாகம் தற்போது வெளியாகியுள்ளது. இதில் பிரபாஸ், ராணா டக்குபாதி, தமன்னா, அனுஷ்கா, நாசர், சத்ய[illegible]எனப் பலர் நடித்துள்ளனர்.

ராஜமெ[illegible] 11ஆவது படமான பாகுபலி, தமிழ் ரசிக[illegible] திருப்திப்படுத்தியதா?

நம்பிக்கை துரோகத்தால் அரசன் (பிரபாஸ்) கொல்லப்படுகிறான். அரசன் மகன் என்ற எந்த அடையாள-மும் இல்லாமல் மலைப்பகுதியில் சாதாரணமாக வளர்கிறான் இளவரசன் (அதுவும் பிரபாஸ்). காதலிக்காக (தமன்னா), அரசன் மனைவியை (அனுஷ்கா) காப்பாற்ற சபதம் எடுக்கிறான். அவர்தான் தன் அம்மா என்பதை தெரிந்து கலங்குகிறான். தன் வரலாறு அறிந்துகொள்ளும் தருணம் கனிகிறது. நடந்தது என்ன? என்று காட்சிகளால் விரிவதே பாகுபலி முழுக்கதை. எகத்தாள சிரிப்பும், தந்திரப் பார்வையிலும் நாசர் கதா பாத்திரத்துக்கான தேவையை நிறைவேற்றுகிறார். ரோகிணி, அனுஷ்கா, காலகேயனாக நடித்திருக்கும் பிரபாகர், ஒரே காட்சியில் வந்துபோகும் சுதீப் ஆகியோர் பொருத்தமான தேர்வு. பிரபாஸ் சிவலிங்கத்தை அருவியில் வைக்கும் காட்சி, போர்க்களக் காட்சிகள், போர்க்களத்தில் பிரபாஸ் கையாளும் புத்திசாலித்தனமான போர் முயற்சிகள், சத்யராஜ் பிரபாஸ் யாரென்று தெரிந்ததும் கலங்கித் தவிக்கும் காட்சி எனப் பல காட்சிகள் மனதுக்குநிறைவை ஏற்படுத்துகின்றன.


"உலகம் முழுக்க வெளியாகியுள்ள இப்படம் முதல் நாளில் ரூ.60 கோடியை வசூல் செய்துள்ளது. இந்த வார இறுதியில் இது ரூ.100 கோடியை வசூல் செய்து சாதனை படைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று சினிமா வர்த்தக ஆய்வாளர் திரிநாத் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் மட்டும் ரூ.15 கோடியை வசூல் செய்துள்ளது இப்படம். தெலுங்கு, தமிழ், மலையாளம் மற்றும் இந்தி என நான்கு மொழிகளில் வெளியாகியுள்ள இப்படம், நாடு முழுக்க சுமார் 4 ஆயிரத்துக்கும் அதிகமான திரையரங்குகளில் திரையிடப்பட்டுள்ளது. மிகவும் எதிர்பார்ப்புகளுடன் உலகம் முழுவதும் வெளியாகும் பாகுபலி திரைப்படத்துக்கு சமூக வலைதளங்களில் பலத்த வரவேற்பு கிடைத்துவருகிறது.


சுமார் 3 ஆண்டுகள் எடுக்கப்பட்ட பிரம்மாண்ட திரைப்படம் பாகுபலி.

மிகவும் பிரம்மாண்டமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள இத்திரைப்படம், ரூ.250 கோடி செலவில் தயாரிக்கப்பட்டு, இன்று 4,000 திரையரங்குகளில் திரையிடப்படுகிறது.

இதுவரை இத்திரைப் படத்தின் பேஸ்புக் பக்கத்தில் 13 இலட்சம் பேர் 'லைக்' செய்துள்ளனர். ட்விட்டரில் இலட்சக்கணக்கானோர்பின் தொடர்கின்றனர். யூடியூபில் இதன் டிரைலர் 42 இலட்சம் முறை பார்க்கப்பட்டுள்ளது. இதன் 2ஆம் பாகத்தின் படப்பிடிப்பு 40 சதவீதம் முடிவடைந்துள்ளது. பாகுபாலி -2விலும் பிரமாண்டத்துக்கு குறைவில்லையாம்.



# ஐ.தே.க. ஆட்சியில் தீர்வு கிடைக்குமா தமிழருக்கு?



சிறுபான்மைக் கட்சிகளின் முழுமையான ஆதரவு அலையுடன் ஆட்சி அமைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்டம் ஆறு மாதகாலங்களுக்குள் அடங்கிப் போய்விட்டது. இப்போது மீண்டுமொரு கள நடவடிக்கையிலே ஐ.தே.க இறங்கியுள்ளது. அதற்காக மீண்டும் சிறுபான்மைக் கட்சிகளின் தயவினை நாடியுள்ளது பச்சைக்கட்சி; இருந்தும் அக்கட்சியினருக்கு தமது ஆதரவினை வழங்கப்போவதாக சில கட்சிகள் அறிவித்துள்ளன. சில இன்னும் மறைமுக நாடகங்களை மேடையேற்றிய வண்ணமுள்ளது!

அடுத்த பிரதமர் மகிந்தவா?, ரணிலா? அல்லது வேறு ஒருவரா? எனும் கடினமான கேள்விக்கு விடையை தேடிக் கொள்வது சுலபமாக இருக்கவில்லை. வெல்லப்போவது யார்? என்பது சகலரிடமும் விடைதெரியாத வினாவாக மட்டுமே இப்போதைக்கு உள்ளது.

யார் வேண்டுமானாலும் ஆட்சி அமைக்கட்டும். ஆனாலும் தமிழர் தரப்பின் பிரச்சினை தீருமா?, இல்லையா? என்பது எதிர்பார்ப்பாகவே இருக்கின்றது.

100 நாள் வேலைத்திட்டம், தேசிய அரசு என்றவாறு வெளிவேசம் போட்ட காலங்களிலும் தமிழர் தரப்புக்கு எந்த விதமான முன்னேற்றமும் உண்டாகவில்லை. ஆனாலும் மகிந்த தரப்பு பிரச்சினையை தீர்த்துக்கொள்ள முன் வந்ததா? என்றும் நீங்கள் கேட்கலாம். யாரும் இப்போதைக்கு முன்வரப்போவதில்லை என்பது உண்மையே.

ஆனாலும் சிறுபான்மையினரின் வாக்குகளை மட்டுமே சூறையாடும் பச்சைக் கட்சியினர் தமிழர்களின் தலைவிதியினை மாற்றுவார்களா? என்பது இப்போதைய புதிய கேள்வியாக உள்ளது!

சிறுபான்மைக் கட்சிகள் குறிப்பாக தமிழர் தரப்பு விழுந்து விழுந்து ஆதரவு தேடும் ஐக்கிய தேசியக் கட்சி தமிழர்களுக்கு செய்த பெரும் துரோகங்களையும் தமிழர்கள் மறந்துவிட்டனர். மறப்பதும் மன்னிப்பதும் மனிதப் பண்பு என்று வைத்துக்கொண்டாலும் ஐ.தே.க செய்தது குறிப்பாக தமிழர்களுக்கு செய்தவை மறக்கவோ. மன்னிக்கவோ இயலாதவை. துன்பமதை அனுபவித்த தமிழர்கள் ஒருபுறமிருக்க, தமிழ்த் தலைமைகள் ஏன் பச்சை நிறக் கட்சிக்கு கம்பளம் விரித்து வரவேற்கின்றது.

1983 இலும், அதற்கு முன்பும் நடைபெற்ற இனக்கலவரங்களை மறந்துபோனதாக இல்லை. திருநெல்வேலியிலே நடைபெற்ற நிலக் கண்ணி வெடியே இராணுவத்தினர் இங்கே கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடங்கியதுதான் 1983, ஜூலைக் கலவரமாகும். பெரும்பான்மை இனத்தவர்களால் எம்மவர்கள் கொல்லப்பட்டது. பெண்களின் கற்பு சூறையாடப்பட்டது! சொத்துக்கள் பறிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு, உயிருடன் தமிழர்கள் எரிக்கப்பட்டு வீடுவாசல்கள் கொழுத்தப்பட்டு எவ்வளவோ கொடுமைகள் நடந்தேறியது! தமிழ் மக்கள் அனைத்தையும் இழந்து உடுத்த உடுப்புடன் கப்ப லேறி வந்த வரலாறு இன்னும் மறக்கப் படவில்லை.

இன்று ஐ.தே. கட்சி சொல்வதனைப்போல அன்றும் தமிழ் மக்கள்மீது கரிசனை காட்டியிருந்தால் ஜூலைக் கலவரம் தடுக்கப்பட்டிருக்கும்.

இதனைத் தொடர்ந்து இலங்கைப் படைகளுடன் யுத்தம் மூண்டபோது, வடமராட்சிப் பகுதியை கைப்பற்றியது இலங்கை இராணுவம். அப்போது கட்டுக்கடங்காமல் அட்டுழியம் நடைபெற்றது. அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தொடங்கிவைத்த யுத்தமே பின்னர் தமிழர்களுக்கான யுத்தமாக கொழுந்து விட்டெரிந்தது.

பின்பு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை ஐ.தே.கட்சி அரசு மாறி சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சி அரங்கேறியது! அப்போது தமிழர் தரப்பின் பிரச்சினையை தன்னுடைய காலத்தில் தீர்க்கவேண்டும் என்று எண்ணிய அம்மையார் தீர்வு நகல் ஒன்றை தயாரித்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கியபோது - தமிழர்களுக்கு அதிகளவான அதிகாரங்களை நீங்கள் வழங்க முன்வந்திருக்கின்றீர்கள். அதிகளவான அதிகாரங்களுடன்கூடிய தீர்வை தமிழர்களுக்கு வழங்க ஐ.தே. கட்சி என்றுமே ஆதரவு வழங்காது எதிர்க்கும் என்றுகூறி தீர்வு நகலை பாராளுமன்றத்துக்குள்ளே வைத்துக் கொழுத்தியவர் வேறு யாருமில்லை ரணில் விக்கிரமசிங்கதான். அன்று சந்திரிக்கா அம்மையார் கொண்டு வந்த தீர்வினை ஐ.தே. கட்சி கடுமையாக எதிர்க்காதுவிட்டிருந்தால், அல்லது ஆதரவை வழங்கியிருந்தால் தமிழர் பிரச்சினைதீர வாய்ப்பு வந்திருக்கும்.

ஆக, தீர்வினை கடுமையாக அன்றிலிருந்து இன்றுவரை எதிர்த்துக்கொண்டு இருக்கும். ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைமையும் தமிழர்களுக்கு ஒரு போதும் எதனையுமே வழங்கப்போவதில்லை. புதிய நல்லாட்சி அரசின் பிரதமராயிருந்த ரணில் அவர்கள் 13 ஆம் சரத்துக்கு அப்பால் தீர்வை தரமுடியாது என்றும், ஒரு அங்குலமேனும் வடக்கிலிருந்து படையினரை அகற்றவேமுடியாது என்றும் அறுதி முடிவாகவே சொல்லிவிட்டார். இனிவரும் தேர்தலில் வென்று எதனைத் தரப் போகின்றார்.

ஆசியாவிலேயே முதல்தர நூலகமாயிருந்த யாழ். பொது நூலகத்தினை எரித்தது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே. இதன்மூலம் தமிழர்களின் அறிவுப்பசியினையும், தமிழர்கள் கல்வியிலே தலைகாட்ட முடியாதபடி நூலகத்தை எரித்தது - எரிந்தது நூலகம் மட்டுமில்லை உள்ளே இருந்த விலைமதிப்பற்ற சொத்தான நூல்களும் தான். நூலகத்தினை எரித்து தமிழர்கள் வாழ்வில் என்றுமே மாறமுடியாத கறையினை உண்டாக்கிய ஐ.தே. கட்சி இனி என்ன செய்யும்? தமிழர்களின் தலைவிதியினை மாற்றுமா?

நிலைமை இவ்வாறிருக்கும்போது, இன்றுவரை புலிப்புராணம்பாடியே வாக்கு வேட்டை நடாத்தி வெற்றியினை அரசியல்வாதிகள் குவித்துவருகின்றனர். இன்று அந்த அமைப்பின் ஆதிக்கம் வடக்கு, கிழக்கிலேயே முற்றாகவே நிறுத்தப்பட்டுள்ள நிலையிலும் இன்றுவரை அதன் நாமம் உலகமெங்கும் எங்கோ ஒரு மூலையிலே ஒலித்தவண்ணமே உள்ளது.

அப்படியான ஒரு பலம்வாய்ந்த அமைப்பினை அழிப்பதற்கு அத்திவாரமிட்டவர் ஐ.தே.க தலைவர்தான். ஐ.தே.க அரசினைப் பொறுத்தமட்டிலே சிறுபான்மையின மக்களின் வாக்கு ஏதோவொருவகையிலே ஆதிக்கம் செலுத்தி வருவதனை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. இருந்தும் வாக்கினை மட்டுமே இலக்காக கொண்டு வெற்றியடைவதோடு மட்டும் தமிழர்களையும் அவர்களின் தேவைகளையும் மறந்துவிடும் அரசியலாளர்கள் வரிசையில் ஐ.தே.க. முதலிடத்திலே உள்ளது.

இவை எல்லாம் கடந்து, கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரியுடன் துணைநின்று வெற்றியில் பங்குகொண்டு பிரதமர், மற்றும் அமைச்சரவையை அமைத்துக் கொண்ட ஐ.தே.க. அரசு ஆறு மாதங்களில் தமிழருக்கு எதனையுமே செய்யவில்லை. சிறையிலுள்ளவர்களை விடுவிக்ககேட்டனர். மீளக்குடியமர நிலங்களை விடுவிக்க கேட்டனர். காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்கக் கேட்டனர்.

வடக்கிலிருந்து இராணுவத்தினை அகற்றக் கேட்டனர். இவை யாவும் தமிழர் தரப்பினைப் பொறுத்தமட்டிலே முக்கிய பிரச்சினை. ஆனால் அரசை பொறுத்தமட்டிலே சிக்கலான விடயங்களல்ல, நிலத்தை விடுவிக்க இராணுவம் தடை என்றார்கள். வடக்கிலிருந்து இராணுவ பிரசன்னத்தை ஒரு அங்குலமேனும் குறைக்கமுடியாது என்றனர். 13ஆம் சரத்து அப்பால் யோசிக்கவே முடியாது என்றும் ஐ.தே.க அரசு அறுதியிட்டுக் கூறியது!

அப்படியானால் எதுவுமே நடக்காது, நடக்கவும் வாய்ப்பில்லை. இருந்தும் காலம் காலமாக தமிழ்ர் தரப்பு அரசியல்வாதிகள் ஐ.தே.கட்சியினை ஆதரிப்பது, ஆதரித்து வருவதன் மர்மம் என்ன?

இந்த நாட்டிலே சுதந்திரக்கட்சி, மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு தேசியக் கட்சிகளுமே நாட்டினை ஆண்டு வருகின்றனர். இந்த வகையிலே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பிலே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பிலே அதன் தலைவரான மகிந்த ராஜபக்ஸ ஜனாதிபதியானார். அவர் பதவியிலே இருந்த காலத்திலே வழங்கிய பல சந்தர்ப்பங்களையெல்லாம் தட்டிக்களித்து எதிர்ப்பு அரசியல்பேசி வந்த தமிழர் தரப்பு ஐ.தே.க. செய்தசெய்து வரும் சூழ்ச்சிகளை மறந்து எதுவித நிபந்தனைகளுமின்றி ஆதரவுவழங்கி வருவது தமிழ் மக்கள் மத்தியிலே மர்மமான நிலையே காணப்படுகின்றது.!

நல்லாட்சி அரசாக ஐ.தே.க. இயங்கிய போது ஆதரவு நல்கிய தமிழர் தரப்புக்கு கை நிறைய பணம், சொகுசு வாகனம் வெளிநாட்டு பிரஜாவுரிமை என்பவற்றை ஐக்கிய தேசியக் கட்சி இவர்களுக்கு வழங்கியிருந்ததாக தகவல்கள் வெளியாகி இருந்தது! அதுமட்டுமன்றி இரகசியப் பேச்சுவார்த்தைகள் இங்கும், இலண்டனிலும் நடைபெற்றது. ஆகவே தமிழ் மக்களுக்காக எவ்வித கரிசனையும் காட்டாத ஒரு கட்சி மீண்டும் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை எதிர்பார்த்து நிற்கின்றது.

"நக்குண்டார் நாவிழந்தார்" என்பது போல பணம், சொகுசு வாகனம் வாங்கியவர்கள் தமிழர்களின் வாக்குகளை பச்சை நிறக் கட்சிக்குவாரி வழங்குங்கள் என்று அறிக்கைவிடுவார்கள். தமிழ் மக்களும் பச்சைநிறக் கட்சியின் சூழ்ச்சிகளையும், தமிழர்களை

**அளவெட்டி**
**ப.உதயகுமார்**

புறக்கணித்துவரும் சங்கதி களையும் அறியாமலே வாக்களிப்பார்கள்.

எனவே இந்த நிலை மாறவேண்டும் தமிழர்களையும், அவர்களின் வாக்குகளையும் வைத்து அரசியல் பிழைப்பு நடாத்துபவர்களின் கபட நாடகத்தினையும் உணர்ந்து கொள்ளவேண்டிய கடப்பாடு தமிழ் மக்களுக்கு இருக்கவேண்டும்.

இது இவ்வாறிருக்கும்போது மகிந்த, மைத்திரி அணியின் கூட்டு உறுதியாகியுள்ளது. இதன்மூலம் மகிந்த பிரதமரானால் தமிழர் தரப்பின் அரசியல் எதிர்காலம் என்ன?, எதிர்ப்பு அரசியலா? காலம் காலமாக தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்கு வேண்டியவர்களுடன் கூட்டாவதும் வேண்டாதவர்களை தூக்கியெறிந்து எதிர்ப்பு பேசுவதும் சகஜமாகிவிட்டது. இது அரசியல்வாதிகளின் களமல்ல. தமிழ் மக்களின் பிரச்சினை தீரபேசவேண்டிய காலம். எது எப்படியமைந்தாலும் தமிழர் தரப்பின் பிரச்சினைக்கு ஐக்கிய தேசியக் கட்சியால் தீர்வினைத் தரமுடியுமா?

ஐ.தே.க. ஆட்சியில் தமிழருக்கு தீர்வு கிட்டுமா? காலம்தான் பதில் சொல்லவேண்டும்.



# நீர் வெறுப்பு நோய்

Dr. சி.யமுனாநந்தா





**நீர் வெறுப்பு நோய் எமது சமூகத்தில் உருப்பெருக்கம் அடையும் உயிர்க்கொல்லியாக மாறுபட்ட பரிமாணத்தில் உருவெடுத்துள்ளது. பொதுவான சுகநலப் பிரச்சினையான நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளின் தீண்டல்களின் பாதிப்பினை இக்கட்டுரை விளங்குகின்றது. இந்நோய் தொடர்பான விழிப்புணர்வினை மக்கள் அறியவேண்டியது அவசியமாகிறது.**


## தொற்றுகைக்கு ஏதுவான சம்பவங்களின் வகைகள்

| காயத்தின் வகை | சந்தர்ப்பம் | முகாமைத்துவம் |
|---|---|---|
| வகை III | தனி அல்லது பலகாயங்கள் கடித்தல், கீறல் காயமுற்ற தோலினை நக்கல்.<br>*தனிமையான அல்லது பல கடிகாயங்கள் அவற்றில் இருந்து குருதி வரல், குறிப்பாக தலை, கழுத்து, முகம், நெஞ்சம், மேற்கை, உள்ளங்கை, விரல் நுனிகள், விதை, ஆண்குறி ஆகிய இடங்களில் கடித்தல்.<br>* பல கீறல் காயங்கள் குருதி வடிதலுடன் தலை, கழுத்து, முகத்தில்.<br>* தனிமையான அல்லது பல ஆழமான காயங்கள் உடலின் எப்பாகத்திலும்.<br>* காட்டு மிருகங்களினால் கடிபட்டு குருதி வெளிவரல். | நீர்ப்பீடனம் ARS, ARV ஏற்புத் தடுப்பு மருந்தும் வழங்கப்படும். |

வீட்டுச் சூழலில் வெளவால், எலி, பறவைகள், அணில், முயல் என்பன நீர் வெறுப்பு நோயினை ஏறபடுத்தியதாக அறியப்படவில்லை. எனவே இவற்றினால் கடியுண்டால் பொதுவாக சிகிச்சை அவசியம் இல்லை.

## 05. நீர் வெறுப்பு நோய்த் தடுப்புச் சிகிச்சை

### தீர்மான மரவரிப்படம்




படி - 1 - காயத்திற்கான பராமரிப்பு.
படி - 2 - ARV அளித்தல்.
படி - 3 - ARV உம் ARS (RIG) அளித்தல்.

வகை I - ஆபத்தற்ற நிலை.
வகை II - தொற்றலுக்கு ஏதுவான சிறிய ஏது நிலை.
வகை III - தொற்றலுக்கு ஏதுவான பாரிய ஏது நிலை.

(தொடரும்...)

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
நாளிதழ்
இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்தும்
தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு
புலமைப் பரிசில் மற்றும் 3 ஆம் 4 ஆம் தர மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் தினமும் விடைகளுடன் வெளியாகின்றன!
புது அம்சங்கள்...
புது மாற்றம்...
புதுப் பொலிவு...
புதுச் சுவை...
புது விலை...
ஐந்தாம் கல்வி முரசு
வெள்ளிக் கிழமைக் கொசிப்பு பக்கம்
ஊரும் உலகமும்
வெளிவாயன், சொல்லுயசு
சிறுவர் முரசு
வியாழன் வினோதம்
பதிவிறக்கப் பெட்டகம்
சேகரம்
சனிக்கிழமை காரம்
நாற்சந்தி
பரிசுப் போட்டிகள்
மாண்புறு மாதர்
மருத்துவம்
செவ்வாய் சித்திரம்
இலக்கியம்
விளையாட்டு உலகம்



# பெருநாள் பரிசு

அப்ரார் ஏ.அஸீஸ், யாழ்ப்பாணம்.

**பிறை** கண்டுபிடி கண்டுவிடு என்று பிறை கண்டுபிடித்த நோன்பும் நோற்று முழுமைபெறும் நாளும் நெருங்கியாச்சு, காலம் சுருங்கி விட்டதைப் போல, நோன்பு நேற்றுத் தான் ஆரம்பித்தது போல இருக்கின்றது. இறுதிப் பத்தின் இறுதியிலல்லவா இருந்து கொண்டிருக்கின்றோம். அல்லாஹ் எனது நோன்புகளையும் ஏற்று எனது துஆக்களையும் கபூலாக்கி, எனது வேண்டுதல்களை செவிசாய்த்துவிடவேணும் என்று எண்ணிக் கொண்ட மர்யம், ஸஹர் செய்வதற்கான அறிவிப்பு அலை காற்றின் ஒலியாக "தஹஜ்ஜத் அதான்" அழைப்பாக செவியில் வந்து நுழைய!

ஓ! மணியும் இரவு 3 ஆகிவிட்டதே என்றவாறு தூங்கிக்கொண்டிருந்த பாய், தலையணையை சுருட்டி அதற் குரிய இடத்தில் வைத்துவிட்டு, சபிய்யா, சாரா, காஜர் அனைவரையும் எழுப்பி, கைகால்கள் அலம்பி வுழூச் செய்துவருமாறு பணித்தாள். அதற்கிடையில் தனது நடமாட முடியா பாரிசநோயினால் படுக்கையில் கிட்டத்தப்பட்ட கணவர் காதர் பணிவிடைகளையும் செய்து முடித்துக்கொண்டாள்.

மக்களும் தானும், ஸஹர் உணவு களை ஒரு சகனில் இட்டு சுப்பராவின் மேல்வைத்து இருப்பதை பங்கிட்டு அழகிய முறையில் உண்டு. சுடச்சுட தயாரித்த கோப்பியையும் குடித்து முடித்து மறுநாளுக்கான நோன்பிற் காக ரிய்யத் செய்துகொண்டார்கள்.

ராத்தா, சபிய்யா ராத்தா, நோன்பு என்றா எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா. ஸ்கூல் போக தேவை இல்லை, டியூசன் போக தேவை இல்லை. நல்லா தூங்கி எழும்பி விளையாடலாம் என்று சாரா சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவள் தலையில் குட்டு ஒன்று வைத்த சபிய்யா, ஓஹோ... நோன்பு இத்தன விளையாட்டுத்தனமாகவா நீங்க நெனச்சிருக்கீங்க. மக்கு... மக்கு... அப்போ, தராவீஹ் தொழும்போதும் தொழாம நல்லா விளையாடுவீங்க போல இருக்கே.. ம்ஹூம் நானும் முன் ஸப்ல அமர்ந்து தொழுவதால் உங்கள கவனிக்காம விட்டுட்டேன் என்று அவள் கூறிமுடிப்பதற்குள்...

ஆமா... ராத்தா சாரா ராத்தா எங்கே தொழுவுது அல்லாஹ். பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற அச்சம் கொஞ்சமும் இல்லாம அங்க இங்க பார்த்து கொண்டுதான் இருப்பா என்று உண்மையை ஒத்தூதி விட்டாள் சாரா.

அப்படியா சாரா பார்த்தீங்களா உம்மா... இந்த காஜரை இனிமே நான் தராவீஹ் தொழும்போது எனக்கு பக்கத்தில் வச்சுக் கொள் ளோணும், பிறகு அது எதுவுமே விளங்காத செய்கைகளாகிவிடும், அல்லாட கோபத்துக்காளாக்கிடும். நாமும் பாவத்தாளிகளாகிவிடுவோம் உம்மா!

என்ன ராத்தா நீங்க பெரிய பெரிய வார்த்தைகளெல்லாம் சொல்லுறீங்க. எனக்கு பயமா இருக்கு ராத்தா. நல்லா சொல்லுங்க சபிய்யா ராத்தா. இந்த மரமண்டைக்கு உறைக்கட்டும் என்று சொன்ன சாராவை தடுத்த சபிய்யா நீங்க உங்களுக்கு மூத்தவங்கள உதா சீனமாக கதைக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு...

இங்க பாருங்க, காஜர். அல்லாஹ் என்ன சொல்கிறான் தெரியுமா? ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள்மீது நோன்பு விதியாக்கப்பட்டதுபோல உங்களுக்கும் விதிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் நீங்கள் தூய்மை உடையோர் ஆகலாம் என்று கூறுகின்றான். ஏன் தெரியுமா?

நீங்களும் இந்த நோன்பை நோற்று தக்வாவைப் பெற்று இறைகட்டளைக் குக் கீழ்ப்படிந்து உங்கள் உள்ளங்களை நல்ல பண்புகளால் நிறைத்துக் கொள்ளுங்கள் என்பதற்காகத்தான் அதைவிட்டு விட்டு, இந்த மாதத்தை வெறும் பசியோடும் தாகத்தோடும் கழிப்பதும், சோம்பலுடன் தூக்கத் தோடும் கழிப்பது என்பதும் உங்க பேச்சும் வெறும் இறையச்சம் தரும் செயலல்ல. நல்லா புரிஞ்சுகொள்ளுங்க! அத்தோடு விளையாட்டுக்கேனும் பொய்பேசுவதும், கோள்சொல்வதும் கூட எம்மை இந்த ரமழானில் அடைய வேண்டிய அடைவை எட்டாத எட்டாக் கனி ஆக்கிவிடும் புரிஞ்சுகொள்ளுங்க.

சரி ராத்தா, நான் எண்ணிய விளை யாட்டு நினைவுகள எல்லாம் விட்டு விடுவேன் ராத்தா.

அது சரிவராது. நிறைய நிறைய திக்ரு ஸலவாத் ஓதுவதோடு குர் ஆனையும் ஓதவேணுமில்லயா ராத்தா என்றாள் சாரா. ஏன் நீங்களும் செய்ய வேணும்தானே என்றாள் சபிய்யா. அல்லாஹ்வே, நானென்றால் குர் ஆனெல்லாம் ஓதி தமாம் செய்ய ரெடியா இருக்கேன். ராத்தா! அது எனக்குத் தெரியும்தானே சாரா! அதற்கிடையில் காஜரை குத்திக்காட்டாமல், எல்லாரும் போய் இனி ஆகவேண்டியதை கவனீங்க என்று கூறி சபிய்யா வார்த்தையை அவ்விடத்தை விட்டகல. சபிய்யாவும் தாம் உண்டு பரிமாறிய வற்றை துப்புரவு செய்யத் தயாரானாள்!

இவர்களின் உரையாடலை தொழுகை அறையில் அமர்ந்து கேட்டுக்கொண்டு இருந்த மர்யம் தன் குழந்தை வளர்ப்பில் ஜொலித்துத் தெரிந்த வாசகங்களின் ஒவ்வொரு கனத்தையும் எண்ணி மகிழ்ந்து, அவளையறியாமலே யாஅல்லாஹ் எனது பிள்ளைகள் தெரிந்தோ, தெரியாமலோ செய்திட்ட எல்லாப் பிழைகளையும், மன்னித்து எனது பாவங்களையும் எனது கணவர் பாவங்களையும் மன்னித்து அருள் புரிவாயாக என்று துஆச் செய்து கொண்டாள்.

எப்பவும் அவள் உள்ளம் தன்னம் பிக்கை நிறைந்ததாகவே எதையும் எதிர்நோக்கும். எதையும் தயங்காமல் இறைவனிடம் கேட்கும் அவள், எளிதில் யார் உதவியும் தேவை என்று நாட மாட்டாள். நம்பிக்கையே வாழ்க்கை என்றவாறுதான் அவள் ஒரு நடமாடும் மனைவியாக, தாயாக வலம் வந்து கொண்டிருக்கின்றாள். அதனால் தனக்கு அடுக்கடுக்காக மூன்று பெண் பிள்ளைகள் என்றோ, மூத்த மகள்



சபிய்யா திருமண வயதை எட்டி விட்டாள் என்ற கவலையிலோ அவள் அல்லாடுவதில்லை. அமைதியாக அல்லாஹ்விடம் முறையிடுவாள். எந்தக் கவலையையும் கணவருக்கோ, பிள்ளைகளுக்கோ வெளிக்காட்டமாட்டாள்.

நிலைமை இப்படியிருக்க கணவர் காதர் கண்ணீர் மழையை தாரைதாரை யாக கொட்டிக்கொண்டிருந்தார். என்னதான் அவருக்கு ஆறுதலான பார்வைக்கு மனைவி, அன்பான அழகுக் குழந்தைகள் இருந்தாலும் அவர்களுக் குரிய கடமைகளை நிறைவேற்றமுடியாத ஒரு துர்ப்பாக்கியம் ஏற்பட்டுவிட்டதே என்பதுதான் அந்த ஆறாத கண்ணீருக் கான காரணம். அதிலும் தான் ஆசை ஆசையாகக் மௌலவியாவுக்கு படிக்க வைத்த மகள் இன்று மார்க்க விஷயம் பற்றி எடுத்துக்கூறிய விதம் பற்றி பெருமையும் அவர் உள்ளத்தில் குடிபுக அடுத்து அவளை ஒரு நல்ல ஸாலிஹான கணவனுக்கு மனைவி யாக்கிப் பார்க்கவேணும் என்ற ஆவலுடன் இரட்டிப்பாகிவிட்டது.

நீண்டநேரம் கணவர் தன்னை அழைக்காதுள்ளாரே என்று அவரின் மாத்திரைகளை எடுத்துவந்த மர்யம் அங்கே கண்ணீர் கோலம்கண்டு என்னங்க நீங்க சின்னப்பிள்ளைமாதிரி என்று கூறிக்கொண்டு சீலைத்தலைப் பால் ஒற்றி ஒற்றி துடைத்து அவரை தேற்றினாள். தன் பிள்ளைகள் பேச்சு அவர் காதிலும் பட்டிருக்கும். அத்தோடு முன்பென்றால் தானும் பங்குபற்றுவார் தானே என்று நினைத்துத்தான் அழுகிறார் என்பதே அவள் எண்ணம்!

இல்ல மர்யம் நான் என்ட சபிய்யா மகள்ட கலியாணம் பார்க்கோணும். சபிய்யா எனது இந்த நிலைய யாரு நம்ம வீட்ல பெண் எடுப்பாங்க. நம்மட்ட கொடுக்க அந்தளவு சீர் செனத்தி ஒண்ணுமில்லய மர்யம்.

அப்போதான் மர்யத்துக்கும் தன் கணவர் தன் கடமையின் சுமையில் சுழன்றுள்ளார் என்று தெரிந்தது. அவரை ஆறுதல்படுத்தும் அவசியம் உடன் தேவைப்படவே.

இங்க பாருங்க ஏன் நீங்க வீணான கவலையில் மூழ்கிறீங்க. நீங்க நோயாய் இருப்பதும் பெண் பிள்ளைகள் எமக்கிருப்பதும் எல்லாம் ஒரு நன்மைக்குத்தான். இறைவன் உண்டுபண்ணுவது எல்லாம் நன்மைக்குத்தான். அதிலும் இந்த அருள் நிறைந்த மாதத்திலே அல்லாஹ்வுக்காக ஒவ்வொரு மனிதனும் அவன் உயிர் உட்பட அனைத்தையும் தியாகம் செய்யத் தயாராகும்போது இந்தச் சூழலில் உருவாகும் ச்மூகத்திற்கே இன்னலுக்கென எதுவும் இல்லாத போது எமக்கு இதுக்கு மேலும் இன்னல் வராது நீங்க மாத்திரையை போட்டு, தூங்குங்க என்றாள்!


அவளின் ஒவ்வொரு வார்த்தையும் அவரின் செவிகளில் விழ உள்ளமோ சூரியன் கண்டது சூரியகாந்தி பூ மகிழ்ந்தது. தனது மனைவி வார்த்தைகளின் பொறுமையின் பெருமைகண்டு பூரித்து புன் சிரிப்பு உதிர்த்தபோது...

டக்... டக்... டக்... என்று கதவு தட்டப்படும் ஓசை கேட்கவே அவசர அவசரமாக ஓடிச் சென்ற அவள் வந்தவர்களைக் கண்டு ஆச்சரியத்தில் அதிர்ச்சியானாள்! அவர்களை வாங்க என்று அழைக்க முடியாது வர்த்தைகள் தொண்டை க்குள் சிக்கி வெளியே வரமறுத்தது.

என்னம்மா சபிய்யா எங்களை அழைக்கமாட்டீங்களா? வாங்க என்று கேட்டாள் குத்தூஸ் ஹாஜி மனைவி பாத்திமா. இல்ல ஹாஜிம்மா... என்று இழுத்தவளை ஆமா மர்யம் நீங்கதான் எங்க குடும்பத்தை பணக் காரக் குடும்பம் பெரிய குடும்பம் எங்களுக்கும் அவங்களுக்கும் ஏணி வச்சாலும் எட்டாது என்று கோடுபோட்டு பார்க்கறீங்க. எங்க உள்ளத்த தெரியுமா? இந்த நேரம் நாங்க உங்களுக்கு ஸகாத், பித்ரா தர வந்துள்ளோம் என்று நினைப்பீங்க ஆனா... இப்போ நாங்க உங்க மக சபிய்யாவை பெண் கேட்டு வந்துள்ளோம். எங்க மகன் பாயிஸ் ஹாஜிக்கு என்றவாறு அன்றைய அந்த நோன்பு பெருநாளுக்குரிய அனைத்து ஆயத்தங்களும் உள்ள பணம், பார்சல்களை கையளித்தார்கள்.

நடப்பது கனவா, நனவா? என்பதை இனம் காணமுடியா ஓர் இன்பநிலை யில் திளைத்த மர்யம் அல்லாஹ் வால் அருளப்பட்ட அந்த "பெருநாள் பரிசாய்" மருமகன் பாயிஸை எண்ணி மனம்மகிழ்ந்து அவர்களுக்கு சம்மதம் தெரிவித்ததால் குதூகலப் பெரு நாளாய் இப்பெருநாளை வரவேற்கத் தயாரானாள் அவள்!

# வேற்றுக் கிரகவாசிகளின் கதி



**ஆயிரம்** ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள, நமக்கு முன்னரே விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த, ஒரு கோளிலிருந்து புறப்பட்ட அலைகள் ஆயிரம் ஆண்டுகள் பயணித்து, இப்போது நம்மை வந்தடைய சாத்தியக்கூறுகளும் உள்ளன.

### வாவ் (WOW)

1977ஆம் ஆண்டு, ஒகஸ்ட் 16ஆம் திகதி, தேடுதல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குழு, பிரபஞ்சத்தின் ஒரு திசையிலிருந்து ஒரு செய்தியைப் பெற்றது. வாவ் (WOW) என்ற அந்த செய்தி சுமார் 70 நொடிகள் நீடித்தது. பரவசமடைந்த விஞ்ஞானிகள் அந்த செய்தி சுமார் 200 ஒளி ஆண்டுகள் தொலைவிலிருந்து வந்ததை அறிந்துகொண்டனர். உடனே பதில் கொடுத்தனர். உலகமெங்கும் பரபரப்பு நிலவியது.

ஆனால் அந்த செய்தி தொடர்ந்து வராமல் நின்றுவிட்டது. அதற்கு நாம் கொடுத்த பதில் போய்ச்சேர 200 ஆண்டுகளாகுமே. அதற்குப் பிறகுதானே அவர்கள் நாம் இருப்பதை அறிந்து கொள்ளமுடியும்.

தேடுதல் பணியை செட்டி சுமார் 40-50 ஆண்டுகளாக் செய்துவருகிறது. பிரபஞ்சத்தைப் பொறுத்தவரை இது மிக மிக குறுகிய காலம். தேட ஆரம்பித்து சில ஆண்டுகளே ஆவதற்குள் பிரபஞ்சத்தில் அறிவுஜீவிகள் இல்லை என்ற முடிவுக்கு வரமுடியாது. நம் பால் வெளிமண்டலத்திலேயே பல கோள்களில் அறிவுஜீவிகள் இருப்பதற்கான வாய்ப்புண்டு என்று விஞ்ஞானிகள் உறுதியாக நம்புகின்றனர். ஏனென்றால் நம் பால்வெளி மண்டலத்திலேயே பல ஆயிரம் கோடி நட்சத்திரங்களும், அதைச் சுற்றி பல கோள்களும் உள்ளன.

### கெடு வாய்ப்பு

பிரபஞ்சத்தில் ஒவ்வொரு நட்சத்திரமும் ஒன்றைவிட்டு ஒன்று மிகுந்த தொலைவில் உள்ளதால், ஒரு கோளிலிருந்து அனுப்பப்பட்ட செய்தி மற்ற கோளை அடையும் முன்னரே, செய்தி அனுப்பிய கோள், துரதிர்ஷ்டவசமாக அழிந்து போவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளன என்பது மிகவும் கசப்பான, மறுக்கமுடியாத உண்மை.

சில கோள்கள் ஆயிரம் ஒளிவருடங்கள் தொலைவிலும், சில இலட்சம் அல்லது கோடிக்கணக்கான ஒளிவருடங்கள் தொலைவிலும் உள்ளபோது அங்கிருந்து வரும் செய்திகள் இங்குவந்து சேருவதற்குள் அந்த கோள் அல்லது அதில் வாழும் உயிர்கள் அழிந்து போக வாய்ப்புள்ளது.

ஒரு நம்பமுடியாத உண்மை என்னவென்றால், இந்த பூமியில் இதுவரை உயிர்கள்தோன்றி மனிதன் எனும் ஓர் அற்புத பிறப்பு பரிணாமம் அடைந்தது மிக மிக ஆச்சரியமும் அதிசயமுமாகும் என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர். ஏனென்றால் இந்த பிரபஞ்சம் நம்மில் பல பேர் நினைப்பது போல அமைதியானது அல்ல. வானத்தை பார்த்துக் கொண்டிருக்கும் நமக்கு வானத்தில் பெரிய விபத்துக்கள் தெரியாததால் அப்படி தோன்றுகிறது.



உண்மை என்னவென்றால் பிரபஞ்சத்தில் பல அழிவுகள் அவ்வப்போது நடந்துகொண்டிருக்கின்றன. நம் பூமியும் இதற்கு விதிவிலக்கில்லை. நம்மில் பலர் இந்த பூமி எப்போதும் பாதுகாப்பாக இருக்கும் என்ற ஒரு நம்பிக்கையுடன் இருக்கின்றனர். பூமிக்கு பல பாதுகாப்புகள் இருந்தாலும் பற்பல ஆபத்துகளும் காத்துக்கொண்டு இருக்கின்றன என்பதுவும் மறுக்கமுடியாத உண்மை. இந்த பூமி இதற்கு முன் பல்முறை பெரும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. ஆறு கோடி ஆண்டுகளுக்கு முன், அண்டவெளியில் இருந்து சுமார் மணிக்கு 30,0000 கிலோமீற்றர் வேகத்தில் வந்த ஒரு விண்வெளிப் பாறையினால் (ASTEOID) பூமி தாக்கப்பட்டது என்றும் அந்த தாக்குதலினால்தான் டைனோசர் என்ற, அப்போது பூமியை ஆண்டுவந்த மிருகங்களை பூமி இழந்தது என்று விஞ்ஞானிகள் கூறினர். அப்போதைய அரசியல்வாதிகள் அதை நம்பவில்லை. விஞ்ஞானிகளும், சிந்தனையாளர்களும் சொன்னதை ஆட்சியாளர்கள் கேட்டிருந்தால் மனித குலம் நல்ல வளர்ச்சிகண்டிருக்குமே. அவர்கள்தானே விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக்கு பணம்கொடுப்பது!!

அண்டவியல் வளர்ச்சி அடைந்தபின் நம் கண்ணாலேயே அந்த மாதிரி தாக்குதலைப் பார்க்க நமக்கு ஒரு சந்தர்ப்பம் 1994இல் கிடைக்கப்போவதாக கூறினர் விஞ்ஞானிகள். அதிர்ந்துபோன அரசியல் வட்டாரம் அதைப் பார்க்கத்தயாரானது. நல்லவேளை தாக்குதல் வியாழன் மேல் தான். நம்மேல் வரும் பல தாக்குதல்கள் வியாழனின் ஈர்ப்புவிசையினால் வியாழனைத் தாக்கியுள்ளன. வியாழன் இல்லாவிட்டால், பூமிக்கு சங்கு முன்பேயே ஊதப்பட்டிருக்கும்.

விஞ்ஞானிகள் சொன்ன நாளில், அந்தத் தாக்குதல் எல்லோரும் பார்க்க வியாழனின் மேல் நடந்தது. வியாழன் பூமியைவிட பலமடங்கு பெரிது. தாக்குதல் நடந்தபின் பூமி அளவு பெரிய நெருப்பு வியாழனில் எரிவதை, மனித வரலாற்றில் முதன் முறையாக விஞ்ஞானிகளும் அரசியல்வாதிகளும் தொலை நோக்கியின் மூலமாக நேடியாகக் கண்டனர். அறிவியலாளர்கள் கூறியது போல நடந்ததைக் கண்டபின் தான் அரசியல்வாதிகளுக்கு அறிவியல் உண்மைகளைத்தான் கூறுகிறது என்று புரிந்தது. அதன்பின்னர் அண்டவியல் ஆராய்ச்சிகளுக்கு உதவி கொடுக்கப்பட்டது. இதுபோல பல தாக்குதல்களில் இருந்து தப்பிய பூமி ஒரு ஜக்போட் அதிர்ஷ்டசாலி என்று கூறுகின்றனர் அறிவியலாளர்கள். மூன்று சீட்டு விளையாடும்போது மூன்று சீட்டும் ஏஸ் ஆக ஒருமுறையல்ல இரண்டு, மூன்று முறை வந்தால் எவ்வளவு அதிர்ஷ்டமோ அவ்வளவு அதிர்ஷ்டம் பெற்றது பூமி என்று கூறுகின்றனர்.

அழகான பெண்ணை வர்ணிக்க நிலவை உதாரணத்திற்கு சொல்வார்கள். ஆனால் நிலவை நேரில் பார்த்தாலோ அல்லது அதன் க்ளோஸ் அப் புகைப்படத்தையோ பார்த்தார்களேயானால், அதன்பிறகு பெண்ணை வர்ணிப்பதற்குப் பதிலாக, வசைபாடுவதற்குத் தான் நிலவை பயன்படுத்துவர். ஏனென்றால் நிலவில் அவ்வளவு குழிகள். அம்மைத் தழும்பு முகம்போல இருக்கும். எல்லாம் வாங்கிய தாக்குதலின் அடையாளங்கள். பூமிக்கும் இந்த தாக்குதல்



நிகழ்ந்திருக்கிறது. ஆனால் மழை, பூகம்பம், எரிமலை, கண்ட அசைவுகள், கடலரிப்பு போன்றவற்றால் அவை பெரும்பாலும் மறைந்து போய்விட்டன. சைபீரியாவிலும், அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்திலும் மற்றும் பூமியின் சிலபகுதிகளிலும் இந்தத் தழும்புகளைக் காணலாம். புதன் கோளும் ஒரு பலத்ததாக்குதலுக்கு உள்ளாயிருக்கின்றது.

பிரபஞ்சம் வயது அடைந்து கொண்டே இருக்கின்றது. நமது சூரிய குடும்பமும் விதிவிலக்கல்ல. நமது செவ்வாய் கோள் ஒரு காலத்தில் பூமியைப் போலவே காந்தப்புலன் உள்ள கோளாகவும், தண்ணீர், வளிமண்டலம் உள்ள கோளாகவும் இருந்தது. அங்கே ஆரம்பகட்ட உயிரினங்கள் இருந்ததற்கான வாய்ப்புகள் உள்ளன என்று பல அறிவியலாளர்கள் நம்புகின்றனர்.

மேலும் செவ்வாயிலிருந்து உயிர் பூமிக்கு வந்திருக்க வாய்ப்புண்டு என்றும் கூறுகின்றனர். ஆனால் தற்போது அதற்கு காந்தப்புலன் இல்லை. நீர் வற்றிவிட்டது. துருவப் பிரதேசங்களிலும், நிலத்திற்கு அடியில் சில இடங்களிலும்தான் நீர் இருப்பதாகத் தெரிகிறது. வளிமண்டலம் அடர்த்தி குறைந்ததாக மாறிவிட்டது.

இந்தப் பரிணாம மாற்றம் அடையக் காரணம், செவ்வாய் பூமியைவிட சிறியதாய் இருப்பதால் செவ்வாயின் உள்ளே உள்ள உருகிய இரும்பு காலப்போக்கில் குளிர்ந்து கெட்டியாகி விட்டது. பூமியின் உள்ளே கெட்டியான இரும்பும், அதைச் சுற்றி உருகிய இரும்பும் சுழல்வதால் காந்தப்புலன் உருவாகிறது.

செவ்வாயில் அந்த உருகிய இரும்பு குளிர்ந்து கெட்டியாகிவிட்டதால் காந்தப்புலன் இல்லாமல் போய்விட்டது. இந்த காந்தப்புலன் இல்லாவிட்டால், சூரிய காந்தப்புயல்களினால் பூமி தாக்கப்பட்டு உயிர்கள் இல்லாத ஒரு வறண்ட பிரதேசமாக மாறிவிடும். அதுதான் செவ்வாயில் நடந்தது.

**(தொடரும்...)**



# போகவிடு



பாதை வெறுமையாக கிடக்கிறது
அவள் மட்டும் பொறுமையாக
காத்திருக்கிறாள்.

அந்த பாதையில் அவன்
மட்டும்தான் நடந்துவர முடியும்
அந்தப் பாதை அவனுக்காக மட்டும்

அவளது கண்களே விளக்குகள்!
வேறு யாருக்காகவும்
அந்த விளக்குகள் எரியாது!

காற்று வீசினால்
தீபங்கள் அணையலாம்
எந்த புயலிலும் கண்
விளக்குகள் அணையாது!

பாதையில் அவன் வரும்வரை
எரிந்தபடி இருக்கும்
விளக்குகள் எண்ணெய்யில்
எரிகின்றன!

அவள் விழிகள் கண்ணீரில்
எரிகின்றன.
விளக்குகளின் திரிகளில் தீ
அவள் கண் விளக்கில்
மனம்தான் திரி! சோகம்தான் தீ!

காதலுக்கு இன்பத்தைவிட
துன்பம்தான் உரம்
காதலிக்கும்போது வலிதான்
அதிகம்!

வாழ்க்கையும் காதலும்
தோன்றிய காலம் முதலே
பிரிக்க முடியாதவை!

இரவு இன்றி பகல் இல்லை!
சோகம் இன்றி காதல் இல்லை!
அவள் இதயம் இப்போது
சோகத்தால்
நிரம்பியிருக்கிறது!

அவள் தேகம் இப்போது
தாபத்தால் ஏங்கியிருக்கிறது!
காதல் என்னும் மதுக்
கோப்பையில் காமம் ததும்புவது
சுகம்! இதம்!

காதலே இல்லாத வெறும்
காமம் நரகம்! நாசம்!
அவளுக்கு அவன் வேண்டும்
பற்றிக் கொள்ள!

அவனுக்கு அவள் வேண்டும்
படர்ந்துகொள்ள!
யார்மீது வேண்டுமானாலும்
பற்றிக் கொள்வதும்
படர்ந்து கொள்வதும்
வெறும் காமம்!

தாகம் எடுப்பதற்காக
சாக்கடை நீரை
குடிக்கவா முடியும்!

அவனுக்கு அவள் அவளுக்கு
அவன்! நேசத்தோடு
பரிமாற வேண்டும்!

நேசத்தோடு பசியாற வேண்டும்!
உனக்குள் நான் எனக்குள் நீ!
இரண்டறக் கலந்து

இன்பத்தின் உச்சியில்
இளைப்பாற வேண்டும்!

உயிருக்குள் உயிராகி
உணர்வுக்குள் உணர்வாகி
உடலுக்குள் உடலாகி
உன்னதம் காண்கையில்
இதய வலிகள் யாவும்
இறங்கி ஓடிப்போகும்!
காதல் - மனமொத்த காமத்தில்
சங்கமிக்கிறது!
சங்கமம் இல்லையெனில்
சந்தோசம் இல்லை!

கடலில் கலக்கத்தான் நதி
வேகமாக ஓடுகிறது.
பூமியில் கலக்கத்தான் மழை
வானத்தை பொத்துக்கொண்டு
கொட்டுகிறது!
ஒன்றில் ஒன்று கலக்காது
புதியது பிறக்காது!

புதியது இல்லையெனில்
பூமி சிறக்காது!
பூமி சிறக்க காதல் செய்!
பூமி சிறக்க காமம் செய்!
காதலோடு காமம் கலக்க
ஞானத்தோடு வாழ்க்கை
தழைக்கும்!
அதற்காகத்தான் அந்த
உன்னத நாளுக்காய்
அவன் வரும்வரை
அவள் காத்திருக்கிறாள்!

அவள் நெஞ்சம் பாதையில்
முன்னேறி தேடுகிறது!
கண்களோ என்னையும்
போகவிடு
கண்ணாவனை காணவிடு
என்று துள்ளுகின்றன!
அவள் மனதிடம்
ஒரு மனுப்போடுகிறாள்!

நெஞ்சே நெஞ்சே!
நீ செல்லும்போது
விழிகளையும்
வழித்துணைக்கு
அழைத்துப் போய்விடு
இல்லையெனில்
இவை என்னை
தின்றுவிடும்.

**"கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்காண லுற்று**

*அதிகாரம்: 125 - பாடல்: 1244*




**✪ மஹிந்தவை தகர்ப்பதற்குத் தான் ஐக்கிய தேசிய முன்னணி உதயமாகியதே என்கிறாரே ரணில்?**

அவர் அவ்வாறு கூறாமல் மீண்டும் மகிந்த போட்டிக்கு வந்ததால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பின்னடைவு என்றும் மகிந்தவை எதிர்த்து வெற்றிபெறுவது கடினம் என்றும் மகிந்தவுக்கு பெரும்பான்மை சிங்கள மக்களிடையே இருக்கும் ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சி தனியாக நின்று எதிர்கொள்வது சவாலாக இருக்கும் என்றும் ரணில் விக்ரமசிங்க கூறியிருந்தால் ஆச்சரியப்பட்டிருக்கலாம். நீங்கள் குறிப்பிட்டதில் ஆச்சரியமில்லையே.

**✪ சம்பூர் மக்களின் வாழ்வுக்கு 9 வருடங்களின்பின் விடிவு கிடைத்திருக்கிறதே...?**

சம்பூர் மக்களுக்கு அவர்கள் வாழ்ந்த காணிகள் மீண்டும் கிடைத்தால் அது மகிழ்ச்சிதான். ஆனால் எத்தனை தடவை சம்பூர் மக்களின் காணிகள் அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின. செய்திகளை நம்பி அந்த மக்கள் தமது சொந்த இடத்துக்கு போவதும், அங்கிருந்து அவர்கள் திருப்பி அனுப்பிவிடப்படுவதும் தொடர்கதையாகவே இருந்தது. இப்போதுகூட தேர்தல் முடிந்ததும் மீண்டும் தடை, வழக்கு என்று சம்பூர் மக்கள் ஏமாற்றப்படாமல் இருக்க வேண்டும். தேர்தல் முடிந்ததும் பார்ப்போம்.

**✪ அனந்தி சுயேட்சையாக களமிறங்குவாரா ?**

ஆர்வத்தோடு இந்தக் கேள்வியை அனுப்பியிருக்கின்றீர்கள் என்பதை நான் புரிந்துகொள்கின்றேன். ஒரு பெண் தனியாகப் போராடி தனது நியாயத்துக்காக மக்களிடம் நியாயம் கேட்கப்போகின்றார் என்று உங்களைப்போல் நானும்தான் எதிர்பார்த்தேன்.

ஆனால் இறுதியில் அவர் எல்லோரையும் ஏமாற்றிவிட்டார். கூட்டமைப்பை எதிர்த்து அவர் களத்தில் இறங்கினால் கூட்டமைப்பு எந்தளவுக்கு அசிங்கப்படும் என்பதை தெரிந்து கொண்டவர்கள், அக்காவுக்கு என்ன கொடுத்தால் அக்கா தனது போராட்ட குணத்தை மூட்டை கட்டிப்போடுவாரோ, அதைக் கொடுத்து அக்காவை சரி செய்துவிட்டார்கள்.

அக்காவுக்கு மூன்று பிள்ளைகள், பொருளாதார பிரச்சினைகள் உண்டு. என்பதை கணக்கிட்டு டீலை முடித்துக் கொண்டார்கள். அக்கா தேர்தல் டக் அவுட்.

**✪ ஜனநாயகப் போராளிகள் கட்சி மக்கள் மத்தியில் எவ்வாறு நிலைமையை எதிர்கொள்ளப் போகிறது?**

"பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா?" என்ற பாடலை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். அதுபோல் முன்னாள் போராளிகளைப் பார்த்து கூட்டமைப்பு கருடன்கள் கேட்கின்றன. " நீங்கள் படைகளின் கைக்கூலிகளா?, புலனாய்வு ஒட்டுக்குழுக்களா? கூட்டமைப்பை சிதைக்கும் சதிகாரர்களின் ஆட்களா? என்று கேட்டிருக்கின்றார்கள்.

முன்னாள் போராளிகளுக்கு இதை விடவும் ஒரு அவமானத்தை மக்களால் ஏற்படுத்திவிட முடியாது. நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் போராளிகள் குறித்த முடிவை குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் எவ்வாறு எடுக்கப்போகின்றார்கள் என்பதைப் பொறுத்தே முன்னாள் போராளி க்ளின் எதிர்காலம் அமையும்.

**✪ துன்பத்துக்குள் இருப்பவரை துன்பமே சூழுந்தால் என்ன செய்யலாம்?**

தவிர்க்கமுடியாது. "பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்று சும்மாவா முன்னோர்கள் கூறினார்கள். அந்த துன்பத்துக்கு நாமே காரணம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து விடுபடுவதற்கான வழியையும் நாமே கண்டுபிடிக்க வேண்டும். அப்படி மீளத்தெரியாமல் துன்பத்துக்குள்ளே துவண்டு கிடப்பவர்களுக்கு துன்பமே தொடர்கதையாகி விடுகின்றது.

**✪ 'ஓ காதல் கண்மணி' சமூகத்துக்கேற்ற படமா சிந்தியா?**

ஏற்கெனவே, இதே பகுதியில் இந்தப் படம் சமூகத்துக்குப் பிற்போக்கானது என்று கூறியிருக்கின்றேனே. நீங்கள் படிக்கவில்லையா? திருமணத்துக்கு முன்னர் ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழ்ந்து பார்ப்பதென்பது புரட்சியாக இருக்கலாம். வாழ்க்கைக்கு சரிவராது. ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்க்கை நடத்துவதென்பது பரிசோதனை செய்வதல்ல. சமரசத்தோடும், சகிப்போடும் பகிர்ந்து வாழ் வதாகும்.



**(08 ஆம் பக்கத் தொடர்ச்சி**
**பொய்த் தேசியவாதிகளின்**
**போலிக்கோசங்களை நிராகரிக்கவேண்டும்)**

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியான - தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதைவிட்டுவிட்டு தேசியம் பற்றி பேசுவது வேடிக்கையான விடயமாகும். நாங்கள் முதலில் இயல்புநிலை உருவாக்குவதைப்பற்றியே சிந்தித்தோம். எல்லாப் பேச்சுவார்த்தைகளின் போதும் அனைத்துத் தரப்பினாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கை, இயல்புநிலை உருவாக்கத்தைப் பற்றியதே. அதையே நாம் செய்தோம். அதேவேளை எமது இனத்தின் இருப்பையும் அதன் சுதந்திரத்தையும் இன அடையாளத்தையும் அதனுடைய உரிமையையும் தொடர்ந்து வலியுறுத்திவருகிறோம். ஆகவே நாம் செல்லும் வழியே சரியானது என்று இன்று பலரும் புரிந்திருக்கிறார்கள். உண்மையான மாற்றத்தை விரும்புவோர் எங்களின் பக்கம் திரும்பியிருக்கிறார்கள். இதை நாம் இன்னும் வேகப்படுத்துவோம்.

**கேள்வி:- நடைபெறப் போகின்ற தேர்தலில் தமிழ் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

**பதில்:-** தேர்தல் என்பது மக்கள் தங்களுடைய எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்காக நிகழ்காலத்தில் எடுக்கின்ற சரியான நிலைப்பாடாகும். தேர்தலில் சரியானவர்களை மக்கள் இனங்கண்டு ஆதரிக்கவேண்டும். யாரை ஆதரிப்பதன்மூலமாக இனத்தின் பாதுகாப்புக்கும் வாழ்வின் மேம் பாட்டுக்கும் நன்மை கிடைக்கும் என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். யார் மக்களுக்காக' மக்களோடு நின்று பாடுபடுகிறார்கள் என்று புரிந்து கொள்ளவேண்டும். மக்களை வைத்துப் பிழைப்போரைத் தவிர்த்து, மக்களுக் காக உழைப்போரை ஆதரிக்கவேண்டும். நாங்கள் மக்களோடு நின்று மக்களுக் காக எம்மை அர்ப்பணித்துப் பாடுபட்டிருக்கிறோம். ஆகவே நியாயத்தின்படி எம்மையே ஆதரிக்க வேண்டும் என்றும் அதற்காக தகுதி எமக்கே உண்டென்றும் கூற விரும்புகிறேன். இதேவேளை எம்மைப் பலப்படுத்தவேண்டிய பொறுப்பும் கடப்பாடும் மக்களுக்கும் உண்டு. எம்மை ஆதரிப்பதன்மூலமாகவே மக்கள் தங்களுடைய எதிர்காலத்தைப் பாதுகாக்கமுடியும்.

தேர்தல் என்பது ஒருவகையில் மக்களுக்கான சோதனைக்காலமே. இந்தச் சோதனைக்காலத்தில் சரியான முறையில் மக்கள் தேர்வைச் செய்யவில்லையென்றால் அதன் பாதிப்புகளை மக்கள்தான சுமக்கவேண்டும். சரியான முறை யில் தேர்வுகளைச் செய்தால், மக்கள் வெற்றியடைய முடியும். அத்தகைய ஒரு மாற்றத்தை - இதுவரையிலும் நடக்காத ஒரு மாற்றத்தை மக்கள் இந்தத் தேர்தலில் ஆரம்பிக்கவேண்டும். பொய்த் தேசியவாதிகளையும் போலிக் கோஷங்களையும் நிராகரிக்கவேண்டும் என்று கேட்கிறேன்.

# காதிலை பூதந்தசாமி

**வணக்கமுங்கோ. நான் நீண்டகாலமாக சொல்லிக் கொண்டுவந்தது இப்போது உண்மையாகிட்டுது. கூட்டமைப்புக்காரர் புலிகள் அழியவேணும் என்று விரும்பிச்சினம். தமிழ் மக்கள் அழியவேணும் எண்டும் விரும்பிச்சினம். அப்படி நடந்தால்தான் தங்களுக்கு வாழ்க்கை எண்டும் நினைச்சிச்சினமுங்கோ.**

புலிகள் அழிந்தால் தங்களை கட்டுப் படுத்தவும், மிரட்டவும் ஆள் இல்லாமல் போய்விடும் என்று நம்பிச்சினம். தமிழ் மக்கள் அழிந்தால் அந்த அழிவைச் சொல்லி யும், அந்த அழிவுக்கு காரணமான சிங்களத் தரப்பை பழிவாங்கவேணும் எண்டு நம்பிச்சினம்.

அவர்கள் நினைத்ததே நடந்தும் முடிஞ்ச துங்கோ. புலிகள் அழிந்தார்கள். கூட்டமைப் புக்காரர் பார்ளிமெண்டில பலமாக இருந்திச் சினம். ஆனால் யுத்தத்தை நிறுத்தும்படி அரசாங்கத்தைக் கோரவில்லை. கொழும்பில் உள்ள எந்தவொரு தூதரகத்துக்கு முன்னா லும் யுத்தத்தை நிறுத்த உதவுங்கோ என்று போராடவும் இல்லை. மகஜர்களும் கொடுக்க வில்லை. ஆனால் அதே காலகட்டத்தில தூதரகங்களுக்குப் போய் விருந்துகள் உண்டும், மது அருந்தியும் மகிழ்ந்து குலாவினார்கள்.

இப்போது அடுத்த பார்ளிமெண்ட் தேர்த லில் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் இருபது எம்.பிக்களை வெற்றிபெற உதவவேணும் என்று கூறுகினமே. அப்போது இருபத்தி ரெண்டு பேர் கூட்டமைப்புக்கு எம்.பியாக இருந்திச்சினமே. அதை வைத்துக்கொண்டு எதை கிழிச்சிச்சினம். ஒண்டுமில்லையே.

அவ்வளவு ஏனுங்கோ கடந்த காலத்தில ஒவ்வொரு தேர்தல்களிலையும் கூட்டமைப்புக்குத் தானே தமிழ் மக்கள் அதிக வாக்குகளை வழங்கி வெற்றிகளை வழங்கியிருக்கினம். அதையெல்லாம் பெற்றுக்கொண்ட எதை தமிழ் மக்களுக்காக பெற்றுக் கொடுத்தி ருக்கினம்? எதைச் செய்திருக்கினம். ஒன்றுமே இல்லையுங்கோ.

இப்போது மீண்டும் தங்களுக்கு இருபது எம்.பிக்களை தமிழ் மக்கள் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கின முங்கோ. இருபது எம்.பிக்களை தமிழ் மக்கள் வழங்கினால் அதைக் கொண்டு தமிழ் மக்களுக்காக என்ன செய்யப்போகினம் எண்டதையோ, அதை எப்படிச் செய்யப் போகினம் எண்டதையோ உந்தக் கூட்டமைப்பு குறிப்பிடவில்லையுங்கோ.

இருபது எம்.பிக்கள் கிடைத்தால் அதை தமக்கும் தமக்குவேண்டிய ஆக்களுக்கும் வசதியாக பிரித்துக்கொள்வார்கள். தமிழ் மக்களுக்காக கூட்டமைப்புக் கோமாளி களுக்குப் புறம்பாக தமிழ் எம்.பி.க்கள் இருக்கமாட்டார்கள். சம்மந்தமானவர் சொல் லுறதுதான் தமிழ் மக்களின்ர கருத்து என்றும், தம்பி சுமோ சொல்லுறதுதான் தமிழ் மக்களின்ர உளரல் என்றுசொல்லிக் கொண்டு இருப்பினம். தமிழ் மக்களும் கேட்டுக்கொண்டு இருப்பினம்.

ஒருவேளை சம்மந்தமானவர் சொன்ன மாதிரி தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு இருபது எம்.பி.க்களை வெற்றிபெறும் வகை யில் வாக்குகளை வழங்காதுவிட்டால் கூட்டமைப்பிலுள்ள சம்மந்தமானவரும் ஏனைய தலைவர்களையும் தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டதை ஏற்றுக்கொண்டு அரசி யலில் இருந்து விலகிக்கொள்வார்களா? தமிழ் மக்கள் இவர்களின் கோரிக்கைமீது நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களை தவறாக வழிநடத்தியதற்காக பகிரங்கமாக மன்னிப்புக் கேட்பார்களா? என்பதைத் தானுங்கோ தமிழர்களின் புத்திஜீவிகள் என்றுகூறிக் கொள்ளும் வெங்காயங்கள் கேள்வி கேட்க வேணுமுங்கோ.

அப்படி சுயவிமர்சனத்துக்கு உட்படுத்திக் கொள்ளும் யோக்கியதை கூட்டமைப்பு கோமாளி களுக்கும் இல்லையுங்கோ. அதை மக்கள் சார்பாக கேள்வி கேட்கும் கற்பு புத்திஜீவி களுக்கும் இல்லையுங்கோ. கூட்டமைப்புக்கு வாக்களித்த தன்மானமுள்ளவைக்கும் அதைக் கண்டிக்கும் அதுவும் இல்லையுங்கோ.

கூட்டமைப்பு இவ்வளவு நாளும் பூசிக் கொண்டிருந்த தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற சாயமெல்லாம் இப்போது வெளுறிப் போச்சுதுங்கோ. முன்னாள் புலிப்போராளிகள் என்று ஒரு அமைப்பு போய் கூட்டமைப்பிடம் தமக்கும் ஆசனம் வழங்கவேணுமெண்டு கேட்டபோது, ஆஹா நீங்கள் துரோகிகள், உங்களை நம்பமுடியாது. உங்களுக்கு ஆசனம் இல்லை எண்டு முகத்தில அடிச்சது மாதிரி விரட்டிவிட்டிட்டினமுங்கோ.

வெளியால வந்த முன்னாள் போராளிகள் என்ன சொல்லி இருக்கினம் தெரியுமோ, இவ்வளவு நாளும் கூட்டமைப்பு தமிழ் மக்களை ஏமாற்றிக்கொண்டிருந்தது. இப்போது கூட்டமை ப்பின் உண்மை முகத்தை காட்டிவிட்டது. இனிமேல் இந்தக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளைப் பற்றியோ, தேசியம் பற்றியோ கதைக்கக்கூடாது என்று எச்சரிக்கை செய்திருக்கினமுங்கோ.

அதுமட்டுமல்லையுங்கோ, உண்மையான புலிகள் முள்ளிவாய்க்கலில சைனட் கடித்து செத்துப்போயிட்டினமெண்டும், உயிரோடு வந்து நாங்களும் புலிகள்தான் என்று இன்று கூறுவோர் தமிழ் மக்களை படைகளுக்கு காட்டிக்கொடுக்கும் துரோகிகள் என்றும்கூறி கிளிநொச்சி முன்னாள் எம்.பி இந்த முன்னாள் போராளிகளை அவமானப்படுத்திப் போட்டாருங்கோ.

அதுமட்டுமில்லையுங்கோ மாகாண சபை எலக்சனில எழிலனின் மனைவி அனந்தியை வேட்பாளராகப் போட்டு வாக்குகளை அபகரித்த கூட்டமைப்பு இம்முறை பார்ளிமெண்ட் எலக்ச னில அனந்தியை அநாதரவாக விட்டுப்போட்டு, ரவிராஜின்ர மனைவியை வேட்பாளராக்கி இருக்கினமாமுங்கோ.

தேர்தலுக்கு ஒரு பெண்ணை உள்வாங்கி அழச்சொல்லி வாக்குகளை அபகரித்துப் போட்டு, பிறகு அவாவுக்கு அரசியல் தெரிய வில்லை. அவாவுக்கு பேசத் தெரியவில்லை என்று குற்றம் சுமத்திறதை வாடிக்கையாகவே கூட்டமைப்பு கொண்டிருக்குதுங்கோ.


இப்படி தம்மைச் சுற்றி கூட்டமைப்பே உருவாக்கி இருக்கும் அரசியல் எதிரிகளின் எண்ணிக்கை இந்த முறை அதிகரித்திருக் குதுங்கோ. கஜேந்திரன் அணி ஒரு பக்கம், அனந்தி அணி ஒரு பக்கம், முன்னாள் போராளிகள் அணி ஒரு பக்கம், ஆனந்த சங்கரி அணி ஒரு பக்கம் என்று பல கோணத்தில கூட்டமைப்புக்கு தாக்குதல்கள் இருக்குதுங்கோவ்.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

---

வரலாறு படைத்த வல்லுனர்கள்

## மரண பயத்தை ஒழித்த மருத்துவர்



கிளாஸ்கோ சதுக்கத்தில், மரண விகிதத்தைக் குறைக்க, சிந்தனைவயப்பட்டு உலாவிய பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு லண்டனின் கிங்ஸ் கல்லூரியில் போதகராகவும் மருத்துவராகவும் போய்ச் சேர்ந்தார் லிஸ்டர். டாக்டர்களும் மாணவர்களும் லிஸ்டரை ஒரு வேடிக்கைப் பொருளாக மதித்தனர். சேர்ஜன்களிடையே அவர்போனால் எல்லோரும் உங்களிடம் கிருமி ஏதுமில்லையே என்று கிண்டல் செய்வார்கள். மாணவர்களுக்கு முதல் முதல் நடத்திய விரிவுரையின்போது பெரிய கலாட்டாவே உண்டாயிற்று. மனித சமுதாயத்தின் துன்பங்களைக் குறைப்பது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ளக் கூடியிருக்கும் இளைஞர்கள் 'ஓ' என்று கூச்சலிட்டார்கள். ஆடுகளை விரட்டுவதுபோல 'சூசூ' என்று கத்தினார்கள். கதவுகளை யும் ஜன்னல்களையும் மூடும்படி அடம்பிடித்தார்கள். "லிஸ்டரின் கிருமிகள் உள்ளே புகுந்துவிடும்" என்று கேலி செய்து கத்தினார்கள்.

மருத்துவ சஞ்சிகைகளும், அறிவாளிகளான பேராசிரியர்களுமே அவரைப் பொய்யர், அபாயகரமான சோதனைகளில் ஈடுபடுபவர் என்று வர்ணித்தனர். கிளாஸ்கோ குறும்புக்கார பையனும், லிஸ்டர் விவரித்த மற்றவர்களும் பிழைத்தது அதிர்ஸ்டமான விபத்துக்களேயன்றி வேறல்ல என்றனர். ஆஸ்பத்திரி வோர்ட்டுக்களில் நேர்ஸ்சுகளும் மற்ற பணியாளர்களும் அவருடைய யோசனைகளை ஏற்கமறுத்தனர்.

(தொடரும்)

---

# இந்தவாரம் உங்கள் பலன்

(16.07.2015 தொடக்கம் 22.07.2015 வரை)

### மேடம்

மனத்தைரியமுடன் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்துமுடிக்க வாய்ப்பு உள்ள காலமாகும். ரேஸ் லோட்டரி போன்ற சூதாட்ட விசயங்களுக்காக பணம் பொருட்களை ஏமாறாமல் இருக்கவும். வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்களது தாய்நாடு சென்று திரும்புவதற்கான வாய்ப்புகள் உள்ளது. காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். ரேஸ் லோட்டரி போன்ற சூதாட்ட விசயங்களில் பணம் வந்துசேரும் என எண்ணி ஏமாற்றம் அடையவேண்டாம். படித்த வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ள காலமா-கும். காதல் விசயங்களில் எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்துசேரும்.

### இடபம்

கணவன், மனைவிக்குள் காரணமற்ற மனக்கசப்புகள் வந்துபோகும். பிரிந்துபோன உறவுகளுடன் திரும்பவும் தொடர்புகள் ஏற்படக் கூடிய காலமாகும். சகோதர சகோதரர்களின் சுப காரியங்களுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பொருளாதாரத்தில் சற்று முன்னேற்றமான சூழ் நிலை காணப்படும். தாயின் உடல்நிலையில் வெகுநாட்களாக இருந்துவந்துள்ள உடல்நிலை பாதிப்புகள் குறைந்து காணப்படும். நண்பர்களால் வீண் பிரச்சினைகள்வர இருப்பதால் கவனமுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும். புதிய கடன்வாங்கினால் திரும்பி செலுத்த இயலாமற்போகுமாகையால் கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்துள்ள பாதிப்புகள் குறைந்து மனநிம்மதி அடைவீர்கள்.

### மிதுனம்

புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பதற்காக முயற்சிப்பீர்கள். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்காக புதிய மருத்துவர்களை நாடுவது நல்லது. காரணமற்ற மனச்சஞ்சலங்கள் வர இருப்பதால் புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பது உகந்ததாகும். பொருளா தாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள். வீடு, வாகனங்களைப் பழுதுபார்ப்பதன் மூலமாகப் பொருட்செலவுகள் உண்டாகலாம். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகலாம்.

### கடகம்

நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த வங்கிக்கடன்கள் கை வந்துசேரும் காலமாகும். புதிய வீடுகள் மற்றும் வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர்வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். ஒரு சிலருக்கு பணிசெய்யும் இடங்கள் மற்றும் வீடுகளை இடமாற்றம் செய்வீர்கள். பொதுநலத் தொண்டுகளில் மிகவும் பிரிய முடன் ஈடுபட்டு நற்பெயர் புகழடைய வாய்ப்பு உள்ளது. சகோதர சகோதரிகளின் தடைப்பட்ட திருமண காரியங்கள் மற்றவர்களின் உதவியால் நிறைவே-றும் காலமாகும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

### சிங்கம்

வடதிசையில் இருந்து நற்செய்திகள் வந்துசேரும். பெண்களால் தென்திசையில் இருந்து சில நல்ல செய்திகள் கிடைக்கும். விபரீதமான எண்ணங்களை கைவிட்டுக் காரியத்தில் கவன-மாய் இருப்பது நல்லது. விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும் காலமாகும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக்கொள்ள வேண்டாம். பழைய வாகனங்களை விற்றுப் புதிய வாகனங்களை வாங்குவதற்காக எதிர்பார்த்த வங்கிக் கடன்கள் கை வந்துசேரும். வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்து கடன் உதவித்தொகைகள் நண்பர்களின் உதவியால் கிடைக்கும்.

### கன்னி

மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். வெளிநாடு சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளில் வேற்று மதத்தவரால் ஆதாயமும் நற்செய்திகளும் வந்துசேரும். பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி சற்று முன்னேற்றமான சூழ்நிலைகள் காணப்படும். புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதற்கான முயற்சிகளில் சற்று பின்னடைவுகள் உண்டாகும். குடும்பச் சொத்துக்களில் வெகுகாலமாக இருந்து வந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலை யிடுதலால் திரும்பக் கிடைக்கும். முன்கோபம் தவிர்த்தல் நல்லது.

### துலாம்

புதிய ஆடைகள் மற்றும் அணி கலன்களை வாங்குவதற்கு வாய்ப்பு உள்ள காலமாகும். உடல்நிலையில் வாயு மற்றும் வாத சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். புதிய நண்பர்களின் சேர்க்கையை தவிர்த்தல் நல்லது. ஆடம்பரச் செலவுகளைச் செய்ய எண்ணி புதிய கடன்கள்வாங்குவீர்கள். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய கூட்டுத்தொழில் செய்வதற்கான முயற்சிகளில் நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம். தந்தை, மகன் உறவுகளில் இருந்துவந்துள்ள பிரச்சினைகள் குறைந்த ஒற்றுமை உண்டாகும். மஹான்களின் எதிர்பாராத தரிசனங்களால் மனநிம்மதி அடைவ தோடு புதிய பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்படும்.

### விருச்சிகம்

திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ் லோட்டரி மற்றும் சேர் மார்க்கெட் தொழிலில் ஈடுபடுவோர் களுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். வெகு காலமா-கப் பிரிந்துபோன கணவன், மனைவி இருவரும் ஒன்றுசேருவார்கள். நீண்டநாட்களாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் பொருட்கள் திரும்பக் கை வந்துசேரும். தன்னிடம் பணிசெய்யும் அடிமை ஆட்களால் பிரச்சினைகளும் பொருள் இழப்பும்வர இருப்பதால் கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்களைப் பெறுவதோடு அரசு உதவித்தொகைகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. பழைய வாகனங்களை விற்று புதிய வாகனம் வாங்குவதற்கான முயற்சிகளில் சற்று பின்னடைவுகள் ஏற்பட்டு விலகும்.

### தனுசு

உத்தியோகத் துறையினர்களுக்கு மேலதிகாரிகளிடம் மனக்கசப்புகள் ஏற்பட்டு பணி இடமாற்றம் ஏற்பட இருப்தால் முன்கோபத்தை தவிர்த்துப் பணியாற்றுதல் சிறந்ததாகும். வராத கடன்கொடுத்து இருந்த பணம் திரும்பக் கை வந்துசேரும். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல செய்திகள் கிடைக்கும். புதிய வீடு நிலம் மற்றும் வாகனங்களை வாங்குவதற்காகப் புதிய கடன்வாங்குவீர்கள். நண்பர்களின் வீட்டு சுப-காரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள்.

### மகரம்

மனைவிக்கு திடீரென நோய் வாய்ப் பட்டு மருத்துவச் செலவுகள் வந்துசேர இருப்பதால் எச்சரிக்கையுடன் இருக்கவும். உத்தியோகம் இல்லாதவர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு கிடைக்கும். தந்தையின் உடல்நிலையில் ஏற்பட்டு இருந்த பாதிப்புகள் சற்று குறைவதன் மூலம் மருத்துவச் செலவுகள் குறைய வாய்ப்பு உள்ளதுவீடு மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்வதற்கு வாய்ப்பு உள்ளது. ஒரு சிலருக்கு வீடு மற்றும் பணி இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்து வதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடவும். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய்நாடு சென்று திரும்பி வரக்கூடிய காலமாகும்.

### கும்பம்


தடைப்பட்டுப்போன சகோதர சகோதரிகளின் சுபகாரிய சம்பந்தமாக நல்ல தகவல்கள் வந்துசேரும். மாணவர்களுக்கு புதிய படிப்புகள் சம்பந்தமாக நல்ல தகவல்கள் கிடைக்கும். உடல்நிலையில் காய்ச்சல் மற்றும் உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். புதிய வாகனங்கள் வாங்குவதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. கண், காதுகளில் கவனம் தேவை. வங்கிகளில் இருந்து எதிர்பார்த்துவந்த பண உதவித்தொகைகள் கிடைக்கும். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகுந்த கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. திருமண சம்பந்தமான முயற்சிகளை இன்னும் சற்றுக் காலதாமதமாகவே நடத்துவது சிறந்ததாகும்.

### மீனம்

தாயின் உடல்நிலையில் சில பாதிப்புகள் வரக்கூடுமாகையால் கவன முடன் இருக்கவும். குலதெய்வ வழிபாடுகளை செய்துவருவது நல்லது. நீண்டகாலமாக திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமண காரியங்கள் நிறை வேறும். உற்றார் மற்றும் உறவினர்களால் எந்தவிதமான ஆதாயமும் இல்லை. விடுபட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. கோர்ட் சம்பந்தமான வழக்கு விசயங்களில் எதிர் பார்த்த சாதகமான நல்ல தீர்ப்புகள் கிடைக்கும். வேலையாட்களால் எதிர்பார்த்த ஆதாயம் இல்லை. தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்க்கவும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

# நாடாளுமன்றத் தேர்தல் - 2015



"தமிழ் மக்களின்
அரசியல் உரிமை,
நிலையான
அபிவிருத்தி,
அரசியல்
கைதிகளின்
விடுதலை,
காணாமல்
போனோர்
விவகாரம்,
சொந்த
நிலத்தில்
அர்த்தபூர்வமான
மீள்குடியேற்றம்
இவற்றை
யதார்த்த
வழியில்
வென்றெடுப்போம்!"

செயலாளர் நாயகம்







இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஜூலை 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்

உயர்தரத்துடனும்

குறைந்த செலவுடனும்

குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628

Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,

பஸ்ரியன் சந்தி,

யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 31 வியாழக்கிழமை (16.07.2015) பக்கங்கள் IV ஓசை – 288

## வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணி ஆரம்பம்

(கொழும்பு)


எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சக அதிபர் காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்கான அனுமதியை தேர்தல் ஆணையாளர் நேற்று அரச அச்சகத்திற்கு வழங்கியுள்ளார்.

இம்முறை பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் அதிகளவில் போட்டியிடுவதால், வாக்குச்சீட்டு நீளமானதாக இருக்கும் எனவும் காமினி பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

# புதிய சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு மக்கள் ஈ.பி.டி.பி.க்கு வாக்களிக்க வேண்டும்

## வேட்பாளர் இரா.செல்வவடிவேல் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சமூகத்தைப் புதிய உத்வேகத்துடன் மாற்றியமைப்பதற்கு கல்வியும் பொருளாதாரமும் முக்கிய காரணிகளாக அமையப் பெற்றுள்ள நிலையில், அவற்றை உரிய நேரத்தில் மக்களுக்குக் கிடைக்கப் பெறுவதற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமென வேட்பாளர் இரா. செல்வவடிவேல் சுட்டிக்காட்டியுள்ளார்.

வட்டுக்கோட்டை, சங்கரத்தையிலுள்ள கலைவாணி சனசமூக நிலையத்தின் முன்றலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியம் பேசி, மக்களின் வாக்குகளை அபகரிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு இந்தியாவில் வீடுகள் இருக்கின்றன என்பதுடன், அவர்களது பிள்ளைகளும்

(IV) ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரியின் அனுமதியின்றி

# சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுவை கூட்டுவதற்கு நீதிமன்றம் தடை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தை, கட்சியின் தலைவர் மைதிரிபால சிறிசேனவின் அனுமதியின்றி கூட்டுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று மாலை தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

நேற்றிரவு 8 மணியளவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டவுள்ளதாக, கட்சியின் பொதுச்செயலர் அனுர பிரியதர்சன யாப்பா அறிவித்திருந்தார்.

இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தடைவிதித்திருந்தார்.

அதையும் மீறி கூட்டம் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பிரசன்ன சோலங்காராச்சி, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இந்தக் கூட்டத்தை நடத்த தடை கோரினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவ்ரின் அனுமதியின்றி செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டக்கூடாது என்று சட்டத்தரணிகள் மூலம் விடுத்த வேண்டுகோளை ஏற்று, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது. கட்சித் தலைவரின் அனுமதியின்றி, மத்திய செயற்குழுக் கூட்டத்தை எதிர்வரும் ஆகஸ்ட் 29 ஆம் திகதி வரை கூட்டக்கூடாது என்று சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியைக் கைப்பற்றும் மகிந்த ராஜபக்ஷவின் திட்டத்துக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

## மாணவன் பிணையில் விடுதலை; 30 பேருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதான தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கைதுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர் ஒருவரை பிணையில் விடுவித்த யாழ். நீதவான் நீதிமன்றம், ஏனைய 30 சந்தேகநபர்களின் விளக்கமறியலை நீடித்துள்ளது.

யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைதான 31 சந்தேகநபர்கள், நேற்று வழக்கு விசாரணைக்காக யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

'இதன்போது, பாடசாலை

(IV) ஆம் பக்கம் பார்க்க

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் குழுத் தலைவராக மகிந்த


(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் குழுத் தலைவராக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளதாக, கூட்டணியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான தினேஸ் குணவர்த்தன அறிவித்துள்ளார்.

கொழும்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று மதியம் நடந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலேயே, மகிந்த ராஜபக்ஷவை தேர்தல் குழுத் தலைவராக

(IV) ஆம் பக்கம் பார்க்க





## ரணில் பிரதமரானால்

# காலனித்துவ நாடாக இலங்கை மாறும்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் தற்போது வடக்கில் பாதுகாப்பற்ற நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அவரை மீண்டும் பிரதமராக்கினால் 2009 ஆம் ஆண்டு வென்றெடுக்கப்பட்ட சமாதானம் இல்லாதொழிக்கப்படும். மேற்குலக நாடுகளின் காலனித்துவ நாடாக இலங்கை மாறும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் விமல் வீரவன்ச எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்

(IV) ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் கண்காணிப்பில் ஐரோப்பிய யூனியன்

(கொழும்பு)

இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளையடுத்து நாடாளுமன்றத் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஐரோப்பிய யூனியன் ஈடுபடவுள்ளது.

நாடாளுமன்றத்திற்கான தேர்தல் வரும் ஆகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதனையடுத்து தீவிர பிரசாரங்கள் நடைபெற்று வருகின்றன.

இதனிடையே நாடாளுமன்றத் தேர்தல் கண்காணிப்புப் பணியை, ஐரோப்பிய யூனியன் மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை அரசு வலியுறுத்தியது.

(IV) ஆம் பக்கம் பார்க்க

# தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முன்வருவதில்லை

### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்



(முகமாலை)


மக்களின் மேம்பாட்டுக்காக உழைப்பவர்களுக்கு ஆதரவளிக்க மக்கள் தீர்மானித்துள்ளார்கள் எமது மக்களின் இந்தத் தீர்மானம் நிச்சயமாக மக்களுக்கு சிறப்பானதொரு எதிர்காலத்தை பெற்றுத்தரும் என முன்னாள் நாடாளுமன்ற உறப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முகமாலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் மக்களுடன் கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்.

மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் தேர்தலின் பின் மக்கள் மத்தியிலிருந்து அன்நியாயப்பட்டு வாழ்கின்ற நிலைமையே காணப்படுகின்றது ஏனெனில் தமிழ் மக்களின் அரசியல் அவ்வாறு வளர்த்தெடுக்கப்பட்டிருக்கின்றது ஏனைய சமூகங்களைப் பொறுத்தவரையில் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் தவறினால் அடுத்த சந்தர்ப்பத்தை மக்கள் அவர்களுக்கு வழங்க மாட்டார்கள். ஆனால் தமிழ்மக்களின் வரலாற்றில் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் மக்களுக்காக சேவையாற்றாத போதும் மன்னராட்சி போல் தொடர்ந்தும் அவர்களே தெரிவாகின்ற நிலைமை காணப்படுகின்றது. தெரிவாகின்ற பிரதிநிதிகளும் மக்களுக்காக சேவையாற்றுவோம் என்ற எண்ணத்தை வரவழைத்துக் கொள்வதில்லை. இன்று எமது மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள் காணாமல் போனவர்களைத்தேடி அவர்களின் உறவினர்கள் கண்ணீருடன் அலைந்து கொண்டிருக்கின்றார்கள் நீண்டகாலமாக சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் விடுதலை தொடர்பாக எந்த தீர்வும் எட்டப்படவில்லை படையினரின் வசமுள்ள காணிகளை மீப்பது தொடரபிலும் எந்த திட்டமும் இல்லை இவை அனைத்திற்கும் மேலாக தமிழ் மக்களுக்கான நிலையான அரசியல் தீர்வு தொடர்பிலும் எந்த செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை ஆனாலும் இவ்வாறான எந்த ஒரு விடையத்திற்கும் தீர்வு காண்பதற்காக தமிழ்த்தேசியம் என கோசமிடுபவர்கள் அணு அளவேனும் முயற்சிக்கவில்லை. அவற்றுக்காக வீதியில் இறங்கிப் போராடவோ சிறைக்குச் செல்லவோ ஜனநாயகவழியில் போராடவோ அவர்கள் தயாராக இல்லை என்ன நடந்தாலும் மக்கள் தமக்கே வாக்களிப்பார்கள் என்ற சிந்தனையின் காரணமாகவே அவர்களின் மனங்களில் மாற்றங்கள் ஏற்படுவதில்லை. அதுமட்டுமன்றி மக்களுக்கு பொறுப்புக் கூறுகின்ற தன்மையும் அவர்களிடம் காணப்படுவதில்லை மாறாக மக்களின் நலன்களுக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து விடையங்களையும் விமர்சித்துக்கொண்டிருப்பதையே தமது வேலையாகக் கொண்டுளளனர். எனினும் இவ்வாறான விடையங்களைத் தட்டிக்கேட்கின்ற மனநிலை எம்மக்கள் மத்தியில் காணப்படாமையும் துரதிஸ்ட வசமானது.ஆனாலும் யுத்தத்தில் சாவடைந்த மக்களையும் போராளிகளின் தியாகங்களையும் அரசியலுக்காகப் பயனபடுத்தி வாக்குகளை வென்று வந்த அவர்களின் கபட நோக்கு இன்று வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மக்களுக்காக எதையுமே செய்ய முடியாதவர்கள் என்ற நிலைமை மக்களால் உணரப்பட்டுள்ளது. எனவே மக்களின் மேம்பாட்டுக்காக உழைப்பவர்களுக்கு ஆதரவளிக்க மக்கள் தீர்மானித்துள்ளார்கள் எமது மக்களின் இந்தத் தீர்மானம் நிச்சயமாக மக்களுக்கு சிறப்பானதொரு எதிர்காலத்தை பெற்றுத்தரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முகமாலையில் நடை பெற்ற இக்கலந்துரையாடலில் முகமாலை கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர், மற்றும் பிரதிநிதிகள் கிராமத்தின் மூத்த பிரஜைகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## றமழான் சிந்தனை



**எவர் றமழானில் நம்பிக்கையுடன் நன்மையை எதிர்பார்த்து தொழுது வணங்குகிறாரோ அவர் அதற்கு முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்.**

**நூல் - புகாரி**

**ஸஹர் முடிவு அதிகாலை 4.28**
**நோன்பு திறக்கும் நேரம் மாலை 6.38**

(105)

## தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

தொழில் முயற்சியொன்றை ஆரம்பிக்கவுள்ள அல்லது நடாத்திக் கொண்டிருக்கும் தொழில் முயற்சியை விருத்தி செய்வதற்கு ஆர்வமுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு, அவர்களது தொழிலின் முயற்சியான்மை திறனை விருத்தி செய்வதற்கும் மற்றும் அவர்களது தொழில் முயற்சியை சிறந்த முறையில் கொண்டு செல்வதற்கான தொழில் திட்டம் தயாரிப்பதற்குமான பயிற்சி நெறியொன்றை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு யாழ். மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஒழுங்கு செய்துள்ளது.

எனவே, குறித்த பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் சுண்டுக்குளியில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கட்டடத்திலுள்ள இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்ட அலுவலகத்தில் இம்மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதோடு மேலதிக விபரங்களிற்கு 0212222421 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.



யாழ். முஸ்லிம் பகுதியில் நடைபெற்ற மக்களுடனான சந்திப்பும் இப்தார் நிகழ்வும் வடமாகாண சபை உறுப்பினர் ஐ.அஸ்மின் தலைமையில் இடம்பெற்றுபோது....

## புனரமைக்கப்படாத வீதியால் பொதுமக்கள் பெரும் அசௌகரியம்

(பொன்னாலை)

வலி. மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட இறாத்தலடி வீதி, (1.07 கிலோ மீற்றர்) கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மீள் புனரமைப்பு இன்றி அழிவடைந்துள்ளது.

மேற்படி இறாத்தலடி வீதியானது பொன்னாலைப் பருத்தித்துறை வீதியில் ஆரம்பித்து குடாக்கனை வீதியில் முடிவடைகின்றது.

இறாத்தலடி வீதியூடாக தினமும் 3 ஆயிரம் முதல் 3500 இக்கும் மேற்பட்ட விவசாயிகள், மீனவர்கள், அரச அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தும் பிரதான வீதியாக உள்ளது.

எனவே, இவ்வீதியை முழுமையாக மீள்புனரமைத்து வழங்க நிதி ஒதுக்கீட்டை பெற்றுத் தருமாறு வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா. ஐங்கரன் வடக்கு விவசாய அமைச்சர் பொன். ஐங்கரநேசனை கடிதம் மூலம் கோரியுள்ளார்.

இறாத்தலடி வீதிக்கு நிதி ஒதுக்கீடு எனும் தலைப்பில் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வலி. மேற்கில் இறாத்தலடி வீதியானது ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளை ஊடறுத்துச் செல்லும் வீதியாக கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மீள் புனரமைப்பு இன்றி உள்ளது.

மேலும் 3 ஆலயங்கள், தீர்த்தக் கரைகள், பிதிர்க்கடன் நிறைவேற்றும் பிரதான வீதியாகவும் உள்ளது.

மேலும் இரண்டு பிரதான மயானங்களை இணைக்கும் இணைப்பு வீதியாகவும் உள்ள இறாத்தலடி வீதியை மீள் புனரமைத்து தருமாறு கோரியே விரிவான கடிதம் ஒன்றை தவிசாளர் திருமதி. நா. ஐங்கரன் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொன். ஐங்கரநேசனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதேவேளை, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் மத்தி உட்பட ஐந்து பொது அமைப்புக்கள் மேற்படி வீதி பாதிப்பு குறித்து விரிவான கடிதங்களை தவிசாளருக்கு (வலி. மேற்கு) சமர்ப்பித்துள்ளன. (92)

## வலி. மேற்கு பிரதேச சபை மக்கள் சேவையில் முதன்மை

### வேள்ட் விசன் மதிப்பீடு

வலி. மேற்கு பிரதேச சபை பொதுமக்களுக்கான தரமான சேவையை வினைத்திறனுடன் செயலாற்றுகின்றது. வடக்கில் முன்னுதாரண சபையாக வலி. மேற்கு பிரதேச சபையை எமது வேள்ட் விசன் நிறுவனம் மதிப்பீடு செய்துள்ளது.

இவ்வாறு வேள்ட் விசன் நிறுவன ரிவோஸ் IIIஇன் முகாமையாளர் எவ். அலெக்ஸ் ரொச் தெரிவித்துள்ளார்.

வலி. மேற்கு பிரதேச சபையும் - வேள்ட் விசன் நிறுவனமும் இணைந்த வகையில் கடந்த காலத்தில் முன்னெடுத்த அபிவிருத்திச் செயன்முறையை மதிப்பீடு செய்வதற்கான கலந்துரையாடல் அண்மையில் சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா. ஐங்கரன் தலைமையில் கலந்துரையாடல் இடம் பெற்றபோது கலந்து கொண்ட முகாமையாளர் எவ். அலெக்ஸ் ரொச் மேலும் தெரிவிக்கையில், வலி. மேற்கு பிரதேச சபையானது பொதுமக்களுக்கான குடிதண்ணீர் மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை எமது வேள்ட் விசன் நிறுவனத்துடன் இணைந்து பயனுள்ள வகையில் செயற்பட்டு இருந்தது. எதிர்காலத்தில் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். இதற்காக பிரதேச சபை எம் [illegible] ஒத்துழைக்கும் என்றார்.

[illegible]ல் தலைமை தாங்கிய சபைத் தவிசாளர் திருமதி. நா. ஐங்கரன் உரையாற்றுகையில், வலி. மேற்கு பிரதேச சபையின் அபிவிருத்திக்கும் - பொது பயன்பாட்டு சேவைகளுக்கும் வேள்ட் விசன் நிறுவுனம் எமக்கு உதவுவது மிகப் பெறுமதி வாய்ந்த ஒன்றாகும். அடுத்த நான்கு ஆண்டு வரை செயற்படவுள்ள வேள்ட் விசன் நிறுவன செயற்பாட்டுக்கு பூரணபங்களிப்போம்.

மேலும் எமது சபைக்குட்பட்ட தேவைகளை நாம் கருத்திட்டங்களாகவும் முன்மொழிவு பத்திரங்களாகவும் முன்வைத்து வருகின்றோம் என்றார். (92)

## புனித உத்தரிய மாதா ஆலயத் திருவிழா

புனித உத்தரிய மாதா தேவாலய வருடாந்த மஹோற்சவ இறுதி நாள் திருவிழா இன்று இடம்பெறவுள்ளது. காலை 6.30 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி பங்குத் தந்தை தலைமையில் மற்றும் அருட் சகோதரர்களுடன் கூட்டாக ஒப்புக் கொடுக்கப்படும். மாலை 5.00 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும் அன்னையின் திருச்சொரூபம் தாங்கிய தேர்ப்பவனி குருநகரில் உள்ள வீதிகளில் நடைபெறவுள்ளது. மீண்டும் ஆலயத்தை வந்தடையும் மாதா, முன்றலில் தங்கியுள்ள விசுவாசிகளுக்கு ஆசீர்வழங்கலுடன் திருநாள் கொண்டாட்டம் நிறைவடையவுள்ளது. (68)






மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்திற்கு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை ஒருதொகை பணத்தினை வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.காந்தநேசனிடம் கையளிப்பதையும், வைத்திய அதிகாரியுடன் நலன்புரிச் சங்கத் தலைவர் மகேந்திரன், செயலாளர் மனோகரன் மற்றும் பிரதிநிதிகள் நிற்பதையும் காணலாம். (68)

# தேர்தல் சட்டங்களை மீறுவோர் பாரபட்சமின்றி கைதுசெய்யப்படுவர்

## யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் தேர்தல் சட்டங்களை மீறினால் எந்த தயவு பேதமின்றி கைது செய்யப்படுவர். என யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பெட்ரிக் யூ.கே. வூட்லர் தெரிவித்துள்ளார்.

பொதுச் சொத்துக்களினை தேர்தல் காலங்களில் துஷ்பிரயோகம் செய்வதும் அல்லது பிரசாரத்திற்கு பயன்படுத்துவதும் தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் யாழ்ப்பாணத்தில் சிறந்த முறையில் நடைபெறுவதற்கு யாழ்ப்பாண பொலிஸாராகிய நாம் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். போக்குவரத்து ஒழுங்குகள், பாதுகாப்பு நடவடிக்கைகள், வன்முறைச் சம்பவங்களினை இனங்கண்டு நடவடிக்கை எடுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.

இதற்கு யாழிலுள்ள அனைத்து மக்களும் யாழ். பொலிஸாருக்கு அனைத்து விதமான ஒத்துழைப்பையும் வழங்க முன்வர வேண்டும்.

குறிப்பாக சட்டத்தை மீறும் நபர்களை பொலிஸாருக்கு இனங்காட்டி அவர்களை கைது செய்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். மற்றும் குற்றங்கள் நடைபெறும் இடங்களை பொலிஸாருக்கு உடனடியாக அறியத் தரவேண்டும்.

தேர்தலின் போதும் அதற்கு முன்னரும் பின்னரும் சட்டத்தை மீறுகின்ற அனைத்து விதமான நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். சட்டத்தை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் எந்த தயவு பேதமும் இன்றி கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படுவர். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும். பொலிஸாரின் அறிவுறுத்தல்களை மீறினால் அவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டத்தை மீறுபவர்கள் ஒரு சிலராக இருக்கின்ற போதிலும் அதனால் பாதிக்கப்படுபவர்கள் பலராக இருக்கின்றனர்.

இந்த நிலையில் சட்டத்தை மீறுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, தேர்தல் காலங்களில் வெளியே நடமாட முடியாதவாறு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தேர்தல் சட்ட திட்டங்கள் தொடர்பில் அனைத்து பொது மக்களும் அறிந்திருப்பது நல்லதாகும். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழில் பொது மக்கள் சுதந்திரமான, பாதுகாப்பான முறையில் வாக்களிப்பதற்கும் அனைத்து விதமான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் நாம் ஏற்கனவே முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.

தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்துள்ள நிலையில் வேட்பு மனுத்தாக்கலின் போது எவ்விதமான அசம்பாவிதங்களும் இடம்பெறாமல் யாழ். பொலிஸாராகிய நாம் முழுமையான பாதுகாப்பினை வழங்கியிருந்தோம்.

அனுமதியின்றிய கூட்டங்கள், ஊர்வலங்கள் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இது தவிர அரச பேருந்துகள், புகையிரத வண்டிகள், அரச நிறுவனங்களின் சுவர்களில் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுவோரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார்கள் என யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (25)

# மானிப்பாய் வைத்தியசாலைக்கு உதவி வழங்கக் கோரிக்கை

(மானிப்பாய்)

65 வருடங்களுக்கு மேலாக தாதியர் வீடுகளில் இயங்கி வந்த மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை, நலன்புரிச் சங்கத்தினால் மக்களிடம் சேகரித்த பணத்தினால் கொள்வனவு செய்த 17 பரப்புக் காணியில் 2008 ஆம் ஆண்டு வெளிநோயாளர் பிரிவும், 2010 ஆம் ஆண்டு மகப்பேற்று விடுதியும் இணைந்த சேவைகள் இடம்பெறுவதாக துண்டுப் பிரசுரமொன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இப்பொழுது வைத்தியசாலைக்கு கிடைக்கப்பெற்றுள்ள வசதிகளோடு கணனி மற்றும் பிரிண்டர், பல் வைத்திய பிரிவுக்கான குளிரூட்டி, மழை நீர் சேகரிப்பு தாங்கி, வைத்திய பரிசோதனைகளுக்கான உபகரணங்கள் மற்றும் பற்றுச்சீட்டு பதிவு அலுவலகம், வைத்திய ஆய்வுகூடம், கிளினிக் அறைகள் (கண், தோல்) அலுமாரிகள், இருக்கைகள் போன்றன தேவைகளாக இருந்து வருகின்றன.

மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதன் மூலமாகவே வைத்தியசாலையை நாடி வருகின்ற நோயாளர்களின் நிறைவான சேவையை வழங்க முடியுமென்பதால் பரோபகாரிகள் தேவைகளை பணமாகவோ குறிப்பிட்ட பொருட்களாகவோ வழங்கி உதவுமாறு வைத்தியசாலை நலன்புரிச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (68)

# கலை, இலக்கிய போட்டிகளின் முடிவுகள்

நல்லூர் பிரதேச செயலகம் நடாத்திய கலை, இலக்கியப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அதன் விபரம் வருமாறு,

### பாலர் பிரிவு

**கவிதை பாடல்**

1.த.கிருசியா - இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, 2.சி.ஸ்ருதி - கைலாசநாத வேதசிவாகம அறநெறிப் பாடசாலை, 3. கு.சாருஜன் - சென். பெனடிக்ற் வித்தியாலயம்.

**கையெழுத்துப் போட்டி**

1.சு.பிரஷா - சென். பெனடிக்ற் வித்தியாலயம், 2.தே.பவிசன் - ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம், 3.சா.இந்துஷன் - வண். ஸ்ரீ வைத்திலிங்க வித்தியாலயம்.

### கனிஷ்ட பிரிவு

**கவிதை ஆக்கம்**

1.தெ.திசங்கன் - இளையதம்பி இந்து வித்தியாலயம், 2.த.உஷாந்தினி - நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை, 3.கா.சுபாரகா - கோண்டாவில் இந்துக் கல்லூரி, சு.பவித்திரன் - இளையதம்பி இந்து வித்தியாலயம்.

**கட்டுரைப் போட்டி**

1.இ.அரன் - இந்துக் கல்லூரி, 2.ஜெ.சங்கீதா - இந்து மகளிர் கல்லூரி, 3.பி.தர்மிகா - அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்.

**கவிதை பாடல்**

1.ச.தயாளினி - இந்து மகளிர் கல்லூரி, 2.ப.கோகுலன் - செங்குந்த இந்துக் கல்லூரி, 3.கு.தசாயினி - இளையதம்பி இந்து வித்தியாலயம்.

### சிரேஷ்ட பிரிவு

**கவிதை ஆக்கம்**

1.ஜெ.சாம்பவி - இந்து மகளிர் கல்லூரி, 2.சி.நிருபா - இந்து மகளிர் கல்லூரி, 3.செ.நிஷாந்தி - இந்து மகளிர் கல்லூரி.

**கட்டுரை**

1.கு.ஜனனி - கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், 2.வி.கிசோபா - கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம், 3. ச.சாளினி - இந்து மகளிர் கல்லூரி, ம.லக்ஷனா - கோண்டாவில் இந்துக் கல்லூரி.

**கவிதை பாடல்**

1.பு.கஜப்பிரியா - இந்து மகளிர் கல்லூரி, 2.ச.விதுஷா - சைவ வித்தியா விருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை, 3. வ. குருப்பிரியா - நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை.

**பாடல் நயத்தல்**

1.த.கௌசல்யா - கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை, 2.ர.ராகவன் - கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை.

### ஆங்கில மொழிமூலம்

**பாலர் பிரிவு**

**கையெழுத்துப் போட்டி**

1.அ.அபிஷா - சென். பெனடிக்ற் வித்தியாலயம், 2.ம.விஷாருஜா - சென். பெனடிக்ற் வித்தியாலயம், 3.பி.யனுசா - சென். பெனடிக்ற் வித்தியாலயம்.

### திறந்த பிரிவு

**கவிதை**

1.மு.ஆரணி - 8/3, புகையிரத வீதி, நீராவியடி.

**பாடலாக்கம்**

**தமிழ் மொழிமூலம்**

1.சி.மலர் - செம்மணி வீதி, நல்லூர், 2.உ.கமலோஜினி - 34/1, கலைமகள் வீதி, அரியாலை, 3.பா.பாலமுரளி - நந்தாவில் வீதி, கொக்குவில்.

**நாட்டார் கலை கற்றல்**

1.சி.சிவதாசன் - 45, நொத்தாரிஸ் வீதி, அரியாலை, 2.சு.சிவராசா - நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, 3.ர.கலாராணி - கலட்டி வீதி, கோண்டாவில் மேற்கு.

**இலக்கிய விபரணம்**

1.மு.ஆரணி - 8/3, புகையிரத வீதி, நீராவியடி.

**சிறுகதை**

1.மு.ஆரணி - 8/3, புகையிரத வீதி, நீராவியடி, 2.சு.சிவராசா - நந்தாவில் ஒழுங்கை, 3.செ.செல்வராஜா - 149/31, பொற்பதி வீதி, கொக்குவில்.

**கவிதை ஆக்கம்**

1.மு.ஆரணி - 8/3, புகையிரத வீதி, நீராவியடி, 2.ந.திருமகள்- வண்ணார்பண்ணை, 3.ர.கலாராணி - கலட்டி வீதி, கோண்டாவில் மேற்கு, இ.பரீதா - 18, கலைவாணி மில் ஒழுங்கை, கொக்குவில்.

**சிறுவர் கதை**

1.சி.சிவதாசன் - 45, நொத்தாரிஸ் வீதி, அரியாலை, 2.ர.குணேஸ்வரி - 15/5, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி, 3.ர.கலாராணி - கலட்டி வீதி, கோண்டாவில் மேற்கு, இ.ஸ்ரீகஜலஷ்மி - 2 ஆம் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, கொக்குவில். (68)

# விளையாட்டு விழா

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி ஜனசக்தி சனசமூக நிலையத்தினால் நடாத்தப்படும் விளையாட்டு விழா நாளை பி.ப. 1.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

நிலையத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் அமரர் வை. கந்தசாமி ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட பொதுப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான கௌரவிப்பு இடம்பெறவுள்ளதோடு, இந்த ஞாபகார்த்த விளையாட்டு நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளதுடன், வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிப்பதே பிரதான நோக்கம்

## அநுர பிரிய தர்சன யாப்பா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினை தோற்கடிப்பதே தமது பிரதான நோக்கமென, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர்,

தேர்தல் பிரசார நடவடிக்கையில் அரச சொத்துக்களின் பயன்பாடு முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. மாத்தறையில் நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சி. யின் தேர்தல் பணிகளுக்காக, இளைஞர் சேவைகள் மன்றத்தின் 52 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அது போலவே ஏனைய மாவட்டங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரதமர் ரணில் தாம் பயன்படுத்தும் குண்டு துளைக்காத வாகனத்திற்கு பணம் செலுத்துவதாக கூறினார். இவ்வாறு பொய் கூறிவிட்டு, ஏனைய நிறுவனங்களின் வாகனங்களைப் பயன்படுத்துகின்றார்கள்.

அத்துடன், வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு மாவட்ட செயலகத்திலிருந்து வெளி யேறும் போது டளஸ் அழகபெருமவுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அதுமட்டுமன்றி அமைச்சர்கள் பலரின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது.

எமது அரசாங்கத்தில் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது. தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலர் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பை பயன்படுத்தி வருகின்றனர். எமது காலத்தில் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது பிழையென்றால், அதனை நிறுத்துவதற்குத்தான் இவர்கள் வந்தார்களென்றால் இன்று நடைபெறுவது என்ன?

அதுமட்டுமன்றி நகரெங்கும் பிரமாண்டமான பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றிற்கு பணம் கொடுத்தது யார்?

பிரசார நடவடிக்கையின் போது, சட்டத்தை பாதுகாப்பதில் இன்று பல குறைபாடுகள் எழுந்துள்ளன. இதனைப் பாதுகாக்குமாறு நாம் பொலிஸ்மா அதிபரை வலியுறுத்துகிறோம்.

இன்று எமது கட்சியுடன் பலர் கைகோர்த்துள்ளனர். ஆகவே, அனைவரும்ஒன் றிணைந்து மிகவும் பலம்பொருந்திய ஆட்சியை அமைப்போம் எனக் கூறினார்.

---

**மாணவன்...**

மாணவர் ஒருவரை 5 இலட்சம் ரூபா பெறுமதியான 3 ஆட்பிணையில் விடுவித்ததோடு, குறித்த சந்தேக நபரை மாதத்தின் இறுதி ஞாயிறுக்கிழமையில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என்ற உத்தரவையும் யாழ். நீதவான் பெ.சிவகுமார் பிறப்பித்தார். மேலும், ஏனைய 30 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அவர் உத்தரவிட்டார். (25)

---

**தேர்தல்...**

இந்தநிலையில் இலங்கை அரசின் வேண்டுகோளை ஐரோப்பிய யூனியன் ஏற்றுக் கொண்டுள்ளது.

இதனையடுத்து 46 பேர் கொண்ட் குழு இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் கண்காணிப்பு பணியில் ஈடுபடும் என்று ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளது.

இக்கண்காணிப்புக் குழுவில் கிறிஸ்டினா பிரேதா தலைமை தேர்தல். கண்காணிப்பாளராக செயல்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**ஐக்கிய...**

நியமிக்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது,

இதையடுத்து, அவர் அந்தப் பதவியை ஏற்றுக் கொண்டுள்ளதாக தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார். மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யார் உண்மையான தலைவர் என்பதை மக்களே தீர்மானிப்பார்கள் என்றும் தினேஸ் குணவர்த்தன மேலும் குறிப்பிட்டார்.

முன்னதாக, மகிந்த ராஜபக்சவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்கவும், தேர்தல் பரப்புரைக் குழுவின் தரைவராக அறிவிக்கவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன மறுப்புத் தெரிவித்திருந்தார்.

எனினும், தற்போது, அவரது ஒப்புதல் பெறப்படாமலேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின், தேர்தல் குழு தலைவராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**புதிய சமுதாயம்...**

வெளிநாடுகளில் சுகபோக வாழ்க்கையை அனுபவிப்பதுடன், பெரும் பொருட்செலவில் மேற்படிப்புகளையும் தொடர்கின்றனர்.

ஆனால், இங்கு தேசியம் பேசி மக்களை உசுப்பேற்றியும், உணர்ச்சியூட்டியும் ஏமாற்றும் வித்தையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் இவர்கள், தேர்தல் காலங்களில் வெற்றிகளையும் தமதாக்கிக் கொள்கின்றனர்.

இவ்வாறு வெற்றிகளைத் தமதாக்கிக் கொள்ளும் இவர்கள் மக்கள் நலன்சார்ந்ததாக உருப்படியான செயற்திட்டங்களை முன்னெடுப்பதில்லை. குறிப்பாக, பின்தங்கிய கிராமங்களில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட நிலையில் வாழும் மக்களிடம் வாக்குக் கேட்டு தேர்தல் காலங்களில் மட்டும் வரும் இவர்கள், தேர்தல்களில் வெற்றி பெற்றதின் பின்னர், அப்பகுதிகளுக்கு செல்வதில்லை என்று சுட்டிக்காட்டிய செல்வவடிவேல்,

கூட்டமைப்பினருக்கு இந்த மக்களின் பிரச்சினை குறித்தோ, அபிவிருத்திகள் தொடர்பிலோ தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை. சமூகத்தைப் புதிய உத்வேகத்துடன் மாற்றியமைப்பதற்கு கல்வியும் பொருளாதாரமும் முக்கிய காரணிகளாக அமையப் பெற்றுள்ள நிலையில், அவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடியதான வாய்ப்பு அமையப்பெற வேண்டும் என்பது முக்கியமானது.

அதனைப் பெற்றுத் தரக்கூடியவர்களாகவும், சமூகத்தை நல்வழிப்படுத்தி, மேம்படுத்தக் கூடியவர்களாகவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரே திகழ்ந்து வருகின்றனர்.

எனவே, வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் ஒருங்கிணைந்த ஆதரவையும், வாக்குப் பலத்தையும் எமக்குத் தரும் பட்சத்தில், புதியதொரு மாற்றத்தையும் ஏற்றத்தையும் நிச்சயமாக டக்ளஸ் தேவானந்தா தலைமையிலும், வழிகாட்டலிலும் ஏற்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது,

கிடைக்கின்ற வாய்ப்புக்களை மக்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதுடன், அதனூடாக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வினைக் காண முடியும். எமது மக்களின் பிரச்சினைகளை சர்வதேச நாடுகள் ஒருபோதும் தீர்த்து வைக்கப் போவதில்லை. மாறாக நாங்களே பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இதன்போது, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர்களான பசுபதி சீவரத்தினம் (கி.பி), சிவகுரு பாலகிருஸ்ணன் ஆகியோரும் உடனிருந்தனர். இதேபோன்றதொரு மக்கள் சந்திப்பு மானிப்பாயில் அமைந்துள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலகத்திலும் நடைபெற்றது. குறித்த இரண்டு சந்திப்புகளிலும் மக்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு செயலாளர் நாயகம் விளக்கமளித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

---

**காலனித்துவ...**

பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாம் நல்லாட்சி அரசு என்று கூறுகின்றனர். ஆனால், வெளிவிவகார அமைச்சின் இலக்கத் தகடுகள் மாற்றப்பட்ட வாகனங்கள் மாத்தறையில் தேர்தல் பிரசாரத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. பிரசாரம் நடத்துவதற்காக சிறிகொத்தவில் 5 ஆயிரம் பேருக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அதுமட்டுமன்றி, அலரிமாளிகைக்கு அருகிலுள்ள கட்டடத்தில் 400 பேர் மடிக்கணினியுடன் தயாராக இருக்கின்றனர். சமூக வலைத்தளங் களினூடாக இவர்கள் பிரசாரம் செய்கின்றனர் என்றார்

---

## ஆடிப்பிறப்பு பண்பாட்டு விழா

(வேலணை)

வேலணை பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடாத்தும் ஆடிப்பிறப்பு பண்பாட்டு விழாவும், குறும்பட வெளியீட்டு விழா நாளை (வெள்ளிக்கிழமை) வேலணைப் பிரதேச செயலக பிரதான மண்டபத்தில் காலை 10.30 மணிக்கு பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செந்தில்நந்தனன் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் வேலலைணயூர் சிறிதரன் இயக்கிய ஒருவழிப்பாதை குறும்பட வெளியீட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (21)

## கஞ்சாவுடன் திருடன் மடக்கிப் பிடிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு சந்திக்கருகில் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் காரியலாயத்திற்கு பின்புறமாக வீட்டின் கூரையை பரித்து உள்ளே இறங்கி திருட முற்பட்ட போது நேற்று முன்தினம் 11 மணிக்கு பொதுமக்களால் திருடன் பிடிக்கப்பட்டுள்ளான்..


வீட்டின் உரிமையாளராகிய பெண் தனது மகளின் வீட்டுக்கு சென்று திரும்பி வந்து கதவினைத் திறந்து உள்ளே சென்ற போது சூரிய ஒளி வீட்டிற்குள் விழுவதனை அவதானித்த அவர் கூரையை அவதானித்த போது ஒடு பிரிக்கப்பட்டிருந்தன.

பின்னர் வீட்டின் உள்ளே உரிமையாளர் பெண் செல்லமுற்பட்ட போது திருடன் தப்பிச் சென்று அருகில் உள்ள பற்றைக்குள் பதுங்கிய நிலையில் அயலவர்களால் பிடிக்கபட்டுள்ளான். பிடிக்கப்பட்ட திருடனிடம் 50 கிராம அளவில் கஞ்சா காணப்பட்டுள்ளது.

குறித்த கஞ்சாவை பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஒருவரிடம் பெற்றதாகவும் அதனை முறிகண்டி அக்கராயன் பாதையில் உள்ள நான்காம் கட்டை இராணுவ முகாமில் உள்ள படையினர் ஒரு வருக்க வழங்க வைத்திருந்ததாக பிடிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார். இதற்கு முன்னர் மூன்று தடவைகள் இவ்வாறு படை சிப்பாய் ஒருவருக்கு தான் கஞ்சா வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளர்.

குறித்த 19 வயது மதிக்கதக்க கிளிநொச்சி பொன்னகார் கிராமத்தை சேர்ந்த இளைஞர் தற்போது கிளிநொச்சி பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளார். (29)

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி தங்கம்மா

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தங்கம்மா நேற்றுக் காலமானார். அமரர் சின்னத்தம்பி அவர்களின் மனைவியும், அமரர் வள்ளிப்பிள்ளை மற்றும் பொன்னம்மா, யோகம்மா, தேவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தசாமி, ரவீந்திரன் (கொலண்ட்), அமரர் தவமலர் மற்றும் சுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், மகேஸ்வரி, சுகுமாரி (கொலண்ட்), கருணாகரன், யோகேந்திரன் ஆகியோரின் மாமியும், அம்பிகா - ஜெயசீலன், யசோதா, நவறஞ்சன், மயூரன், யசோதா, சசிக்குமார், அனுஷா (கொலண்ட்), ஜெசிக்கா (கொலண்ட்), பிரசாந்தி, பிரதீபன், கௌரிசங்கர், சவீதா, ரகுணா, ஜெசிந்தன், லக்ஷணன், லக்ஷயா, யதுஷன், யானுஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16-07-2015) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்களாவடி,
மட்டுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(இ)

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.